கோகுலம்


GOKULAM

JANUARY 84 Rs 2





முதல்வர்
எம்.ஜி.ஆர்
பிறந்தநாள்: ஜனவரி 17.





[redacted]

மலர்—1 இதழ்—12 1984 ஜனவரி மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ 2/- **ஆண்டுச் சந்தா ரூ. 24/-**

அருமை சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் மனங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள். அத்துடன், எங்களின் பொங்கல் வாழ்த்துக்களையும் முன் கூட்டியே தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓர் ஆண்டு எவ்வளவு விரைவாக ஓடுகிறது! உங்களின் அன்பாலும், ஆதரவாலும் 'கோகுலம்' நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்று வருவது கண்டு மகிழ்ச்சி அடைகிறோம். எல்லோருக்கும் நன்றி செலுத்துகிறோம்.

இந்த இதழில், 'பிழையில்லாமல் தமிழ் எழுதுவோம்', 'பழைய கதை; புதிய பாடல்' என்ற இரு புது அம்சங்கள் இருக்கின்றன. மேலும் பல புதுமைகளைக் காணப்போகிறீர்கள். உங்களுக்கு ஏற்ற நாடோடிப் பாடல்களைத் தேடிப் பிடித்து அனுப்பச் சொன்னோம். தினந்தோறும் எங்களுக்கு வருகிற பாடல்களைப் பார்க்கும் போது உங்களின் முயற்சியையும், உற்சாகத்தையும் எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை!

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினரின் எண்ணிக்கை ஆறாயிரத்தைத் தாண்டிவிட்டது! போகிற போக்கைப் பார்த்தால், கோ. சி. சங்கத்தில் சேராத தமிழ் தெரிந்த சிறுவர் சிறுமியரே இல்லை என்று கூறும் நிலைமை வந்துவிடுமோ?

'குழந்தைக் குலத்தை மகிழச் செய்யுங்கள்' என்ற தலைப்புடன் வேறொரு பக்கத்திலே ஒரு வேண்டுகோளை வெளியிட்டிருக்கிறோம். அதை உங்கள் பெற்றோரிடமும், தெரிந்த பெரியவர்களிடமும் காட்டுங்கள். வசதியும், மற்றக் குழந்தைகளையும் மகிழ்விக்க வேண்டும் என்ற ஆசையும் உள்ளவர்கள் நிச்சயம் அந்த வேண்டுகோளை ஏற்பார்கள்.

- அழ. வள்ளியப்பா

மின்மினிக் கதைகள்

'தெனாலிராமன் கதைகள்', 'பீர்பால் கதைகள்' நம் நாட்டில் மிகப்பிரபலமாக இருக்கின்றன. நமக்கெல்லாம் மகிழ்ச்சியளித்து வருகின்றன. அவற்றைப் போலவே துருக்கியில் நாசருதீன் ஹாஜா கதைகளும் மிகப் பிரபலமாக வழங்கி வருகின்றன. எல்லோரையும் மகிழ்வித்து வருகின்றன. இங்கு சில கதைகளைப் படிப்போமா?



அம்பு விட்ட கதை

ஒருநாள் நாசருதீன் ஹாஜா துருக்கி மன்னரான தைமூருடன் வில்வீரர்கள் பயிற்சி செய்யும் இடத்திற்குப் போனார். அவர்களைப் பார்த்து ''நானும் நன்றாக அம்பு விடுவேன்'' என்றார் நாசருதீன் ஹாஜா. உடனே தைமூர் வில்லையும் அம்பையும் அவரிடம் கொடுத்து ''எங்கே, உமது திறமையைக் காட்டும், பார்க்கலாம்'' என்றார்.

ஹாஜா வில்லைக் கையில் எடுத்தார். ஓர் அம்பைப் பூட்டி, பறக்க விட்டார். அது எங்கு பாயவேண்டும் என்று 'கூறினார்களோ அதையும் மீறிப் போய்விட்டது. தைமூர் எதுவும் சொல்வதற்கு முன்பு ஹாஜா முந்திக்கொண்டு ''இப்படித்தான் ஒரு நீதிபதி அம்பெய்துவார்'' என்று கூறிச் சமாளித்தார்.

இரண்டாவது அம்பையும் குறி தவற விட்டார் ஹாஜா. அப்போதும், ''இப்படித்தான் ஒரு மேயர் அம்பெய்துவார்'' என்று கூறித் தமது தோல்வியை மறைத்தார்.

மூன்றாவது ஓர் அம்பு விட்டார். காக்கை உட்காரப் பனம் பழம் விழுந்தது போல் அது சரியான இடத்தில் — அதாவது ஒரு காளை மாட்டின் கண்ணில் பாய்ந்தது.

ஹாஜா சொன்னார்: ''இப்படித்தான் நாசருதீன் ஹாஜாவாகிய நான் அம்பு விடுவேன்'' என்று பெருமையோடு கூறினார்.

உடை நனையாத கதை

தைமூர் தம் வீரர்களுடனும், ஹாஜாவுடனும் ஒருநாள் வேட்டைக்குப் போனார். அப்போது மழை வந்துவிட்டது. உடனே வேட்டைக்கு வந்தவர்கள் சத்தம் போட்டுக்கொண்டு ஓடத் தொடங்கினர்.

ஆனால் ஹாஜா ஓடவில்லை. எல்லாரும் மழையில் நனைந்ததால், உடைகள் ஈரமாயின. அவர்கள் மழை நின்றதும் அரண்மனைக்கு நனைந்த உடைகளுடன் திரும்பி வந்தனர். சிறிது நேரத்தில் ஹாஜாவும் திரும்பி வந்தார். அவரது உடைகள் நனையாமலிருந்தன.



தைமூருக்கு ஒரே ஆச்சரியம், ஹாஜா எப்படி ஈரமில்லாத ஆடை அணிந்திருக்கிறார் என்று! ஹாஜா விடம், "எப்படி உங்களை ஆடை மட்டும் நனையவில்லை?" என்று கேட்டார்.

ஹாஜா, "நீங்கள் கொடுத்த அற்புதமான குதிரையினால்தான் நான் நனையவில்லை" என்றார்.

அடுத்தமுறை வேட்டைக்குச் செல்லும்போது ஹாஜாவின் குதிரையைத் தைமூர் எடுத்துக் கொண்டு அவருக்கு வேறு ஒரு குதிரையைக் கொடுத்தார். அன்றும் நல்ல மழை வந்தது. தைமூர் குதிரை மீது ஏறி அரண்மனைக்கு விரைந்தார். அவருடைய உடைகள் நனைந்து விட்டன.



ஆனால், ஹாஜாவோ முன்போலவே நனையாமல் வீடு திரும்பினார். அவரைக் கண்டதும் தைமூர், "ஹாஜா! என்னை நீர் ஏமாளியாக்கி விட்டீர். உங்கள் குதிரை மீது வந்ததால் நான் முற்றிலும் நனைந்து விட்டேன்" என்றார்.

அதற்கு ஹாஜா, "அது உங்களுடைய தவறு. உங்களுக்குக் குதிரையை ஒழுங்காகப் பயன்படுத்தத் தெரியவில்லை. மழை வந்ததும் நீங்கள் உடைகளை அணிந்து கொண்டிருக்கலாமா? பேசாமல் அவிழ்த்துக் குதிரையின் மேல் நாம் அமர்வதற்காகப் போட்டுள்ள தோல் விரிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டாமா? அப்படித்தான் நான் செய்தேன். நீங்களும் அப்படிச் செய்திருந்தால் உங்கள் உடை எப்படி நனையும்?" என்று கேட்டார்.

கழுதையில் சவாரி செய்த கதை


ஒருநாள் நாசருதீன் ஹாஜா தன் மாணவர்களுடன் மசூதிக்குச் சென்றார். எப்போதும் போல் தன கழுதையின் மீது பின்புறமாக, அதாவது கழுதை முன்னே பார்த்து நடக்க, இவர் பின்புறம் திரும்பி அமர்ந்திருந்தார்.

அவருடைய மாணவர்கள் ஹாஜா அப்படி அமருவதற்கான காரணம் என்னவென்று வெகுநாட்களாகக் கேட்க நினைத்தனர். அன்றுதான் தைரியம் வந்தது. கேட்டு விட்டனர்.

அதற்கு ஹாஜா, "இப்படி உட்கார்ந்தால்தான் நீங்கள் என் பின்னால் வருகிறீர்களா என்று பார்த்துக் கொண்டே செல்லலாம். உங்களை முன்னே போகவிட்டு நான் பின்னே வந்தால், 'ஒரு வாத்தியார், மாணவர் வழியைப் பின்பற்றினார்' என்றாகி விடும் அல்லவா?" என்றார்.

போர்வை இழந்த கதை

குளிர்காலத்தில் ஒருநாள் நடு இரவு நேரத்தில் ஹாஜாவும், அவர் மனைவியும் தூங்கிக் கொண்டிருந்தனர். அப்போது தெருவில் யாரோ சண்டை போட்டுக் கொள்ளும் சத்தம் கேட்டது. இருவரும் விழித்துக்கொண்டார்கள். ஹாஜா ஜன்னல் வழியாகப் பார்த்தார். தெருவில் இரண்டு பேர் ஏதற்கோ சண்டை போட்டுக்கொண்டனர். ஹாஜாவின் மனைவி, "அவர்கள் ஏதற்காகச் சண்டை போடுகிறார்கள் என்று போய்ப் பார்த்து வாருங்கள்" என்றாள்.



ஹாஜா, ''அவர்கள் சண்டையை விலக்குவது என் வேலையல்ல'' என்று கூறிவிட்டுப் போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டார். அவர்கள் சத்தம் மேலும் பெரிதாகியது. ஹாஜாவின் மனைவி மறுபடியும் அவரை எழுப்பி, ''எதற்காகச் சண்டை போடுகிறார்கள் என்று போய்ப் பார்த்து வாருங்களேன்.'' என்றாள்.

ஹாஜா போர்வையைத் தோளில் எடுத்துப் போட்டுக் கொண்டு வெளியில் போனார். அவர்களை நெருங்கினார். அவர்கள் எதற்காகச் சண்டை போடுகிறார்கள் என அவர் அறியும் முன்பே அவர்கள் அவரிடம் இருந்த போர்வையைப் பறித்துக் கொண்டு அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டனர்.

ஹாஜா வீட்டிற்குத் திரும்பினார். அவர் மனைவி, ''அவர்களுக்குள் என்ன சண்டை? தீர்ந்து விட்டதா?'' என்று கேட்டாள்.

ஹாஜா, ''ஓ! தீர்ந்து விட்டதே! என் போர்வைக்காகத்தான் சண்டை போட்டார்கள் போல் தெரிகிறது. நான் போனதும், என் போர்வையைப் பறித்துக் கொண்டு ஓடி விட்டார்கள். சண்டையும் தீர்ந்தது'' என்றார்.

பரிசு கொடுத்த கதை


மாபெரும் வெற்றிக்குப் பின் நாடு திரும்பிய தைமூரைப் பார்க்கப் பலர் சென்றனர். ஹாஜாவும் தன் அரசரும் நண்பருமான தைமூரைப் பார்க்கச் சென்றார். வெறும் கையுடன் போக வேண்டாம் என்று கொத்துக் கொத்தாக பீட்ரூட்டை எடுத்துச் சென்றார். வழியில் கண்ட ஒரு பெரியவர் ''பீட்ரூட்டை ஏன் கொண்டு செல்கிறாய்? அத்திப் பழங்களைக் கொண்டு போவதுதான் நல்லது'' என்றார்.

ஹாஜாவும் பீட்ரூட்டை வைத்து விட்டு அத்திப் பழங்களையே எடுத்துச் சென்றார். அரண்மனையில் அரசரைப் பார்க்கப் பலர் வந்திருந்தனர். ஹாஜா தான் கொண்டு போன அத்திப்பழங்களைக் கொடுத்ததும் அரசருக்குக் கோபம் வந்துவிட்டது. ஏன் என்றால், வந்திருப்பவர்கள் தங்கத்திலும், வெள்ளியிலும் ஆன பொருள்களைப் பரிசாகக் கொடுக்க, இவர் என்ன அத்திப் பழத்தைக் கொண்டு வந்து நீட்டுகிறாரே என்று! உடனே மன்னர் தம் வேலைக்காரரில் ஒருவரை அழைத்து, ''இவற்றை ஹாஜாவின் மேல் வீசுங்கள்'' என்றார். அவர்கள் எறிந்த அத்திப்பழங்கள் ஹாஜாவின் மீது விழுந்தன. ஹாஜா, ''அல்லா, உன்னை வாழ்த்துகிறேன்'' என்றார்.

இதைக்கேட்ட தைமூர் பழம் எறிவதை நிறுத்தச் சொல்லிவிட்டு, ''ஏன் அல்லாவை வாழ்த்தினீர்?'' என்றார்.

ஹாஜா, ''நான் பீட்ரூட் கொண்டு வருவதாக இருந்தேன். ஆனால், நல்ல வேளை; பீட்ரூட் கொண்டு வராமல் அத்திப்பழம் கொண்டு வந்ததால் இலேசான அடியுடன் பிழைத்தேன்'' என்றார்.

தொகுப்பு: தேவி.




இந்த இதழ் எழுத்தாளர்கள்



ஜ.ர. வசந்தன்



தணிகை
உலகநாதன்




கே. கண்ணுச்சாமி



தில்லையாடி ராஜா



ராதா கிருஷ்ண
மூர்த்தி



இளசை எஸ். சுந்தரம்



புல[illegible]
நடராஜன்

அட்டை
வண்ணப்
படம் : ராஜ்



● வண்ணப் படங்கள் இல்லாத குறையை மூதறிஞர் இராஜாஜி, இலக்கியத் தலைவர் கல்கி ஆகியோரது படங்கள் போக்கி விட்டன!

—விஜயா ரங்கநாதன், டோம்பிவிலி

● ஏன் சார், படக்கதைக்குப் பக்கத்தை அதிகரித்தால் என்ன?

வி. ரமேஷ் (2586), சென்னை—18.

● மின்மினிக் கதைகள் சுருக்கமாக, சிறியவையாக இருந்தாலும், அவை மிகப் பெரிய கருத்துக்களையும் போதனைகளையும் விளக்குகின்றன.

—ஏ. எம். முஹம்மது நிஜாமுதீன், நீடூர்.

● கோகுலத்தில் எதை முதலில் படிப்பது என்றே புரியவில்லை. அனைத்தும் கற்கண்டாய் இனிக்கின்றனவே!

—இரா. கல்யாண் (161) கோவை.

● வீரர் பகத்சிங்கைப் பற்றிய விவரங்களைக் கோகுலம் மூலமே அறிந்தேன். இவை எங்கள் வாழ்வுக்கு வழிகாட்டிகள்; நெறி காட்டிகள்.

—ஜி. சந்திரமௌளீசுவரன் (49), நெல்லை-1

● 'ஏமாந்த பூதம்' அருமையான கதை. லட்சுமணனின் புத்திசாலித்தனத்தைப் பாராட்டாமல் இருக்க முடியுமா, என்ன?

—பிரியதர்ஷினி, பத்மா, சீனு, கண்ணன், கிருஷ்ணகிரி.

● 'கடவுளைக் கண்டேன்' நெடுங்கதையைப் படிப்பதற்கு நான் என்ன தவம் செய்தேனோ?

—என். சந்திரன் (4785), பாவட்டக்குடி.

● 'வெற்றிவேல்! வீரவேல்!' சித்திரக்கதை, திரைப்படம் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தி வருகிறது!

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

● என் ஆசையெல்லாம் 'கோகுலம்' மாதத்திற்கு இருமுறை வராதா என்பதுதான்.

—த. பாபு (1207), காரைக்குடி.

● ஒவ்வொரு முழுநீளக் கதையையும் ஒரு தனிப் புத்தகமாகப் போட்டாலே இரண்டு ரூபாய் விலை கொடுத்து வாங்குவோம். முழு நீளக் கதையுடன், உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதைகளும் மற்றும் நிறைய விஷயங்களும், ஏராளமான படங்களுடன், இரண்டு ரூபாய்க்குக் கிடைக்கின்றனவே!

—எஸ். பத்மினி, திருச்சூர்

● நீச்சல் போட்டியைப் பற்றி எனக்குத் தெரிந்து கொள்ள உதவிய குண்டுமணி அவர்களுக்கு நன்றி.

—சி. ரங்கபிரசாத் கல்யாணி, வேலூர்.

● நெய்க் காராபூந்தி சித்திரக்கதையும் அதற்கான ஜெயந்தியின் சித்திரங்களும் என்னை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்து விட்டன.

—கே. ராகவன், சிவகாசி.

● கோகுலத்தில் பிரசுரமாகும் ஒவ்வொன்றுமே வாசகர்களுக்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளன.

—ந. காமராஜ்; ஆமதாபாத்—19.

● 'இளமையில் இவர்க'ளில்தான் எத்தனை எத்தனை சுவையான நிகழ்ச்சிகள்! படிக்கப் படிக்க ஆர்வமாக இருந்தது. தொடருங்கள்.

—ஐயாறு எஸ். வாசுதேவன், சென்னை—14.

● எங்களை இப்படி மோசம் செய்து விட்டீர்களே! 'குப்புசாமி, அப்புசாமி'யை நிறுத்தலாமா?

—ஸ்ரீவித்யா, ராம்குமார், சென்னை—33.

● 'கேள்வி நேரம்' பயனுள்ள பகுதி. அதை எக்காரணம் கொண்டும் நிறுத்தாதீர்கள்.

—சி. நரசிம்மன், வேலூர்—2.

● டிசம்பர் இதழில் வண்ணப்படங்கள் இல்லையே என்று வருத்தப்படவில்லை. எங்களுக்கு வேண்டியவை நல்ல கதைகளே. அருமையான கதைகளைத்தான் தருகிறீர்களே!

—எஸ். அருணாசலம், திருவாரூர்.

● மின்மினிக் கதைகள், சின்னஞ் கதை, உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதை, வெற்றிவேல், வீரவேல், விஞ்ஞான விளையாட்டு, கேள்விநேரம், அப்புசாமி, குப்புசாமி — எல்லாவற்றையும் தொடர்ந்து வெளியிடுங்கள்.

—அ. கலைச்செல்வன் (2462), திண்டுக்கல்.

● 'அந்த மூன்று பேர்' நேரம் காலம் பாராமல் சேவை செய்யும் போலீஸ்காரரின் கடமை உணர்ச்சியையும், அவருடைய மகனின் மதி நுட்பத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

—கு. ப. இரகுநாதன், பூவிருந்தவல்லி.

● என் போன்ற சிறுவர்களின் கற்பனைத் திறமையை வளர்க்கிறது 'பிருந்தாவனம்'. டிசம்பர் இதழ் பிருந்தாவனம் மிக அருமை.

—ஜெ. முத்துசாமி (240), கங்கவல்லி.

பண்ணையார் வீட்டு சேவல்



எம். ஆர். ராஜன்

அதோ அக்கம் பக்கக் கிராமத்திலிருந்து நாலா பக்கமும் செம்மண் ரோடுகள் வந்து சேருகின்றனவே! அந்தக் கூட்டு ரோடு முனையில் உள்ள தூங்குமூஞ்சி மரத்தடி தான் சிங்காரம் தொழில் நடத்தும் இடம். அவன் பக்கத்தில் மரத்தடியில் சாய்த்தாற் போல வைத்திருக்கிறானே தகரப் பெட்டி அதுதான் அவன் தொழிலின் மூலதனம்.

சின்னான் மலை ஓரமாய்ப் பிய்ந்த குடிசை ஒன்றில் குடியிருந்தான். அவனுக்கு உறவு என்று சொல்ல யாருமே கிடையாது... கூடவே வருகிறதே ஒரு வெள்ளையும் கறுப்பும் கலந்த நாய், அது ஒன்றுதான் அவனுக்குத் துணை. அவனுக்குத் தெரிந்த ஒரே தொழில் செருப்புத் தைப்பது தான்.

விடிகாலையில் கூட்டு ரோடுக்கு வந்து விடுவான் தொழிலைக் கவனிக்க. இரவு குடிசைக்குத் திரும்ப எட்டு மணியாகும். கடைசி பஸ்ஸைப் பார்த்த பின்தான் வீடு திரும்புவான். தினமும் இரண்டு மூன்று ரூபாய் கிடைக்கும். கிடைக்கும் பணத்தில் அன்றாடம், டீ, பொறை சாப்பிடுவான். இது அவனுக்குப் பகல் உணவு. இரவு குடிசை திரும்பியதும் கொஞ்சம் சோறு செய்து சாப்பிடுவான். டீ, பொறை சாப்பாட்டில் சிறிது நாய்க்கும் போடுவான். அது அவன் கூடவே போகும். கூட்டு ரோடில் மரத்தடியில் முன்னங்காலைத் தரை மீது ஊன்றிக் கொண்டு ரோட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும். சில நேரம் படுத்துவிடும். குடிசைக்கு வந்ததும் இரவு அவன் போடும் தண்ணீர்ச்சோற்றைத் தின்றுவிட்டு, அவன் காலடியில் படுக்கும்.

''வெள்ளை...!'' என்று அவன் கூப்பிடுவான். எங்கிருந்தாலும் அது ஓடிவந்துவிடும்!

இப்படி இருக்கையில் ஒருநாள் சிங்காரத்துக்கு ஒரு சோதனை ஏற்பட்டது. அந்த வெள்ளை அந்த ஊர்ச் சின்னப் பண்ணை மாயாண்டி வீட்டுச் சேவல் ஒன்றைக் கடித்து விட்டது. சேவல் செத்துவிட்டது. இதைக் கண்ணெதிரே பார்த்து விட்டார் சின்னப் பண்ணை மாயாண்டி...

சிங்காரத்தின் மீது பஞ்சாயத்தில் தாவா செய்தார். பஞ்சாயத்துக் காரர்கள் விசாரித்தார்கள். நாய்க்குச் சொந்தக்காரன் சிங்காரம். அதனால் சிங்காரம், இறந்து போன சேவலுக்குண்டான கிரயமும் அதனால் எதிர்காலத்தில் அவனுக்கு ஏற்படப்போகும் நஷ்டமும் ஆகக் கணக்கிட்டு, இருநூறு ரூபாய் தர வேண்டும் என்பது சின்னப் பண்ணை மாயாண்டியின் வாதம்.

''ஒரு வாயில்லாத ஜீவனுக்கு நான் மிஞ்சற தண்ணிச் சோத்திலே கொஞ்சம் போடுறேன். அது விசுவாசமாயிருக்குது. அந்த விசுவாசத்தை என்

கிட்டே காட்டிக்கிட்டு என்னையே சுத்திச் சுத்தி வருது. என்னோடே அது இருக்கிறதாலே அது என் உடைமை ஆகிவிடுமா? என்கிட்டே பணம் கேட்கிறது நியாயமா?'' — இது சிங்காரத்தின் வாதம்.

வெள்ளை தன் சேவலைக் கடித்துக் குதறியதைப் பண்ணையார் மாயாண்டியே பார்த்திருக்கிறார். இதற்கு வேறு சாட்சியம் தேவையில்லை. இதுகுறித்துச் சின்னானின் தீர்ப்புக்கும் வாதத்துக்கும் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இரண்டு பேருடைய வாதத்தையும் கேட்ட சின்னான் பண்ணையாருக்கும்— பஞ்சாயத்துக்கும் ஓர் எதிர்க்கேள்வியைப் போட்டான்.

''பண்ணையார் வீட்டில் எத்தனை கோழிகள் — சேவல்கள் உள்ளன? அவைகளுக்குத் தீவனம் எங்கிருந்து பண்ணையார் வாங்குகிறார்? மாதம் இதுவரையில் அவர் செலவிடும் தொகை என்ன?'' என்று கேட்டான் சின்னான்.

பண்ணையார் தன் வீட்டில் மூன்று பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் உள்ளதென்றும், இவைகளுக்காகத் தனியாகத் தீவனம் எதுவும் வாங்குவது இல்லை என்றும் சொன்னார்.

''அப்படியானால் கோழிகள் தானே திரிந்து மேய்ந்து வளர்ந்து வருகின்றன. எனவே, இவராகத் தீனி போட்டு வளர்க்காத காரணத்தால் இச் சேவல் இவருடையதாக ஆகாது. எனவே சேவலுக்கான நஷ்டஈட்டுத் தொகையைச் சிங்காரம் தரத் தேவையில்லை'' என்று வாதாடினான் சின்னான்.

பண்ணையாருக்குக் கோபம் கோபமாக வந்தது. ''நான் தீவனம் போடாததாலேயே சேவல் என்னுடையதல்ல என்று எப்படிச்சொல்ல முடியும்? நான் பட்டணம் போய் ஐம்பது ரூபாய் விலை கொடுத்து வாங்கி வந்த சேவல். எனவே சேவலுக்கு நான்தான் சொந்தக்காரன். எனவே நஷ்ட ஈடு தரப்பட வேண்டும்'' — பண்ணையார் வாதாடினார்.

''பட்டணம் போய்ப் பணம்போட்டு வாங்கியதால்தானே சேவல் உங்களுக்குச் சொந்தம் என்கிறீர்கள்? அப்படியானால் பணம் போட்டு வாங்காத ஏதோ ஒரு தெரு நாய்க்குத்தான் சாப்பிட்டு மிருந்த 'தண்ணி'ச் சோற்றைப் போடுவதால் அதற்குச் சிங்காரம் எப்படிச் சொந்தக்காரனாகி விட முடியும்... எனவே சிங்காரம் அபராதமோ... நஷ்ட ஈடோ தரத் தேவையில்லை...'' என்று அடித்துக் கூறினான் சின்னான்.

பண்ணையாரும் பஞ்சாயத்தாரும், திருதிருவென விழித்தார்கள்.

நாட்டாண்மைக்காரர் உள்ளூர மகிழ்ந்தார். சிங்காரத்தின் முகத்தில் சிரிப்பு தவழ்ந்தது. அப்புறம் வழக்குத் தள்ளுபடியாயிற்று!



விஞ்ஞான விளையாட்டு

ஆர்.பி. சாரதி

நம் கண் நம்மை ஏமாற்றினால்


ஏதாவது ஒன்றை உண்மையென உறுதி செய்ய, ''நான் என் கண்ணால் பார்த்தேன்!'' என்று அடித்துச் சொல்லுவது வழக்கம்

ஆனால் நம் கண்ணே நம்மை ஏமாற்றினால்?

(1) ஓட்டை கண்ணிலா, கையிலா?

ஓவியத்தாள் அல்லது கார்டுபோர்டு ஒன்றை எடுத்துக் கொள்வோம். அது 20 செ. மீ. பக்க அளவு உள்ளதாக இருந்தால் போதும். அதை 2 செ. மீ. விட்டம் உள்ள குழல் வடிவில் சுருட்டிக் கொண்டு ஓரங்களை ஒளி புகாமல், பிரியாமல் ஒட்டும் பிளாஸ்டரால் ஒட்டி விடுவோம். வலது கண்ணை முதலிலேயே இலேசாக மூடிக் கொண்டு விடுவோம். நம் காகிதக் குழாயின் ஒரு புறத்தை மூடிய வலது கண் மீது பொருத்திக் கொள்வோம். குழாயைப் பிடித்திருப்பது இடக்கரமா?

சரி, வலக்கரத்தை மெல்ல உயர்த்தி, உள்ளங்கை காகிதக் குழாயின் வெளி முனையைத் தொடுவது போலச் சற்று வேகமாகக் கொண்டு வந்து, இடப்புறம் வீசுவது போல் அசைப்போமா? உள்ளங்கை குழாயின் மறுபுறத்தை மூடிச் செய்வது போலத் தொட்டுச் செல்லும் போது கண்ணைத் திறந்து பார்த்தால் அசையும் உள்ளங்கையில் பள்ளம்போல ஓட்டை போலத் தோன்றும்!



இந்த விளையாட்டு சிறுவர்களிடமே பலிக்கும்! ஏனென்றால் 'நம் கையில் நிச்சயம் ஓட்டை விழப் போவதில்லை!' என்று உறுதியாக உள்ள வயது வந்தவர்களிடம் பலிக்காது!

'ஏதோ இருள் வட்டம் போலத் தானிருக்கிறது! எங்கே ஓட்டை?' என்று கேலி செய்வார்கள்.

கன பரிமாணக் காட்சி!


உங்கள் வகுப்பில் பாடங் கற்பிக்கும் ஆசிரியர்கள் சில சமயங்களில் படங்களைக் கொண்டு பாடங்களை விளக்குவார், சில ஆசிரியர்கள் மாதிரிகள்... உருவங்களையும் காட்டலாம். படங்களில் உள்ள ஒரு குறை என்ன தெரியுமா?

படங்களுக்கு நீள, அகல அளவுகள் மட்டுமே உண்டு. கனபரிமாணம் கிடையாது!

படங்களிலேயே கனபரிமாணம் தோன்றுவது போல் சிலர் வரையலாம். ஆனால் நமக்குத் தெரியாதா காகிதப் படத்துக்கு ஏது கன அளவு? தெரிந்தும் ஏமாறுகிறோம்.

இதோ ஒரு வழி!

படங்களிலும் கனபரிமாணக் காட்சி காண! அஞ்சலட்டை போல் ஓர் அட்டையை எடுத்துக் கொள். 1செ மீ ×



5 செ. மீ. குறுக்கும், நெடுக்குமாகக் கூட்டல் + குறி அல்லது சிலுவை போல நடுவில் அமையும்படி(வைத்துக் கொண்டு), பிற பகுதிகளை வெட்டி எறிந்துவிடு. மறுபடியும் கூட்டல் அடையாள மத்தியில் அமையும் 1×1 செ. மீ. சதுரத்தை மிக ஜாக்கிரதையாக, ஓரம் விட்டு வெட்டிக் கண் வழியே பார்க்கச் சிறு சதுரப் பலகணி அமைத்துக் கொள். அந்தக் கூட்டல் வடிவ அட்டையை மேசையின் மையத்தில் பலகை இணைப்பு ஓட்டையில் செருகிவிடு. செருகப்பட்ட அந்த அட்டையின் மறுபக்கத்தில் மேசை மீது கட்டடங்களின் படத்தையோ, புகைப்படத்தையோ வைத்து விடு.

இப்போது மேசையின் முன் பக்கத்தில் இருந்து கொண்டு, கூட்டல் அட்டையின் சதுரப் பலகணி வழியாகப் படங்களைப் பார். (மூன்றாவது) கன அளவும் கண்ணுக்குத் தெரியும்.

புகழ்பெற்ற தாஜ்மகால், கடல் மல்லைக் கோபுரம் போன்ற படங்களை வைத்துப் பாருங்களேன்.

நாமே தயாரித்த கூட்டல் குறிப் பலகணி நம் கண்ணையே ஏமாற்றுகிறது!

ஊசித் துவாரக் காமிரா!

மூடியுடன் கூடிய ஓர் அட்டைப் பெட்டி கிடைக்குமா? அதன் பக்க ஓரங்களை ஒளி உள்ளே ஊடுருவ முடியாமல் அழகிய வண்ணக் காகிதங்களைக் கத்தரித்து அளவாக ஒட்டிவிடு.

படத்தில் காட்டியபடி பெட்டியின் ஒரு பக்கத்தின் மையப்புள்ளியைக் கண்டுபிடித்து ஒரு சிறு ஓட்டையிடு. புத்தகம் தைக்கும் ஊசியால் ஓட்டையிட்டாலும் போதும். ஓட்டையிட்ட பக்கத்தின் நேர் எதிர்ப் பாகத்தில் 6 செ. மீ. × 4 செ. மீ. அளவில் ஒரு செவ்வகத் துண்டை வெட்டி எறிந்து விடு. அதற்குப் பதிலாகக் கண்ணாடி போன்ற ட்ரேஸ் காகிதத்தை அழுத்தமாக அப்பக்கத்தில் ஒட்டி விடு. ஓரங்கள் இறுக்கமாய், பிரியாது ஒட்ட செலுஃபோன் டேப் போன்ற ஒட்டிகளைப் பயன்படுத்தலாம்.

ஊசித் துவார காமிரா தயார்!

மெழுகுவர்த்தி ஒன்றை ஏற்றிக் கொண்டு, அதன் சுடர் ஊசித் துவாரத்தில் ஒளி பாயும் வண்ணம், சற்றுத் தூரத்தில் வை!


ஊசித் துவாரம் வழியாகப் பாயும் ஒளி நாம் பொருத்திய ட்ரேஸ் காகிதத்தில் எப்படி விழுகிறது.

நேராகவா?

இல்லை... இல்லை!

மெழுகுவர்த்தியே தலைகீழாக இருப்பது போலத் தோன்றும்! மெழுகுவர்த்தி கூட வேண்டாம்.... வெளி வெளிச்சத்திலே துவாரத்துக்கெதிரே இருக்கும் எந்தப் பொருளும் தலைகீழாகவே தெரியும். வேறுபொருள் வைக்காமல் சுவர் சன்னல் போன்றவை கூடத் தலைகீழாகத் தெரிவதைப் பார்க்கலாம்.

பிளாஸ்டிக் அல்லது மண் பொம்மைகளை வைத்துக் கூடப் பார்க்கலாமே! ஒளி அந்தப் பொம்மையில் பட்டுத் துவாரம் வழியாகப் பாய வேண்டும்... அவ்வளவுதான்! துவாரம் ஊசிமுனையாக இல்லாமல் பெரிதாகி விட்டால் என்ன ஆகும்? செய்து பார்த்தால் தெரிகிறது!







கேள்வி-நேரம்

கேள்வி கேட்பவர்: பி. பத்மா

பங்கு கொள்வோர்: கே. வரதராஜன், பமீலா நாராயணன், ஆர். பிரபாகரன்.

பத்மா: கப்பல் ஓட்டிய தமிழர் சிதம்பரனார் பிறந்த அதே மாதத்தில், அதே தேதியில், நம் நாட்டு ஜனாதிபதியாக இருந்த ஒருவரும் பிறந்தார். அவர் யார்?

பமீலா: ராஜேந்திர பிரசாத்.

பத்மா: இல்லை. ராஜேந்திர பிரசாத். பிறந்தது டிசம்பர் மாதம் 3—ஆம் தேதி. இவர்கள் பிறந்தது செப்டம்பர் 5—ஆம் தேதி. ஒரு குறிப்பு தருகிறேன்.. அவரும் தென்னிந்தியர்தான்!

வரதராஜன்: சஞ்சீவிரெட்டி.

பத்மா: அவரும் இல்லை.

பிரபாகரன்: ம்... ம்... தெரிந்து விட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன். அவரது பிறந்த நாளைத் தானே ஆசிரியர் தினமாகக் கொண்டாடுகிறோம்!

பத்மா: ஆம், சரியாகச் சொல்லி விட்டாய்... கர்நாடக மாநிலத்திற்கு முன்பு என்ன பெயர் இருந்தது?

வரத: மைசூர் மாநிலம்.

பத்மா: ரொம்ப சரி. 1973—ல்தான், .கர்நாடகம் என்று பெயர் மாற்றப்பட்டது. 'பாலே நடனம்' என்று சொல்கிறார்களே, அது என்ன என்று சிறிது விளக்கமாகக் கூறமுடியுமா?

பமீலா: நான் கூறுகிறேன். ரஷ்யக் குழு ஒன்று சென்னைக்கு வந்து பாலே நடனம் நடத்தியது. அதில் யாருமே பாடவும் இல்லை; பேசவும் இல்லை. பின்னணி இசைக்குத் தக்கபடி ஆடினார்கள். அபிநயம் மூலமாகவே .ஒரு கதையைத் தெரிவித்தார்கள்.

பத்மா: அடடே, மிகவும் நன்றாகக்கூறி விட்டாயே! அபிநயம் மூலமே ஒரு கதையை உணர்த்தும் ஒருவகை மேல்நாட்டு நடனமே 'பாலே' என்பது... இந்தியாவில் வெளியான முதல் செய்தித் தாள் எது?

வரத: வங்காள கெஜெட்.

பத்மா: கரெக்ட். 1780—ல் அது கல்கத்தாவிலிருந்து வெளி வந்தது. பர்மா நாட்டின் தலைநகரம் எது?

பிரபா: ரங்கூன்.


பத்மா: சரியான விடை. நம் தேச விடுதலைப் போராட்டத்தில் முதல் முதலாகச் சிறை சென்ற பெண்மணி யார்?

பமீலா: கஸ்தூரிபா.

பத்மா: இல்லை.

வரத: சரோஜினி தேவி.

பத்மா: ஆம், கவியரசி சரோஜினி தேவிதான் 1921—ஆம் ஆண்டில் சிறை சென்றார். ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தலைநகரமாக இப்போது வாஷிங்டன் இருக்கிறது. இதற்கு முந்தி எது தலைநகரமாக இருந்தது!
பிரபா: நியூயார்க்.
பத்மா: சரியாகச் சொன்னாய். அமெரிக்கா விடுதலை பெற்று 1776—லிருந்து 1800—ஆம் ஆண்டு வரை நியூயார்க் தான் தலைநகரமாயிருந்தது... தரைப்படை, கடற்படை, விமானப்படை ஆகிய ஒவ்வொன்றுக்கும் தனியாக ஒரு கொடி



உண்டு. இதோ இங்குள்ள கொடி, நம் தேசத்தின் எந்தப் படைக்கு உரிய கொடி என்று தெரியுமா?
வரத: கப்பற்படைக் கொடி.
பத்மா: தவறு.
பமீலா: தரைப்படைக் கொடி.
பத்மா: சரிதான். இருந்தாலும், மூன்றிலே ஒன்றைச் சொல்லியாயிற்று. மீதமுள்ள இரண்டிலே ஒன்றைச் சொல்லி வைப்போமே என்று சொல்லக் கூடாது. போகட்டும். மகாத்மா காந்தி பிறந்த போர் பந்தர் என்னும் ஊர் எந்த மாநிலத்தில் இருக்கிறது?
வரத: குஜராத்தில்.
பத்மா: ரொம்ப சரி, டென்னிஸ் எந்த நாட்டில் தோன்றிய விளையாட்டு?
பிரபா: இங்கிலாந்தில்.
பத்மா: ஆம். ஆங்கிலேயர் நம் நாட்டுக்கு வந்த பிறகே, இங்கும் இந்த விளையாட்டு பரவியது. 'தமிழ்ப் பல்கலைக் கழகம்' எந்த ஊரில் இருக்கிறது.
வரத: தஞ்சாவூரில்.
பத்மா: சரி, உலகத்திலே மிகவும் உயரத்தில் இருக்கின்ற நாடு எது?
வரத: சிம்லா.
பத்மா: தவறு. நான் கேட்டது.எந்த நாடு என்று?
பமீலா: திபேத்து.
பத்மா: கரெக்ட். அதனால்தான் அதை 'உலகத்தின் கூரை' என்கிறார்கள். 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்று பாடியவர் யார்?
வரத: அப்பர்.
பிரபா: இல்லை, திருநாவுக்கரசர்.
பத்மா: இருவர் கூறியதும் சரியே. திருநாவுக்கரசரைத் தான் அப்பர் என்றும் அழைப்பார்கள்... ஷேக்ஸ்பியர் எத்தனை நாடகங்கள் எழுதியிருக்கிறார், தெரியுமா?
எல்லாரும்: (மௌனம்).
பத்மா: 37 நாடகங்கள். மங்கள முடிவு நாடகங்கள், சோக முடிவு நாடகங்கள், சரித்திர நாடகங்கள் என்று மூன்று வகையில் எழுதியிருக்கிறார்... காஷ்மீர் நகரம் எந்த ஆற்றங்கரையில் இருக்கிறது?
பமீலா: ஜீலம் நதிக் கரையில்.
பத்மா: சரியான விடை. ஆஸ்திரேலியாவின் தேசியப் பறவை எது?
வரத: கழுகு.
பத்மா: தவறு.
பிரபா: நினைவில் இருக்கிறது. வர மாட்டேன் என்கிறது. படத்தில் கூட அதைப் பார்த்திருக்கிறேன். அது நெருப்புக் கோழி மாதிரி உயரமாயிருக்கும். பறக்கத் தெரியாத பறவை... அது பெயர். இ. மு.... இல்லை, இல்லை. ஈமு.
பத்மா: ம்... அதன் பெயர் 'ஈமு' தான் 6 அடி உயரம் வளரும் ஒவ்வொரு காலிலும் 3 விரல்கள் இருக்கும்... சரி, அடிக்கடி நாம் பார்க்கிறோம், பழகுகிறோமே நாய், அதற்கு முன் காலில் எத்தனை விரல்கள்? பின்காலில் எத்தனை விரல்கள்?
பமீலா: இரண்டிலுமே ஐந்து விரல்கள் தான்.
பத்மா: இல்லை. முன் காலில் 5 விரல்களும் பின் காலில் 4 விரல்களும் இருக்கும். பின் காலில் 5 விரல்கள் இருப்பது அபூர்வமே... இந்தியாவில் மிகப் பெரிய இலக்கியப் பரிசாக ஞான பீடப் பரிசு ஒவ்வோராண்டும் வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு ஹிந்திப் பெண் கவிஞர் மகாதேவி வர்மா என்பவருக்குக் கிடைத்தது. நம் தமிழ் நாட்டில் இந்தப் பரிசைப் பெற்றவர் யார்?
வரத: அகிலன்.
பத்மா: சரி, இந்தப் பரிசை ஏற்படுத்தியவர்கள் யார் என்று தெரியுமா?

எல்லாரும்: (மௌனம்).

பத்மா: சாந்தி பிரசாத் ஜெயின், அவரது மனைவி ரமாஜெயின், இருவரும் ஏற்படுத்தினர். இப்போது அந்த இருவரும் உயிருடன் இல்லை... தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்களுக்கு, அவரது பெற்றோர் வைத்த பெயர் என்ன?

வரத: வேங்கடராமன்.

பத்மா: ஆமாம். பாட்டனார் பெயரையே பேரனுக்கு வைத்தார்கள். மாமனார் பெயரை மருமகள் சொல்லக் கூடாது என்று நினைத்த அவரது தாயார், அவரை சாமிநாதன் என்று அழைத்தார்கள். அந்தப் பெயரே நிலைத்து விட்டது.



இதோ இந்தப் படத்திலிருக்கும் பறவையின் பெயர் என்ன, தெரியுமா?

பிரபா: நீர் வாத்து.

பத்மா: இல்லை.

பமீலா: எனக்குத் தெரியும். பாம்புத் தாரா.

பத்மா: சரியான விடை. இது தண்ணீரில் நீந்தும் போது இதன் தலையும் கழுத்தும் மட்டுமே வெளியில் தெரியும். தூரத்திலிருந்து பார்த்தால் பாம்பு நீந்துவது போல் இருக்கும். துருவ நட்சத்திரத்துக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அது என்ன?

வரத: எல்லா நட்சத்திரங்களும் நகரும். துருவ நட்சத்திரம் மட்டும் நகராமலே இருக்கும்.

பிரபா: இல்லை. நான் சொல்கிறேன். துருவ நட்சத்திரம் சூரியனைப்போல் 4000 மடங்கு ஒளி உடையது என்று நான் படித்திருக்கிறேன்.

பத்மா: இருவர் சொன்னதும் சரியே. துருவ நட்சத்திரம் ஒரே இடத்தில் இருப்பதால், அதை வைத்தே மாலுமிகள் அக்காலத்தில் திசையைத் தெரிந்து கொள்வார்கள்.

இப்போது தான் திசை காட்டும் கருவி வந்து விட்டதே! சூரியனைப் போல் 4000 மடங்கு ஒளி இருந்தாலும், அது சூரியனை விட வெகு தூரத்தில் இருப்பதால், ஒளி நமக்கு அதிகமாகத் தெரிவதில்லை... தனக்கு உதவி செய்தவருக்கே துரோகம் செய்பவனைப் 'புல்லுருவி' என்று திட்டுகிறீர்களே, புல்லுருவி என்றால் என்ன?

பமீலா: அது ஒரு செடி.

பத்மா: அது சரி. அதன் குணம் என்ன?

எல்லாரும்: (மௌனம்).

பத்மா: இந்தச் செடி ஏதேனும் ஒரு மரக்கிளையில் வேரை ஊன்றிக் கொண்டு, அங்கேயே வளரும். அதிலிருந்து பல பக்கவேர்கள் மரத்துக்குள்ளே செல்லும். அந்த மரத்திலுள்ள சத்துப் பொருள்களை இந்தச் செடி உறிஞ்சி எடுத்துக் கொண்டு அந்த மரத்திற்கே கெடுதல் செய்யும். வளர இடம் கொடுத்த மரத்திற்கே கேடு செய்யும். அதனால் தான் உதவியவருக்கே துரோகம் செய்பவனைப் 'புல்லுருவி' என்கிறார்கள்... மதுரையைத் தலைநகராக வைத்து அரசாண்டு புகழ் பெற்றார் ஓர் அரசி. அவர் பெயர் தெரியுமா?

பமீலா: மங்கம்மாள்.

பத்மா: அடே, பமீலா சரியாகச் சொல்லி விட்டாளே! இரண்டாம் சொக்கநாதர் என்ற தன் பேரனுக்குக் காப்பாளராக இருந்து 17 ஆண்டுகள் திறமையாக ஆண்டவர் மங்கம்மாள்... கரும்பு அதிகமாக விளையும் நாடு எது?

பிரபா: நம் இந்தியாதான்.

பத்மா: கரெக்ட். கியூபா, பிரேசில், ஹவாய், ஜாவா ஆகிய இடங்களிலும் கரும்பு விளைகிறது. இருந்தாலும் நம் நாட்டில் தான் அதிகம்... காஞ்சிபுரத்தில் நிறைய கோயில்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். மொத்தம் எத்தனை கோயில்கள் என்று தெரியுமா?

வரத: 75.

பத்மா: என்ன, 50 கோயில்களைக் குறைத்துச் சொல்கிறாயே! மொத்தம் 125 கோயில்கள் அங்கு இருக்கின்றன. சரி, இப்போது ஒரு விடுகதை. விடுவியுங்கள்; பார்க்கலாம்.

காகிதத்தைக்கண்டால்
கண்ணீர் விடுவான்.
முக்காடு போட்டால்
சொக்காயில் தொங்குவான்.

பமீலா: பேனா.

பத்மா: என்ன பேனா? சட்டைப் பேனாவா?

பமீல: இல்லை.' பவுண்டன் பேனா.

பத்மா: சரி, சென்னைத் துறைமுகத்தில் வேலை பார்த்த ஒருவர், உலகம் போற்றும் கணித மேதையாக விளங்கினார். அவர் யார்?

வரத: கணித மேதை இராமானுஜம்.

பத்மா: கரெக்ட். சட்டமன்றத் தேர்தலில் எத்தனை வயதானவர் வாக்கு அளிக்கலாம்? எத்தனை வயதானவர் வேட்பாளராக நிற்கலாம்.?

பிரபா: 21 வயதானவர்கள்.

பத்மா: இது முதல் கேள்விக்கு விடையா? இரண்டாம் கேள்விக்கு விடையா?

பிரபா: இரண்டுக்கும்தான்.

பத்மா: முதல் கேள்விக்கு விடை— 21 வயது — சரிதான். இரண்டாவது கேள்விக்கு 25 வயது என்பதுதான் சரி. 'முப்பழம்' என்கிறார்களே, அவை எந்த எந்தப் பழங்கள்?

பமீலா: மாம்பழம். பலாப்பழம் வாழைப் பழம்.

பத்மா: ஆம். மா, பலா, வாழை என்பார்கள். நத்தைக்கு எத்தனை கொம்புகள்?

வரத: கொம்புகளா? (எல்லாரும் சிரிக்கிறார்கள்.)

பத்மா: ஆம், அவற்றை 'உணர் கொம்புகள்' என்பார்கள்.

வரத: இரண்டு கொம்புகள்.

பத்மா: ஆட்டுக்கும் மாட்டுக்கும் இரண்டு கொம்புகள் தான். ஆனால், நத்தைக்கு 4 கொம்புகள். இரண்டு நீளமாக இருக்கும். இரண்டு குட்டையாக இருக்கும். ஒவ்வொரு நெட்டைக் கொம்பின் உச்சியிலும் கறுப்பாகப் புள்ளி போல் இருக்குமே, அதுதான் அதன் கண்!

மிருகங்கள்

1) பெரிய மிருகம் — மாடு; மான் (மா — பெரிய)
2) குதிக்கும் மிருகம்: குதிரை,
3) மாதமிருகம்: கழுதை,
4) பாடும் மிருகம்: சிங்கம்,
5) வரி மிருகம்: வரிக்குதிரை.

—வெ. கனகசபை

பிழையில்லாமல் தமிழ் எழுதுவோம்.

மாப்பிள்ளையின் கோபம்!



தணிகை உலகநாதன்

தவறு இல்லாமல் தமிழ் எழுத நாம் ஆசைப்படுகிறோம். அதற்கு வழிகாட்டும் வகையில் கவிஞரும், புலவரும், நல்லாசிரியர் விருது பெற்றவருமாகிய தணிகை உலகநாதனவர்கள் 'கோகுலத்'தில் தொடர்ந்து எழுத முன்வந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு குட்டிப் பல்கலைக் கழகம் போல இயங்கி வரும் மாணவர் மன்றத்தின் பொதுச் செயலாளராகவும், சென்னை வானொலிச் சிறுவர் சங்கப்பேரவையின் தலைவராகவும், பல நல்ல நூல்களின் ஆசிரியராகவும் விளங்குபவர் அவர்.

-ஆசிரியர்

தொல்காப்பியபுரம் என்னும் ஊரில் 'திருவள்ளுவர் உயர் பள்ளி' என்னும் பள்ளிக்கூடம் உண்டு. அந்தப் பள்ளியில் பாரி என்னும் மாணவன் படித்துக் கொண்டிருந்தான். பாரி படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். எல்லாப்பாடங்களிலும் நிறைய மதிப்பெண் பெறுவான். அவன் வகுப்பிலேயே முதல் மாணவன் என்றுபெயர் எடுத்தான்.

பாரி உயர்பள்ளிப் படிப்பை முடித்தான்; கல்லூரியில் சேர்ந்தான்; எம்.ஏ வகுப்புப் படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றான். அவன் படித்த கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராக வேலை பெற்றான். அவன் தமிழில் பிழையில்லாமல் பேசுவான்; எழுதுவான்; பிறர் பிழையாகப் பேசுவதையும் எழுதுவதையும் கண்டால் வருந்துவான்; பிழைகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டித் திருத்துவான்.

பாரி கல்லூரி அதிகாரிகளும் மாணவர்களும் மிகவும் பாராட்டும் வகையில் சிறப்பாகத் தன் கடமையைச் செய்தான். அவன் வகுப்பு மாணவர்கள் தமிழில் தனித்திறமை பெற்றிருந்தார்கள்.

பாரியின் அறிவையும், அழகையும் கண்டு அவனுக்குப் பெண் கொடுக்கப் பலர் முன்வந்தனர். ஆனால், பாரியோ தன் அத்தை மகள் அமுதாவையே திருமணம் செய்து கொள்ள விரும்பினான். அமுதா, பாரியைப் போலவே அன்பும், அடக்கமும் அறிவும், ஆற்றலும் நிறைந்தவள்.

பாரியின் மாமனார் திருமணத்தை மிகச் சிறப்பாக நடத்த ஏற்பாடுகள்

செய்தார். திருமண அழைப்பு இதழைக் கண்ணைக் கவரும் மூன்று வண்ணத்தில் அச்சிட்டார்; முதல் அழைப்பைக் கொண்டு வந்து பாரியிடம் காட்டினார். அந்தத் திருமண அழைப்பிதழில் சில தவறுகள் இருப்பதைக் கண்டு பாரி வருத்தப்பட்டான்; தன் மாமனாரைப் பார்த்து, ''மாமா, இந்த அழைப்பிதழ் எனக்குப் பிடிக்கவில்லை'' என்று கோபத்தோடு கூறினான்.


அது கேட்ட மாமனார் திடுக்கிட்டார். ''ஏன் இந்த அழைப்பிதழ் அழகாக இல்லையா?'' என்று கேட்டார்.

''அழகாகத்தான் இருக்கிறது.''

''பின்னே ஏன் பிடிக்கவில்லை என்று கூறுகிறாய்?''

''இதில் இலக்கணப் பிழைகள் இருக்கின்றன. அதனால், வேறு அழைப்பிதழ் அச்சிடுவதே நல்லது.''

''வேடிக்கையாகப் பேசுகிறாயே! இந்த அழகான மூவண்ண அழைப்பிதழில் அப்படி என்ன பிழையைக் கண்டுபிடித்து விட்டாய்?''



உகய்

''**எனது** மகள் அமுதா என்றும் **எனது சம்மந்தி** மகன் பாரி என்றும் குறிப்பிட்டுள்ளீர்கள். போதாக்குறைக்கு மணமக்களை வாழ்த்துமாறு **கோறுகிறேன்** என்றும் அச்சிட்டிருக்கிறீர்கள்.''

''பாரி, இப்படித்தானே பலர் திருமண அழைப்பு எழுதுகிறார்கள். இதில் என்ன தவறு?''

'''எனது' என்னும் சொல் மாடு, நாய், புத்தகம், கிளி போன்ற பகுத்தறிவில்லாத அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும். எனது மாடு, எனது நாய், எனது புத்தகம், எனது கிளி என்று சொல்லலாம். மகன், மகள், சம்பந்தி முதலிய பகுத்தறிவுள்ள உயர்திணைப் பொருள்களைக் குறிக்கும்போது **என்** மகள், **என்**மகன் **என்** சம்பந்தி என்றுதான் குறிப்பிட வேண்டும். இதை ஐந்தாம் வகுப்பிலேயே நீங்கள் படித்திருப்பீர்கள். சம்மந்தி என்றும் எழுதி விட்டீர்கள். மந்தி என்றால் குரங்கு. 'சமமான குரங்கு' என்பது இதன் பொருள். என் தந்தையாரை இவ்வாறு எழுத உங்களுக்கு எப்படித்தான் மனம் துணிந்ததோ?'' என்றான் பாரி.

''ஆகா! மாப்பிள்ளை என்றால் மாப்பிள்ளை! என்ன அருமையான விளக்கம்! உன் விளக்கத்தால் என் தவற்றை அறிந்தேன்'' என்றார் மாமனார்.

இதுமட்டுமா? கோறுகிறேன் என்பதற்குக் **கொல்லுகிறேன்** என்பது பொருள். கோருகிறேன் என்பதற்குத் தான் **வேண்டுகிறேன்** என்பது பொருள்,'' திருமண அழைப்பிலே 'கோறுகிறேன்' என அச்சிடலாமா?'' என்று கேட்டான் பாரி.


மாமனாருக்குச் செய்த தவறுகள் புரிந்தன. அவர் பாரியைப் பார்த்து, ''பாரி, இப்படித்தான் பலர் திருமண அழைப்பிதழ் எழுதுகிறார்கள். இத்தனை நாளாக நான் இந்தப் பிழையை அறியாது போனேன். உன்னிடம் கொடுத்தது முதல் அழைப்பிதழ். வேறு யாருக்கும் கொடுக்கவில்லை. அதனால் கவலைப்பட வேண்டாம். தவறு இல்லாத வேறு அழைப்பிதழே அச்சிட்டுக் கொண்டு வருகிறேன், என்ன, சரிதானா?''

''ஓ! சரிதான்'', என்றான் பாரி.

ஒரு நல்ல நாளில் பாரிக்கும் அமுதாவுக்கும் தடபுடலாகத் திருமணம் நடந்தது.

புகைப்பட அல்பம் ☆







1,2,3. எம்.வெங்கடரமணி

காற்றடி தந்தால்
கடல் மீன் கைமேல்!



இது குறிமுயல் அல்ல;
கூடை முயல்!

4. பி.சுந்தரம்



5

சின்னச் சின்னப் பொம்மை
சிங்காரப் பொம்மை



6

அல்லி மலர் குளத்திலே
ஆவலாகப் பறிக்கிறேன்




பெட்டிமேல் வைத்துத்தான்
கட்டுப் போடணுமா?

5,6,7,8
எம்.நடராஜன்



சின்னஞ் சிறுகிளியே - விரலில்
என்ன சுவை கண்டாய்?

பொங்கல் நல்ல பொங்கலாம்





பொங்கல்நல்ல பொங்கலாம்!
புத்தரிசிப் பொங்கலாம்!
மங்கலங்கள் பெருகும் ''தை''
மாதம்வைக்கும் பொங்கலாம்!

வீடுதோறும் சுவரிலே
வெள்ளைநன்கு அடித்தது
பீடுஓங்கச் செய்தது!
பெருமிதம்தான் பூண்டது!

தண்ணீர் அம்மா தெளித்ததும்
தங்கைகோலம் போட்டதும்
மண்ணின்தாய்க்குப் புதியதோர்
மகிமைகொண்டு சேர்த்தது!

கனிகள்யாவும் சுவையுடன்
களிப்புகொண்டு உண்டதும்
இனிமையாகப் பேசுவேன்!
என்றுநாக்கு சொன்னது!


கரும்புதின்ற பற்களோ
காலமெல்லாம் யாவரும்
விரும்புகின்ற சிரிப்புடன்
விளங்கஉறுதி கொண்டது!

புத்தரிசிப் பாயசம்,
போதுமட்டும் குடித்ததும்
நித்தம்இன்பம் நிலைக்கவே
நெஞ்சம்வாழ்த்து உரைத்தது!

வாசம்மிக்க பூக்களோ
வாழ்வில்என்றும் மணமுடன்
நேசம்கொண்டு வாழ்ந்திடும்
நெறியைக்காட்டி நின்றது.

தேங்காய்பழம் வெற்றிலை
திருவிளக்கு பூஜைதான்
பாங்காய்வாழ இறைவனின்
பக்திதேவை என்றது!

நெல்லை. ஆ. கணபதி



கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி

உறுப்பினர் எண், பெயர், முகவரி

1069. ஆர். வித்யா, த/பெ. ஏ. வி. ரமணி, லட்சுமி நாராயண சம்மர் ஹவுஸ் காலனி, ஊட்டி.
1070. நா. சங்கர், 7, நியூ ஸ்வர்ணபுரி காலனி, சேலம்–4.
1071. இரா. அழகர்சாமி, 24, கன்னிமார் கோவில் தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர்.
1072. என். எஸ். ராம்நாத் 536, அறிஞர் அண்ணாநகர், மதுரை–20.
1073. ம. விவேகானந்தம், 20/2, பெரியண்ண வீதி, வசந்த பவனம், ஈரோடு–1.
1074. ஏ. கீதப்ரியா, எண். 1, என்ஜினியர் குடியிருப்பு இல்லம், பழைய ஜட்ஜ் பங்களா, காம்பவுண்ட், தஞ்சை.
1075. வி. சுந்தரேச்வர், 21, டி. சி. காலனி, பெருமாள்புரம், திருநெல்வேலி–7.
1076. க. முருகன், S/o. ஆ. சுப்பிரமணியன், காவிரி ஆற்றங்கரை, ஆடுதுறை.
1077. எஸ். பாலாஜி, பிளாட் எண். 2158, அண்ணாநகர், சென்னை–40.
1078. க. செளரிராஜன், S/o. கல்யாணராமன், பார்மஸிஸ்ட், புதுத்துறை மண்டபம், காரைமேடு–609 124.
1079. வி. ஸ்ரீராம் காஸ்ட்லோ, பி–4, 23–ஆம் குறுக்குத் தெரு, மகாராஜநகர், திருநெல்வேலி–11.
1080. ஜி. ராமகிருஷ்ணன், 61–ஏ, மேற்கு உத்தர வீதி, திருச்சி–6.
1081. சிவன்நாதன், ஆலங்கோட்டை, கணபதிபுரம்–629 502.
1082. ஆலன்நாதன், ஆலங்கோட்டை, கணபதிபுரம்–629 502.
1083. வி. பூங்குன்றன், S/o. எம். விவேகானந்தம், தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி, இரட்டணை–604 306.
1084. பி. மலர், எச்–18, மதுரை மில் காலனி, புது ஜெயில் சாலை, மதுரை–10.
1085. ஆர். சீனிவாசன், 16, கோவில் பத்து, நிரவி அஞ்சல், காரைக்கால்–609 604.
1086. ரா. ஜெகன்நாதன், டி–161 சம்பந்தர் தெரு, அழகப்பா நகர், மதுரை.
1087. ஜி. தமிழ்ச்செல்வி, 12–ஏ, செல்வராஜபவனம், இம்மராஜ சமுத்திரம் தெரு, கல்லிடைக்குறிச்சி–627 416.
1088. B. Meenakshi, 1671, Luxmibai Nagar, New Delhi-23.
1089. இரா. உமாசத்தியன், 4, கீழத்தெரு, நாகர்கோவில்–1.
1090. எஸ். வெங்கடசுப்ரமணியன் 14–ஈ, ராமையா தெரு, ஜெய்ஹிந்துபுரம், மதுரை–11.
1091. கே. அருணா, பிளாட் எண். 6, மார்க்கெட் ரோடு, இராதாநகர், குரோம்பேட்டை, சென்னை'44.
1092. கே. சத்தியமூர்த்தி, பிளாட் எண். 6, மார்க்கெட் ரோடு, இராதாநகர், குரோம் பேட்டை, சென்னை–44.
1093. கே. ஏ. கலிலுர் ரஹ்மான், பள்ளிவாசல் தெரு, துவரங்குறிச்சி, –621314.
1094. க. ஆனந்த், 9, தபால் ஆபீஸ் தெரு, பாளையங்கோட்டை–627 002.
1095. ச. செந்தில் முருகன், 5, சாந்தப்பா விலாஸ், செக்காலை, காரைக்குடி–2.
1096. நா. சுந்தரம், 10/57, பவர் ஹவுஸ் ரோடு, சோமனூர் (அஞ்)–638 668, கோவை மாவட்டம்.
1097. பி. சுந்தர்ராஜ், 158, சுண்டபுதூர், நஞ்சுண்டபுரம் அஞ்சல், கோயம்புத்தூர்-641036
1098. வி. ப்ரியா 7/4, எஸ். டைப் குவார்ட்டர்ஸ், எம். டி. பி. பி. குவார்ட்டர்ஸ், மேட்டூர் அணை–1.
1099. வி. லக்ஷ்மி நாராயணன், எண்–8, பரோடா தெரு, முதல் சந்து மேற்கு மாம்பலம், சென்னை–33.
1100. வே. சுதாகர், த. பெ. பி. வேங்கடராமன், வெள்ளமடை அஞ்சல், வையம்பாளையம் வழி, கோவை–641 110.
1101. ப. பாலசுப்பிரமணியன், 6.33–பி, டி. டி. பி. ரோடு, புலிவலம்.
1102. என். ஏ. எம். சாகுல் அமீது, 56, நெட்டிமுத்து மேல்கரை, ஆலங்குடி–622 301, புதுகை மாவட்டம்.
1103. டி. எஸ். வெங்கட்ராமன், 26, தென் வடல் காஜிதப் பட்டறைத் தெரு, மன்னார் குடி–614 001.
1104. நா. இராஜ்குமார், 19, மருதங்காவெளி, முத்துப்பேட்டை–614 704 தஞ்சை மாவட்டம்.
1105. ஆர். பிரகாஷ், 38, கூலக்கடை பஜார், திருநெல்வேலி–627 006.
1106. பி. என். ரமேசு, த/பெ. பி. கே. நல்லசாமி, ஆசிரியர், அரசு உயர்நிலைப்பள்ளி, ஒடத்துறை அஞ்சல், கவுந்தப்பாடி(வழி)–638 468.
1107. எச். சீனிவாசன், 192, இராஜவீதி, கோவை–641 001.
1108. ஜி. லெட்சுமி, 67, தளவாய் தெரு, வடிவீஸ்வரம், நாகர்கோவில்–629 002.
1109. வி. சுபா, 66, காளிதாஸ் ரோடு, ராம் நகர் கோயம்புத்தூர்–641 009.
1110. கே. சுமதி, 162, அன்னூர் ரோடு, நடூர், மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்–641 301.

1111. K. Srividya, D/o R. K. Murthy, 2/3, LIG Colony, Indore, M.P. 452008.

1112. எஸ். நடராஜன், 59, இருசப்ப கிராமணி தெரு, கிருஷ்ணாம்பேட்டை, சென்னை-5.

1113. எம். நடராஜன் (இலவதாசன்), 122, மேல முத்துராமன் கோயில் தெரு, தென்காசி-627 811.

1114. ர. அனந்தபத்மநாபன், 30, 46-வது தெரு, அசோக்நகர், சென்னை-83.

1115. பா. சுவாமிநாதன், த.பெ. ஜி. பாலசுப்பிரமணியம்பிள்ளை, பனங்காடி, கச்சனம் அஞ்சல்-610 201.

1116. ஆர். செல்வன், த/பெ. ரங்கசாமி, ராமசாமி முதலியார் தெரு, அண்ணா நினைவு வளைவு, கவுந்தப்பாடி அஞ்சல்-638455.

1117. சி. என். சந்தியா, 308, ஹவுசிங் யூனிட், ஏற்காடு ரோடு, சேலம்-8.

1118. கே. சீனிவாசன், 51, ராமச்சந்திரா ரோடு, ஆர். எஸ். புரம், கோவை-641 002.

1119. ஜி. சந்திஷ்குமார், 82 A/5, எஸ்.டி. மேரீஸ் தெரு, சஸ்ட்ராமன் புதூர், நாகர் கோயில்-2.

1120. எஸ். பெருமாள், த.பெ. எம். எஸ். சாமிநாதன், கால்நடை உதவியாளர், துரைசாமி, கவு. காலனி, பி. என். ரோடு,குன்னத்தூர்-638103

1121. ரா. மது, 24-சு, வெங்கடகிருஷ்ண ரோடு, ஆர். எஸ். புரம், கோவை-641 002.

1122. எஸ். கார்த்திகேயன், 3, மாணிக்கவாசகர் தெரு, தேமத்தான்பட்டி-623 111.

1123. என். ஷியாமளா, காரனீஸ்வரர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-15.

1124. ஆர். வி. அருட்செல்வம், தெத்திகிரிப்பட்டி அஞ்சல், மேட்டூர் தாலுகா, சேலம் மாவட்டம்-636 451.

1125. டி. சுமதி, சி-12, ராஜம் ரோடு, டி. வி. எஸ். நகர், மதுரை-3.

1126. ச. ஆனந்தி, 17, மு. பொ. முத்துசாமிநாடார் தெரு, அருப்புக்கோட்டை-626 101.

1127. என். நடராசன், டி/37, மாணிக்கவாசகர் தெரு, வட்டம்-2 நெய்வேலி-607 801.

1128. கோ. ஸ்ரீதர், 96-டி, பெரமனூர் மெயின் ரோடு கிழக்குத் தெரு, பெரமனூர், சேலம்-636 007.

1129. ஆர். சுஜாதா, 4, 30-வது தெரு, நங்கநல்லூர், சென்னை-61.

1130. ஏ. சங்கமேஸ்வரன், 136, கன்னையன் காலனி, கருங்கல்பாளையம்,ஈரோடு-638 003.

1131. என். ஏ. முகமது சாலிக், 9-வது எப், புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்

1132. பெ. காஞ்சனா 61, வடக்கு ஆண்டார் வீதி, திருச்சி-2.

1133. எஸ். டி. வனிதா, 14, கணபதி அக்கிரகாரம், திண்டுக்கல்-624 001.

1134. க. க. பிரகாஷ், 15, வளையல் காரத் தெரு, பெரியகுளம்-626 501.

1135. R. Saraswathy, 2/3, Type-III, West Land, Khamaria, Jabalpur, M.P. 482005.

1136. ஆர். ஜெயந்தி, 24/சு, கஸ்தூரிபாய் தெரு, பண்ணுருட்டி.

1137. இ. திருநாவுக்கரசு, 58, பேரூர் செட்டி பாளையம், கோவை-641 010.

1138. வெ. லட்சுமி, 18/81, ஏட்டு குப்புசாமித்தெரு, அரக்கோணம்-631 001.

1139. N. Ganesh Muthukumaran, 374A, North Ambazeri Road, Gandhi Nagar, Nagpur-440010.

1140. வ. இராமச்சந்திரன், த/பெ. வரதராஜன், வடுகர் தெரு, விளக்குடி-614 715.

1141. கே. யமுனா, த/பெ. டி. கிருஷ்ணாஜி, ஐ. ஓ. பி. கோபாலபுரம், முதல் தெரு, கோவை-641 018

1142. ஜெ. எஸ். எஸ். வனிதா, 194-ஏ, தெற்கு மாசி வீதி, மதுரை.

1143. என். லலிதா, 69-சி, பி & டி மைக்ரோவேவ் குவார்ட்டர்ஸ், பாம்பே காலனி, ஊட்டி-643 001.

1144. எச். சந்திரகுமார், 44, ஐ. பி. கோவில் தெரு (தெற்கு), விஜயபுரம், திருவாரூர்-610 001.

1145. வி. சிவகுமார், த/பெ. எம். பி. விஸ்வநாதன், சப் போஸ்ட்மாஸ்டர், அனந்தபுரம்-605 201.

1146. எஸ். தங்கமணி, த/பெ. வி. நடராஜன், சன்னதித் தெரு, கோட்டூர் போஸ்ட், 614 708.

1147. கே. சங்கர், மே/பா. வி. கிருஷ்ணமூர்த்தி, 36, பார்த்தசாரதி தெரு, எஸ். எஸ். காலனி, மதுரை-16.

1148. எஸ். தனசேகரன், மே/பா. ராஜராஜேந்திரன், முகந்தனூர் அஞ்சல், அம்மையப்பன் (வழி)-613 701

1149. எஸ். கௌசிக் மாதவன், 1, இரத்தினபுரம், மதுரை-625 011.

1150. கோ. கு. முருகன், 23, ஆண்டவர் வீதி, கோபிசெட்டி பாளையம்-638 452.


1151. இரா. கங்கா, 11, அரிகநல்லூர் தெரு-8, செங்கோட்டை-627 809.

1152. த. கிருஷ்ணமூர்த்தி, பிளாட் எண்.38, விஜயநகர் வடக்கு, வேளச்சேரி, சென்னை-42.

1153. எஸ். சிவஞானகுமரேசன், பி 11/31, எம். ஐ. ஜி. ஃப்ளாட், கே. கே. நகர், மதுரை-625 020.

1154. தா. முரளி, 2, 9-வது தெரு, ராஜாஜி நகர், வில்லிவாக்கம், சென்னை-49.

(இன்னும் வரும்)



கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. ராபர்ட் ஏகக் களிப்பில் மூழ்கியிருந்தான். அம்மா ஒரு பக்கம் பட்சணங்களாகச் செய்து குவித்துக் கொண்டிருந்தாள். புத்தாடைகளும் பட்டாசும் வேண்டும் மட்டும் வாங்கியாயிற்று. வீட்டை வண்ண விளக்குகளால் அலங்கரித்து விட்டான். இன்னும் அவன் ஆசை தீரவில்லை. வெளிநாட்டில் இருக்கும் அவனுடைய மாமா வேறு அவனுக்குக் கிறிஸ்துமஸ் பரிசாக இருநூற்றைம்பது ரூபாய் அனுப்பி இருந்தார். அதற்கு என்னென்ன செய்து, தன் பெருமையைத் தோழர்களிடம் வெளிப்படுத்தலாம் என்று ஏக சிந்தனையாய் இருந்தான்.

அப்போது அங்கு வந்த அம்மா, ''ஏண்டா, ராபர்ட், மாமா அனுப்பின பணத்தை என்ன செய்யப் போறே?'' என்று கேட்டாள்.

''அதுதாம்மா யோசிச்சுக்கிட்டிருக்கேன். போன வருடம் எதிர் வீட்டு டாக்டர் மாமாவோட மகன் ஜான், தான் பண்ணின அலங்காரத்தைச் சொல்லிச் சொல்லிப் பீத்தியடித்தான். இந்த வருஷம் அவனை வாய் திறக்க முடியாமல் பண்ணிடறேன்'' என்றான் ராபர்ட்.

''அப்படியெல்லாம் நாம் நினைக்கக் கூடாதுடா ராபர்ட், அடுத்தவர்களைப் பார்த்துப் பொறாமைப்படுவது நல்லதல்ல. போதும் என்ற மனம் வேண்டும். நம்மிடம் அதிகமாக இருப்பதில் இருந்து ஏழைகளுக்கு உதவ வேண்டும். அப்போது தான். கடவுள் நம்மை ஆசிர்வதிப்பார்'' என்றாள் தாய்.

ராபர்ட் சட்டென்று நிமிர்ந்து அம்மாவைப் பார்த்தான். ''என்னம்மா சொல்றே நீ?'' என்று கோபமாகக் கேட்டான்.

''உனக்கு எத்தனை புதிய டிரஸ் எடுத்திருக்கிறோம்! நம்ம வில்லியமுக்கு ஒரு சட்டைகூடக் கிடையாது தெரியுமா? அவனுக்கு மாமா அனுப்பிய பணத்திலிருந்து ஐம்பது ரூபாய் கொடேன். அவன் அம்மா எத்தனை வருடங்களாய் நம் வீட்டில் வேலை செய்கிறாள்?'' என்றாள் அம்மா.

''அட போம்மா. நான் அவன்கூட எல்லாம் பேசுவதுகூடக் கிடையாது,'' என்று அலட்சியமாகக் கூறிவிட்டு அங்கிருந்து எழுந்து போய் விட்டான்.

ராபர்ட்டின் அப்பா பெரும் செல்வந்தர். ஆனால், மிகவும் நல்லவர். ஏழைகளுக்கு உதவுவதில் சற்றும்

சலிப்பதில்லை. ராபர்ட்டிடம் இயல்பாகவே ஒருவிதச் செருக்கும், யாரையும் மதிக்காத தன்மையும் வளர்ந்து விட்டிருந்தன. ஏழைகளைக் கண்டாலே அவனுக்குப் பிடிக்காது. அவர்களோடு பேசுவதும், பழகுவதும், தன் கௌரவத்திற்குப் பெரும் இழுக்கு என்று நினைத்தான். அவன் யாரையும் மதிப்பதில்லை. சில வேளைகளில், தன் ஆசிரியர்களைக் கூட அவன் மதிக்காமல் நடந்து விடுவான். இவைகள் எல்லாம் அவன் பெற்றோருக்குத் தெரிந்து பெரும் மனவேதனையை உண்டுபண்ணியிருந்தன. அவனிடம் நயமாகச்சொன்னால் கூட அவனுக்குக் கோபம் வந்து விடும்.

அவர்கள் வீட்டில் வேலை செய்கிற ஆயாவின் மகன்தான் வில்லியம். ராபர்ட்டின் வகுப்பில்தான் அவனும் படிக்கிறான். அவன் படிப்பதற்குப் பெரும் அளவு உதவி செய்வது ராபர்ட்டின் தந்தையார்தான். ஆனால், ராபர்ட் அவனிடம் முகம் கொடுத்துப் பேசுவதுகூடக் கிடையாது. அவனிடம் பேசினால் எங்கே தன்னைப் பற்றிப் பிறர் கேவலமாக நினைத்து விடுவார்களோ என்று நினைப்பான். 'என் தகப்பனாரின் தயவால் படிக்கிறவன் தானே!' என்று அலட்சியம் வேறு! ராபர்ட்டை எப்படித் திருத்துவது என்று தெரியாமல் திகைத்தனர், அவன் பெற்றோர்.

கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முந்திய நாள். சுமார் பத்து கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் தன் அத்தை வீட்டிற்குப் பரிசுப் பொருள்களுடனும் பட்சணங்களுடனும் புறப்பட்டான் ராபர்ட். அன்று அவன் தந்தையாருக்கு வெளியூரில் வேலையிருந்ததால், காலையிலேயே காரை எடுத்துக் கொண்டு போய்விட்டார். அதனால் அவன் பஸ்ஸில் போகும்படி ஆயிற்று.

''தனியாக பஸ்ஸில் போய் உனக்குப் பழக்கமில்லையேடா ராபர்ட். வில்லியமைத் துணைக்கு அழைத்துக் கொண்டு போ'' என்றாள் அம்மா.

''சே போம்மா. நான் அவன்கூடப் போக மாட்டேன்'' என்று அடம் பிடித்தான் ராபர்ட். ஆனால், அம்மா விடவில்லை. வலுக்கட்டாயமாக வில்லியமை அவனுடன் அனுப்பி வைத்தாள். ராபர்ட்டிற்கு அத்தை வீடு போகும் ஆசைகூட அற்றுப் போய் விட்டது. வேண்டாவெறுப்பாக பஸ்ஸ்டாண்டை நோக்கி நடந்து கொண்




பழைய கதைத் புதிய பாடல் : 57ம் பக்கம் பார்க்க

டிருந்தான். தன் பின்னால் வந்த வில்லியமை அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. வில்லியம் பரிதாபமாக அவன் பின்னே 'காவலு'க்குப்போய்க் கொண்டிருந்தான்.

ஊர் போக வேண்டிய பஸ் வந்ததும், ராபர்ட் பஸ்ஸில் ஏறி ஜன்னலோர இருக்கை ஒன்றில் வசதியாக அமர்ந்து கொண்டான். சுற்றுமுற்றும் பார்த்த வில்லியம், 'எப்போதும் ராபர்ட் பக்கத்திலேயே இரு' என்று அம்மா சொன்னார்களே என்று நினைத்து, அவன் பக்கத்தில் போய் அமர்ந்தான்.

அவ்வளவுதான்! சட்டென்று கடுகடுத்த முகத்துடன் அந்த இடத்தில் இருந்து எழுந்து, அதற்கு முன் இருக்கையில் ஜன்னலோரமாகப் போய் அமர்ந்து கொண்டான், ராபர்ட். வில்லியமுக்குக் கண்களில் கண்ணீர் நிறைந்துவிட்டது. வெளிப்பக்கம் பார்வையைத் திருப்பி அதை மறைத்துக் கொண்டான்.

கண்டக்டர் ''டிக்கட், டிக்கட்' என்று குரல் எழுப்பிக் கொண்டு வந்ததும், ராபர்ட் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அலட்சியமாக நீட்டித் தான் இறங்க வேண்டிய இடத்தைச்



சொல்லி, "ஒரு டிக்கெட்'' என்று கேட்டு ஒரு பயணச் சீட்டை மட்டும் வாங்கிக் கொண்டான். கண்டக்டரிடம் மீதி கொடுப்பதற்குச் சில்லறை இல்லை. மீதி தர வேண்டியதைப் பயணச் சீட்டின் பின்புறம் எழுதி விட்டு, ''தம்பி, இறங்கும் போது வாங்கிக் கொள்'' என்று கூறிவிட்டு நகர்ந்தார்.

தன் மகனது குணத்தை நன்கு அறிந்திருந்த தாய், வில்லியமை அவனுடன் அனுப்பும் போது அவனுக்குத் தனியாக பஸ்ஸிற்குக் காசு கொடுத்தே அனுப்பியிருந்தாள். வில்லியம் தனது பயணச்சீட்டைக் கேட்டு வாங்கிக் கொண்டான்.

பஸ் புறப்பட்டது. காற்று 'விர், விர்' என்று அடித்துக் கொண்டிருந்தது. ஆறு, ஏழு கிலோமிட்டர் போயிருக்கும். காக்கிச்சட்டையும், பாண்டும் அணிந்திருந்த பயணச் சீட்டுப் பரிசோதகர் ஒருவர் பஸ்ஸை நிறுத்தி ஏறிக் கொண்டார். முன்னிருக்கையில் இருந்த அவர் ஒவ்வொருவரது பயணச் சீட்டாகப் பரிசோதித்துக் கொண்டே வந்தார். ராபர்ட் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்னிருக்கைக்கு அவர் வந்தாயிற்று.

தன் பயணச்சீட்டை எடுப்பதற்காகச் சட்டைப் பையில் கையை விட்ட ராபர்ட் 'திடுக்கிட்டான். அங்கே பயணச் சீட்டு இல்லை. நன்றாகத் துழாவித் துழாவிப் பார்த்தான். ஊகூம், இல்லவே இல்லை! சுற்றும் முற்றும் இருக்கையின் அடியில் எல்லாம் பரபரவென்று தேடினான். எங்கும் இல்லை! அவன் அஜாக்கிரதையாகச் சட்டைப் பையில் செருகியிருந்த பயணச் சீட்டு, எதிரே வேகமாக வீசிய காற்றில் வெளியே பறந்து விட்டிருக்கிறது!

ராபர்ட்டிற்கு வியர்த்துக் கொட்டியது. கையில் வேறு பணமும் இல்லை. நிலைகொள்ளாமல் தவித்தான். அவனுக்கு மயக்கமே வந்து விடும் போலிருந்தது. பேச நா எழாமல் உட்கார்ந்திருந்தான் ராபர்ட்.

அவன் நிலையில்லாமல் தவிப்பதையும் சட்டைப் பையைத் துழாவித் துழாவிப் பார்ப்பதையும் பின் இருக்கையிலிருந்து கவனித்த வில்லியம் ஒரு நொடியில் நடந்ததைப் புரிந்துகொண்டான். தன் பயணச் சீட்டை எடுத்து அவனிடம் நீட்டி, காதோரமாக, ''இதை வைத்துக் கொள்'' என்று கிசுகிசுத்தான். வேறுவழி தெரியாமல் ராபர்ட் அதை வாங்கிக் கொண்டான்.

பரிசோதகரிடம் அந்தப் பயணச் சீட்டைக் காட்டித் தப்பித்தும் கொண்டான். அடுத்து வில்லியம் இருந்த இருக்கை! அவனிடம் பரிசோதகர் பயணச்சீட்டைக் கேட்டபோது, அவன் மௌனமாக எழுந்து நின்றான்.

''டிக்கெட் எங்கேடா?'' என்று அதட்டினார் பரிசோதகர்.

அவன் வாங்கவில்லை என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்தான். அவருக்குக் கோபம் வந்து விட்டது. ''ஏண்டா காசில்லாமல் பஸ்ஸிலே வர்றீங்க? திருட்டு நாய்களா?'' என்று தலைமுடியைக் கொத்தாகப் பிடித்து இழுத்தார்.

பஸ்ஸில் இருந்தவர்கள் எல்லாம் திரும்பிப் பார்த்து அவனைக் கேலி செய்தும் இகழ்ந்தும் பலவாறு பேச ஆரம்பித்தனர். ராபர்ட்டின் பக்கத்தில் இருந்த பெரியவர் பரிசோதகரைப் பார்த்து, ''கீழே இறக்கி விட்டிடுங்க'' பாவம்'' என்றார். இதற்குள் முன்புறம் இருந்து பாய்ந்து வந்த கண்டக்டர் வில்லியமின் கன்னத்தில் ஓங்கியறையப் போனார். பெரியவர் தடுத்து விட்டார். ''ஏமாத்தறியா, திருட்டு ராஸ்கல்'' என்று உறுமினார், கண்டக்டர்.

பஸ் நிறுத்தப்பட்டது. ''இறங்குடா கீழே'' என்று அவன் காதைப் பிடித்துத் திருகிப் பிடரியில் கையை வைத்துத் தள்ளி வெளியே இறக்கி விட்டார் கண்டக்டர்.

பஸ் மீண்டும் புறப்பட்டுச் சென்றது. ராபர்ட் திரும்பிப் பார்த்தான். வில்லியம் பரிதாபமாக பஸ்ஸின் பின்னால் நடந்து வருவது தெரிந்தது. 'ஓ! இத்தனை அவமானங்களும் நான் அடைய வேண்டியதல்லவா?' என்று நினைத்த போது ராபர்ட்டின் மனம் அப்படியே உருகிப் போயிற்று. 'இந்த நேரத்தில் அவன் என்னைக் காப்பாற்றாமல் இருந்திருந்தால், இத்தனை பயணிகளுக்கு முன் என்னையல்லவா கண்டக்டர் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளியிருப்பார்?' அவன் உள்ளம் கூசிப் போனான். கௌரவம் பார்த்துப் பழகினேனே, இப்போது இந்த ஏழைப்பையன் இல்லாவிட்டால் அவன் கௌரவம் என்ன ஆகியிருக்கும்?

'இவ்வளவு பெருந்தன்மை கொண்டவனையா நாம் இத்தனை நாளும் அவமரியாதையாய் நடத்தினோம், எதிரி

யிடமும் அன்பு பாராட்டும் அவன் எங்கே? வீண் மமதை பிடித்து அலையும் நான் எங்கே?

ராபர்ட்டிற்கு அப்படியே பஸ்ஸில் இருந்து இறங்கி ஓடிப்போய் வில்லியமைக் கட்டிக் கொண்டு மன்னிப்புக் கேட்கவேண்டும் போலிருந்தது!

ஊர் போய்ச் சேர்ந்த பின்னரும் ராபர்ட் அத்தை வீட்டிற்குப்போகாமல் வில்லியமிற்காகப் பஸ் நிறுத்தத்தில் காத்திருந்தான். தொலைவில் வில்லியம் சோர்ந்து போய் வருவது தெரிந்தது. ஓடிப் போய் அவனைக் கட்டிப்பிடித்துக் கொண்டு விம்மினான்.


''வில்லியம், என்னை மன்னித்து விடுடா, எத்தனை அவமானத்தை என் பொருட்டு ஏற்றுக் கொண்டாய். உனக்கிருக்கும் பெருந்தன்மை எனக்கில்லை பார். எப்படியெல்லாம் உன்னை அவமானப்படுத்தியிருக்கிறேன், நான்...'' என்று விம்மி விம்மி அழுதான்.

''அதனால் என்ன ராபர்ட்? நான் ஏழை. அவமானப்பட்டால் ஒன்றும் கெட்டுப் போய் விடாது. என்னை அடித்துப் போட்டால்கூடக் கேட்க ஆள் கிடையாது. நீ பணக்காரன், அவமானப்படலாமா?'' என்றான் வில்லியம்.


''அப்படியெல்லாம் சொல்லாதே, வில்லியம், என் தவற்றை நான் உணர்ந்து கொண்டேன். பெருந்தன்மையில்தான் பெருமையே இருக்கிறது என்பதை இன்று உன்னிடம் கற்றுக் கொண்டேன். என்னை மன்னித்துவிடு'' என்று தெளிந்த மனத்துடன் வேண்டினான் ராபர்ட்.

இந்தக் கிறிஸ்துமஸ் பண்டிகையை ராபர்ட் வில்லியமுடன் சேர்ந்துதான் கொண்டாடினான். மாமா அனுப்பிய பணத்தில் அவனுக்கு அழகான சடையும் நிஜாரும் வாங்கிக் கொடுத்தான். அவன் பெற்றோருக்குத் தலைகால் புரியாத மகிழ்ச்சி, மகன் திருந்தியதை நினைத்து.

எந்த வருடமும் இல்லாத ஆனந்தமும், மனநிறைவும் இந்த வருட கிறிஸ்துமஸ் பண்டிகையில் இருப்பதை உணர்ந்தான் ராபர்ட்!



பெற்றெடுத்த,



குழந்தைக் குலத்தை



நூற்றுக் கணக்கான குழந்தைகளின் முகங்களில் புன்னகை மலரும்; இதயங்களில் ஆனந்தம் பொங்கும்; கண்கள் பனிக்க பாலகர்கள் உங்களை வாயார வாழ்த்து வார்கள்.

வெகு எளிதாக நீங்கள் குழந்தைக் குலத் தின் நன்றியைப் பெறலாம்.

ஒரு பள்ளிக் கூடத்துக்கு ஒரு ஆண்டுக்கு கோகுலம் பரிசளிப்பதெனத் தீர்மானி யுங்கள். சந்தாத் தொகை ரூ. 24. எங்களுக்கு கிடைக்கச் செய்யுங்கள். உங்கள் அன்பளிப்பு என்று குறிப்பிட்டு அந்தப் பள்ளிக்கு மாதா மாதம் கோகுலம் அனுப்புகிறோம்.

உங்களுக்குச் செலவு 24 ரூபாய்தான். ஆனால் அத்தொகை ஓராண்டில் நிகழ்த்தப் போகிற சாதனையைப் பாருங்கள்: மாதா



மாதம் கோகுலத்தை நூற்றுக்கணக்கான குழந்தைகள் பள்ளியில் பகிர்ந்து கொண்டு படிக்கும்போது அவர்களிடையே நட்பு உணர்ச்சி பெருகும். பொழுது போக்காகவும் இருக்கும்!

உங்கள் பெயர், விலாசத்தோடு உங்கள் அன்பளிப்பைப் பெறுகிற பள்ளியின் பெயர் விலாசமும் கல்கியில் பிரசுரமாகும்.

'அதென்ன, ஒரே ஒரு பள்ளிக்குத்தான் நான் அன்பளிப்பாக சந்தாத் தொகை உங்க ளுக்கு அனுப்ப வேண்டுமா?' என்று கேட்ப வர்களுக்கு:

உங்கள் பொருளாதார வசதிக்கு ஏற்ப இரண்டு மூன்று அல்லது நான்கு பள்ளிகளை கூடத் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப சந்தாத் தொகை அனுப்பி பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை மகிழ்விக்கலாம். அல்லது ஒரு பள்ளிக்கே இரண்டு அல்லது மூன்று பிரதிகள் கிடைப்பதற்கு வழி செய்யலாம்.

சென்னை, கதீட்ரல் ரோடு, 67–ம் நெம் பர் இல்லத்தில் வாழும் **திரு. எம். ராஜா** எழுதுகிறார்:—

மின்மினிக் கதைகளிலிருந்து பிருந்தா வனம் வரையிலும் சிறுவர் பெரியவர் பாகு பாடில்லாமல் ஆர்வத்துடன் படிக்கக்கூடிய கதை கட்டுரைகளைத் தாங்கி வரும் கோகு லத்தின் சேவை செழித்து வளரட்டும்.

சென்னை அநாதை இல்லங்களில் உள்ள சிறுவர் சிறுமியர் கோகுலத்தின் இனிமை யைச் சுவைக்க வேண்டாமா? அவர்களுக் கும் கோகுலம் கிடைக்க ஆண்டுச் சந்தாக்கள் அனுப்பியுள்ளேன்.

மகிழச் செய்யுங்கள்

திரு. எம். ராஜா வழிகாட்டுகிறார்.


கோகுலம் வாங்கிப் படிக்க வசதியற்ற பல்லாயிரக்கணக்கான குழந்தைகளின் ஒரு பகுதியினருக்கேனும் திரு. எம். ராஜாவைப் போலவே உதவ நீங்களும் நிச்சயம் ஆசைப் படுவீர்கள்.

டிராஃப்ட், மணி ஆர்டர்களை "நிர்வாகி, கோகுலம்" என்ற பெயருக்கு, "கல்கி காரியாலயம், சென்னை–32" என்ற விலாசத் துக்கு அனுப்பவும். 'செக்' எனில் பாங்க் கமிஷன் ஒரு ரூபாய் சேர்த்துக் கொள்ளவும்.

மிகக் குறைந்த செலவில் குழந்தைக்குலத் துக்கு மிக உன்னதமான, நிரந்தரப்பயன் தரும் பணியை மிக எளிதாக நிறைவேற்ற உங்களுக்கு ஒரு நல்வாய்ப்பு. உடனே செயல் படுமாறு அழைக்கிறோம்.

அழ. வள்ளியப்பா,
கௌரவ ஆசிரியர், கோகுலம்.

கி. ராஜேந்திரன்,
ஆசிரியர், கல்கி.



1955–ம் வருஷம். காகிதத்தில் கான்கார்ட் விமானம் தயாரிப்பது பற்றி இருபது வருஷங்கள் பரிசீலிக்கப் பட்டு உருவான வருஷம். இந்தப் புதிய விமானத் தயாரிப்புக்கு நான்கு தொழிற்சாலை விற்பன்னர்கள் பாடு பட்டார்கள். எல். ஏரோஸ் பட்டீயல், பிரிட்டிஷ் ஏரோஸ்பேஸ், ரோல்ஸ் ராய்ஸ், ஸ்னெக்மா ஆகிய பிரசித்தி பெற்ற நான்கு நிறுவனங்கள் இந்தப் பெருமுயற்சிக்குக் காரணம்.

காராவெல்லுக்குப் போட்டியாக, வாயு வேகத் தயாரிப்பு கான்கார்ட் விமானம். நான்கு என்ஜின்கள் கொண்ட ஜெட் 120 டன் எடைக்குள் தயாரிக்க முனைந்தனர். பிரிட்டிஷ் பிரெஞ்சு இன்ஜினியர்களின் இணைப்புச் சாதனை -கான்கார்ட்.

120 டன் எடையில் தயாரிக்க வேண்டிய கான்கார்ட் விமானம் 120 விமானப் பயணிகள் அவர்களது பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக 175 டன் எடையில் தயாரிக்கும்படி ஆயிற்று!

1967–ம் வருஷம் டிசம்பர் 11–ந் தேதி 001 என்ற கான்கார்ட் மாதிரி விமானம் டோலௌஸ் தொழிற்சாலையிலிருந்து வெளி வந்தது. விமானத்தி லுள்ள ஏராளமான மின் இணைப்புகள், இழுப்புச் சக்தி ஆகியவை சரியாக இயங்குகின்றனவா என்று பரிசோதித்து முதல் வெள்ளோட்டம் 1969–ம் வருஷம் மார்ச் 2–ந் தேதி நடைபெற்றது. இந்த முதல் கான்கார்ட் வெள்ளோட்டத்தை நிறைவேற்றி வைத்தார் விமானி ஆண்ட்ரீ

கன்கார்ட் அதிசய விமானம்

டூர் காட். டோலோஸ் தொழிற்சாலை மேல் கான்கார்ட் விமானம் முதலில் பறந்தபோது, சாலையில் சென்ற அத்தனை கார் ஓட்டிகளும் காரை நிறுத்தி விட்டு வியப்புடன் இந்த அரிய சாதனையைக் கண்டு பிரமித்துப் போய் நின்றார்கள்.

பிரிட்டனிலும் கான்கார்ட் 002 விமானம் 1969 ஏப்ரல் 9–ந்தேதி வெள்ளோட்டம் விடப்பட்டது. கான்கார்டின் மார்க் 1 விமானம் சூபர் சானிக் பிரயாணிகள் விமானமாகக் கருதப்பட்டது. 1970–ம் வருஷம் கான்கார்ட் மார்க்-2 விமானம் இருநூறு மணி நேரம் பயிற்சி ஓட்டங்களைக் கடந்து, வட அட்லாண்டிக் சமுத்திரத்தை மூன்று மணி நேரத்தில் கடக்கும் வல்லமை பெற்றிருந்தது.

1972–ம் வருஷம் ஏர் பிரான்ஸும் பிரிட்டிஷ் விமான நிறுவனமும், 4, 5, கான்கார்ட் விமானங்கள் தயாரித்துத் தரும்படி விண்ணப்பித்தன. இதன் பிறகு அமெரிக்க விமான நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு கான்கார்ட் விமானங்களைப் பெற முன்வந்தன. அந்தக் காலத்தில் எரிபொருள் பஞ்சமில்லை; சத்தத்தைப் பற்றியும் அக்கறை இல்லை.

கான்கார்ட் விமானம் பாரீஸிலிருந்து வாஷிங்டனுக்கு 6265கிலோ மீட்டர் தூரத்தை 213 நிமிஷங்களில் வாயு வேக மனோ வேகத்தில் கடந்து சென்றது அற்புதம்.

கான்கார்டு விமானத் தயாரிப்பில் சகலவித நுணுக்கங்களிலும் தேறி, கம்ப்யூட்டர் வசதிகள் ஏற்பட்டு, குளிர்ப்பதன வசதிகள் செய்யப்பட்டு, முன்னேறிக் கொண்டிருப்பது அதன் சரித்திரங்கள். கான்கார்டு வானத்தின் உச்சியில் எம்பி, வாயுவேகமாகப் பறந்து செல்வது அதிசயத்திலும் அதிசயம்.

விமானத் தயாரிப்பில் நவீன வசதிகள் பெருகப் பெருக அதன் தயாரிப்புச் செலவும் பெருகியது. பிரிட்டிஷ், பிரான்ஸ் நாட்டுத் தயாரிப்பாளர்களுக்கு 10 மில்லியன் பிராங்க் செலவு பெருகியது.

கான்கார்ட் விமானம் உலகில் பல நாடுகளை இணைக்கப் புறப்பட்டது. 1976–ம் வருஷம் ஜனவரி 21–ந்தேதி பாரீஸிலிருந்து ரியோடிஜெனீரோவுக்கு ஏர்பிரான்ஸ் கான்கார்ட் விமானம் பறந்தது. பிரிட்டிஷ் விமான சர்வீஸில் லண்டன் — டாஹுரீன் இணைப்பு ஏற்பட்டது. பிறகு பாரீஸ்—வாஷிங்டன், பாரீஸ் — நியூயார்க், டாரீஸ் — மெக்ஸிகோ என்று கான்கார்ட் விமானம் பறக்கத் தொடங்கியது. 1979–ம் வருஷம் கான்கார்ட் விமானம் ரிகார்டு கண்டது. 722மணி நேரம் கான்கார்ட் விமானங்கள் பறந்து 10.3 மில்லியன் கிலோ மீட்டர் தூரங்களைக் கடந்தது அதன் சரித்திர ரிகார்டு.

சார்ல்ஸ் டிகால் இருநூறு தொழில் நுணுக்க நிபுணர்களும் 30 விமானப் போக்குவரத்து கண்ட்ரோலர்களும், கான்கார்ட் உலகில் மிகச் சிறந்த போக்குவரத்து சாதனம் என்பதை நிரூபித்துப் பெருமையுற்றிருக்கிறார்கள்.

சூப்டர்சானிக் கான்கார்ட் விமானத்தில் 4 ரோல்ஸ் ராய்ஸ் டர்போ ஜெட்களும் உள்ளன. காலியான கான்கார்ட் விமானம் 80 டன் எடை கொண்டது. கான்கார்ட் விமானத்தில் எரிபொருள் சேமிப்புச் சாதனங்களுடன் 6500 கிலோ மீட்டர் தூரத்துக்கு 3 மணி 3 நிமிஷங்கள் நிற்காமல் பறக்கும் வசதி உண்டு.

கான்கார்ட் விமானத்தில் காப்டன், உப விமானி, தொழில் நுணுக்க அதிகாரி இருப்பார்கள். உபசரிப்புப் பணிக்கு 3 உபசரிணிகளும் 2 ஸ்டூவர்ட்களும், ஒரு காப்டனும் இருப்பர். கான்கார்ட் விமானத்தின் விலை சுமார் 400 மில்லியன் பிராங்குகள். வாயுவேக, மனோவேகமாகச் சொகுசாகப் பறப்பதற்குக் கான்கார்ட் விமானம் இன்று உலகில் பிரசித்தி பெற்று வருகிறது.

—பி. எஸ். மணி

வாயிலே என்ன?

''எந்தக் கேள்வி கேட்டாலும் வாயைத் திறந்து பதில் சொல்லலாமே. 'கம்'முன்னு இருக்கியே, வாயிலே என்னடா வச்சிருக்கே?''

'' 'சூயிங் கம்', சார்!''

—கடலூர் கன்னியப்பன்



குட்டி பாகவதர்!



“அதோ கீர்த்தனாரம்பத்திலே...” என்று ஆரம்பித்துக் கணீரென்ற குரலில், கதாகாலட்சேபம் செய்து வரும் இதோ இந்தக் குட்டி பாகவதர் பெயர் 'வெங்கடகிருஷ்ணன்.'

பத்து வயதுதான் ஆகிறது. இதற்குள் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட காலட்சேப நிகழ்ச்சிகளை நடத்திப் பலருடைய பாராட்டுக்களையும், பல பரிசுகளையும் பெற்றுள்ளான். 'ராமஜனனம்,' 'கிருஷ்ண லீலா', 'சேஷாத்ரி சுவாமிகள் சரிதம்' என்று பல தலைப்புக்களில் காலட்சேபம் செய்துவரும் இந்தக் குட்டி பாகவதர், குரோம்பேட்டையிலுள்ள விவேகானந்தா நர்சரியில் ஐந்தாவது வகுப்பில் படித்து வருகிறான். பள்ளியிலும் ஹீரோதான்! படிப்பு, விளையாட்டுப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி எல்லாவற்றிலும் முதலிடம் பெறுகிறான்!

சரி, இந்தக் குட்டி பாகவதரின் இந்த வளர்ச்சிக்குக் காரணம் யார்?

“இவன் அப்பாதான்!” என்கிறார் இவன் தாயார். சிறுவயது முதலே கிருபானந்தவாரியார், கீரன் போன்றவர்களின் கதாகாலட்சேபங்களை விரும்பிக் கேட்கும் இவனது ஆர்வத்தை வளர்க்க விரும்பினார் இவன் தந்தையார் திரு. சீனுவாசன் அவர்கள். அவரே இவனுக்குக் குருவாக இருந்து காலட்சேபங்களைப் பயிற்றுவித்தாராம். தம்முடைய மகன் சிறந்த காலட்சேப பாகவதராக வரவேண்டும் என்று கனவு கண்ட அவரை விதி விட்டு வைக்கவில்லை.


ஆம், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட அந்தத் தந்தை, தமது அலுவலுக்குப் புறப்பட்டுச் செல்லும் வழியில் விபத்துக்குள்ளாகி மாண்டு விட்டார்!


“நன்றாகப் படித்துப் பெரிய என்ஜினீயராக விரும்புகிறேன்” என்று தன் லட்சியத்தைக் கூறுகிறான் இச்சிறுவன்.

“என் கணவர் விரும்பியது போல, பெரிய பாகவதராக இவன் விளங்க வேண்டும்” என்று ஆசைப்படுகிறார் இவன் தாய்.

பெரிய என்ஜினீயராக இருந்து கொண்டே, பெரிய பாகவதராகவும் விளங்க முடியாதா, என்ன? மகன், தாய் இருவரின் ஆசையும் நிறைவேற வாழ்த்துவோம்.

பேட்டி: புகைப்படம்: வி. தியாகு.





இளமையில் இவர்கள்

மாணவ — ஆசிரியர்:

ஆறுமுக நாவலர் மிகப் பெரிய தமிழறிஞர். ஏட்டிலிருந்து பல நூல்களை அச்சிட்டவர்; பல புத்தகங்களை எழுதியவர்; பல மேடைகளில் மிகச் சிறப்பாகப் பேசியவர்; சைவமும் தமிழும் தழைக்க அரும்பாடு பட்டவர்.

இலங்கையில் யாழ்ப்பாணத்தில் பிறந்த இவர், ஒன்பது வயதுச் சிறுவனாக இருந்தபோது, இவருடைய அப்பா இறந்து விட்டார். அப்பா ஒரு நல்ல நாடக ஆசிரியர். பல நாடகங்களை எழுதிப் புகழ் பெற்றவர். அவர் ஒரு நாடகத்தை எழுதிக்கொண்டிருந்த போது, எமன் அவரது உயிரைக் கொண்டு போய் விட்டான்!

''ஐயோ, இப்படி நாடகத்தை முடிப்பதற்குள் இவரது ஆயுள் முடிந்து விட்டதே!'' என்று சொல்லிச் சொல்லி எல்லாரும் வருந்தினார்கள். அப்பா முடிக்காமல் விட்ட நாடகத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்று நினைத்தார் ஆறுமுகநாவலர்.

அரைகுறையாக இருந்த அந்த நாடகத்தை ஆறுமுகநாவலர் பல முறை படித்தார். பிறகு, தாமே உட்கார்ந்து எழுதத் தொடங்கினார்.



ஒரு வழியாக எழுதி முடித்தார். அண்ணனிடம் கொண்டு போய்க் காட்டினார்.

தம்பி எழுதிய பகுதியைப் படித்ததும், அண்ணனுக்கு அளவில்லாத மகிழ்ச்சி! ''தம்பி, அப்பா எப்படி எழுதுவாரோ அப்படியே எழுதியிருக்கிறாயே! அவர் ஆன்மா நிச்சயம் சாந்தி அடையும்'' என்று கூறித் தம்பியைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

ஆறுமுகநாவலருக்கு இளமையிலே படிப்பதில் ஆர்வம் மிகுதியாக இருந்தது. எப்போதும் படித்துக்கொண்டே இருப்பார். அத்துடன் கோயில்களில் நடைபெறும் புராணச் சொற்பொழிவுகளை அக்கறையோடு கேட்பார்.

அந்நாளில் பார்சிவல் துரை என்பவர் ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி வந்தார். அதிலே நாவலர் சேர்ந்து படித்தார். அப்போதே இவருக்குத் தமிழிலே நல்ல புலமை இருந்தது. ஆங்கிலத்தையும் மிக எளிதாகக் கற்று வந்தார்.

இவரது திறமையைக் கண்ட பார்சிவல் துரை, கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலமும், மேல் வகுப்புகளுக்குத் தமிழும் கற்றுக் கொடுக்கும்படி இவரிடம் சொன்னார். மாணவராயிருந்து கொண்டே இரு மொழிகளிலும் ஆசிரியராகப் பாடம் நடத்தி வந்தார்.

பதின்மூன்றாவது வயதிலே மாணவ - ஆசிரியராக விளங்கிய இவரிடம் அந்த பார்சிவல் துரை தமிழ் கற்றுக் கொண்டார். தமிழை முறையாக அவர் கற்றுக் கொண்டு, பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்து வந்தார். அவருக்குப் பெரிதும் துணை புரிந்தவர் ஆறுமுக நாவலரே!

பார்சிவல் துரைக்குத் துணை செய்த போதுதான் 'ஆறுமுக நாவலருக்கு — நாமும் பார்சிவல் துரையைப் போல,

நம் சமயத்தை வளர்க்க வேண்டும்' என்ற உறுதி பிறந்தது. பள்ளிப் பிள்ளைகளுக்காகப் பால பாடங்களை எழுதியதோடு, பெரிய புராண வசனம், திருவிளையாடற்புராண வசனம்போன்ற நூல்களை எழுதினார். யாழ்ப்பாணத் தில் 'சைவப் பிரகாச வித்தியாசாலை' யைத் துவக்கினார். இலங்கையிலும், தமிழ்நாட்டிலும் பல கூட்டங்களில் பேசினார்; சைவ சமயத்தின் பெருமை களை எடுத்துக் கூறினார். இவரது சொற்பொழிவின் சிறப்பை உணர்ந்த திருவாவடுதுறை, ஆதீனம், இவரது 27—வது வயதில் 'நாவலர்' என்ற சிறப்புப் பட்டத்தை இவருக்கு,வழங்கிப் பாராட்டியது.

வேண்டாத நாளில் பிறந்த பிள்ளை!

மே மாதம்.

13—ஆம் எண்,

இவையெல்லாம் ஆங்கிலேயருக்குப் பிடிக்காதவை. ஆனால், அந்த மே மாதத்தில், 13—ஆம் தேதியில் பிறந்த ஓர் ஆங்கிலக் குழந்தையால் உலகத் திற்கே பெரிய நன்மை ஏற்பட்டது.

முன்பெல்லாம் மலேரியா நோயினால் ஆண்டுதோறும் லட்சக்கணக்கானவர் கள் அவதிப்பட்டார்கள். ஏராளமான வர்கள் இறந்து போனார்கள். அந்த நோயை ஒழிப்பதற்குத் தமது ஆராய்ச்சி மூலம் வழி கண்டுபிடித்து, நோபல் பரிசு பெற்றவர்தான் மே மாதம் 13—ஆம் தேதி பிறந்தவர்! அவர் பெயர் சர் ரொனால்டு ராஸ். ஆங்கிலேயராயிருந்தும் அவர் பிறந்தது நம் தேசத்தில்தான்!

ராஸின் அப்பா இந்தியாவில், ஆங்கிலப் படையின் தளபதியாக இருந்தார். வட இந்தியாவிலுள்ள அல்மோரா நகரில் பிறந்த ராஸ், இங்கிலாந்தில் இருந்தபோது, அவ ருடைய மாமா அவருக்கு ஒரு பச் சோந்தியைப் பரிசாகக் கொடுத்தார். ராஸ் அந்தப் பச்சோந்தியிடம் மிகவும் அன்பாக இருந்தார். அது குளிரால் நடுங்குவதைக் கண்டு, அதற்காகத் தோட்டத்திலே ஒரு கண்ணாடி வீட்டை அமைத்தார். அதற்குள்ளே சில செடி கொடிகளையும் வைத்தார். தினமும் ராஸும் அவர்கள் வீட்டுத் தோட்டக் காரனும் சேர்ந்து, அந்தக் கண்ணாடி வீட்டின் வெளிப்புறத்திலே 'கொதி நீரை ஊற்றுவார்கள். இதனால், கண்ணாடி வீட்டுக்குள் வெதுவெதுப் பாக இருக்கும்; குளிர் தெரியாது. ஓந்தி அதற்குள் ஓடி ஆடித் திரிவதைக் கண்டு ராஸ் மகிழ்ச்சி அடைவார்.

ஒருநாள் ராஸ் வெளியிலே போயி ருந்த சமயம், தோட்டக்காரன் பச் சோந்தியை வெளியே எடுத்தான். 'குளிர்ந்த நீரை இதன் மேல் ஊற்றி னால் என்ன ஆகும்?' என்று பார்க்க எண்ணினான். ஒரு வாளி நிறையக் குளிர்ந்த நீரைக் கொண்டுவந்து அதன் மேல் ஊற்றினான். அது குளிர் தாங்காமல் துடிதுடித்தது. சிறிது நேரத்தில் இறந்துவிட்டது!

ராஸ் வீடு திரும்பியதும், நேராக ஓந்தி இருந்த கண்ணாடி வீட்டை நோக்கி ஓடினார். அந்த வீட்டை அவர் நெருங்கும்போதே, அவர் கண்களில் தரையில் கிடந்த ஓந்தி தென்பட்டது. அதன் அருகிலே சென்று அதைக் கையில் எடுத்துப் பார்த் தார். ஆடாமல், அசையாமல், மூச்சு விடாமல் அது இருந்ததைக் கண்ட பிறகே அது இறந்து விட்டது என் பதை அறிந்தார்.

''எப்படி இது வெளியில் வந்தது? யார் இதைக் கொன்றார்கள்?'' என்று கதறியபடி கண் கலங்கினார்.

உடனே தோட்டக்காரன் ஓடிவந்து நடந்ததைக் கூறி மன்னிப்புக் கேட் டான்.

''ஐயோ, என் அருமைத் தோழனைக் கொன்று விட்டாயே! உன்னை நான் எப்படி மன்னிப்பேன்?'' என்று கூறிக் க்ண்ணீர் விட்டார்.

சிறிய வயதில், ஓர் ஓந்தி இறந்த தற்காகக் கண்ணீர் விட்டுக் கதறி அழுத அவர், பிற்காலத்தில் பல்லா யிரக்கணக்கான மக்களைக் கண்ணீர் விடாமல், கதறி அழாமல் மலேரியா நோயிலிருந்து காப்பாற்றி விட்டார்!

சிங்கத்தைக் கட்டித் தழுவிய சிறுவன்!

திருவண்ணாமலை என்றதும் 'கார்த் திகைத் தீபம்' நினைவுக்கு வரும்.



அத்துடன் ரமணஆசிரமமும் நினைவுக்கு வரும்.

அந்த ஆசிரமத்திலிருந்த ரமண மகரிஷியைத் தரிசிக்க இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலிருந்து மட்டுமல்ல; உலகின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

உயர்நிலைப்பள்ளியில் ரமணர் படிக்கும் போது, ஆங்கில இலக்கணத்தை அவர் சரியாகப் படிக்கவில்லை என்பதற்காக, அந்த இலக்கணப்பாடத்தை மூன்று முறை வீட்டிலே எழுதிவர வேண்டும் என்று ஆசிரியர் தண்டனை கொடுத்தார். ரமணர் இருமுறை எழுதினார். மூன்றாவது முறை எழுதாமல், நோட்டுப் புத்தகத்தையும் பென்சிலையும் தூக்கி எறிந்துவிட்டு, சம்மணம் போட்டு நிமிர்ந்து உட்கார்ந்தார். கண்களை மூடிக் கொண்டார். வெகுநேரம் அப்படியே இருந்தார். தம்பி பாடம் எழுதாமல், இப்படி இருந்ததைக் கண்ட அண்ணனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''இதெல்லாம் இங்கு எதற்கு?'' என்று கோபத்தில் கூறினார்.

''ஆம், அண்ணா சொல்வதும் சரிதான். இவையெல்லாம் இங்கு எதற்கு? இனி நாம் இங்கு இருக்கக் கூடாது. நேராகத் திருவண்ணாமலைக்குச் செல்வதுதான் சரி'' என்ற முடிவுக்கு ரமணர் வந்தார்.

பள்ளிச் சம்பளம் கட்டுவதற்காக அத்தை தந்த ஐந்து ரூபாயில், மூன்று ரூபாயை எடுத்துக் கொண்டார். ஒரு கடிதம் எழுதினார். ''நான் தந்தையைத் தேடி இந்த இடத்தை விட்டுப் போகிறேன். இது நன்மைக்காகவே. யாரும் கவலைப்படவும் வேண்டாம்; என்னைத் தேடி, செலவு செய்யவும் வேண்டாம்'' என்று எழுதி, அதில் கையெழுத்துப் போடவேண்டிய இடத்தில் ஒரு கோட்டைக் கிழித்தார். கடிதத்தை மடித்து அத்துடன் கையிலே மீதியிருந்த இரண்டு ரூபாயையும் வைத்துவிட்டுப் புறப்பட்டார்.

மிகுந்த சிரமத்துடன் திருவண்ணாமலையை அடைந்தார். அங்கு கோயிலுக்குள் சென்று அருணாசல ஈஸ்வரர் சன்னிதியை நெருங்கினார். அப்போது அங்கு யாருமே இல்லை. ஓடிப்போய், லிங்கத்தைக் கட்டித் தழுவிப் பரவசம் அடைந்தார்!

கோயிலை விட்டு அவர் வெளியில் வரும்போது, ''ஏன் தம்பி, முடி இறக்க வேண்டுமா?'' என்று ஒருவர் கேட்டார். உடனே, தமது நீண்டு





கருகரு என்று வளர்ந்திருந்த முடியை ரமணர் எடுக்கச் சொன்னார். உடனே குளத்தில் சென்று அவர் குளிக்கவில்லை. மழை பெய்து அவரை நன்கு குளிப்பாட்டி விட்டது. பிறகு, அவர் தம்முடைய வேட்டியின் ஒரு பகுதியைக் கிழித்துக் கோவணமாகக் கட்டிக் கொண்டு மற்றப் பகுதியைத் தூக்கி எறிந்தார்.

கோவணத்தைக் கட்டிக் கொண்டு ஒரு சிறுவன் தெருவிலே போனால், குறும்புச் சிறுவர்கள் சும்மா இருப்பார்களா? 'பைத்தியம், பைத்தியம்' என்று கேலி செய்தார்கள். ரமணர் பதில் ஏதும் கூறாமல் போவதைக் கண்டதும், ''டேய், இவன் ஊமைப் பைத்தியம்டா!'' என்று கூறிக் கற்களையும், உடைந்த ஓடுகளையும் அவர் மீது எறிந்து தொல்லை கொடுத்துவந்தார்கள்.


சில நாட்களுக்குப் பிறகு, அவர் எங்கே சென்றார் என்பது யாருக்குமே தெரியவில்லை.

ரமணர் அங்கே பாதாளலிங்கம் இருந்த இடத்திற்குச் சென்று தியானத்தில் ஆழ்ந்து விட்டார்! சாப்பிடவில்லை; படுக்கவும் இல்லை. ஆடாமல், அசையாமல் கண்களை மூடித் தியானத்திலே இருந்தார். அப்போது எறும்புகளும், ஈக்களும், கறையான்களும், கொசுக்களும் அவர் உடலிலே ஏறித் தோலைச் சிதைத்தன. அதுபற்றி அவர் கண்டு கொள்ளவே இல்லை. அந்த இடம் எப்போதுமே இருள் சூழ்ந்திருக்கும். எனவே, யாரும் அங்கே செல்லவில்லை.

சில நாட்கள் சென்ற பிறகு, திருவண்ணாமலையிலிருந்த சேஷாத்ரி சுவாமிகள் என்ற மகான் மூலமே இச்செய்தி தெரிய வந்தது. பிறகுதான் ரமணரின் பெருமை அந்த ஊராருக்குத் தெரிந்தது; அதன் பிறகு, உலகத்தாருக்கும் தெரியத் தொடங்கியது!

திருக்குறள் புதிர்






மேலே இருக்கும் இரு படங்களைப் பார்த்ததுமே, உங்களுக்கு இரண்டு குறள் பாடல்கள் நினைவுக்கு வந்திருக்க வேண்டுமே! நினைவில் வந்த பாடல்களை ஒரு தாளில் எழுதிக் கொண்டு 48 ஆம் பக்கம் பாருங்கள். சரியாக இருந்தால், உண்மையிலே நீங்கள் மிகவும் கெட்டிக்காரர்கள்தான்!



''அப்பா, இன்னிக்கு ராத்திரி மதகடிப்பட்டிக்கு நம்ம லாரி செங்கல் ஏத்திக்கிட்டுப் போகுதாமே. நானும் போய் வரட்டுமா?'' என்று கேட்கிறான் வீராசாமி. ''லீவுக்கு அங்கே போய், போன வாரம் தானேடா திரும்பி வந்தாய்?'' என்று கேட்கிறார், செங்கல் சூளை முதலாளி செல்லச்சாமி.



''நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை தானேப்பா. ராத்திரி லாரியிலே போய் அத்தை மகன் குப்புசாமியைப் பார்த்துட்டு, உடனே லாரியிலே திரும்பி வந்துடறேன் அப்பா''

''சரி, சரி. போய் வா. அங்கே ரொம்ப நேரம் தங்கிடாமே, நாளை மதியத்துக்குள்ளே திரும்பிடணும்.''

''சரியப்பா.''

அதே-111

கதை: கே. கண்ணுச்சாமி   சித்திரம்: ஜயந்தி




லாரியில் டிரைவர் அருகில் உட்கார்ந்து பயணம் செய்கிறான், வீராசாமி. சிறிது தூரம் சென்றதும், ''என்ன இது! முன் விளக்கு இரண்டிலே ஒண்ணு அணைஞ்சிடுச்சே!'' என்கிறான் வீராசாமி.

உடனே டிரைவர் லாரியை நிறுத்தி, டார்ச் விளக்குடன் கீழே இறங்குகிறார். வீராசாமியும் இறங்குகிறான்.



சிறிது நேரம் டிரைவர் ஏதேதோ செய்து பார்க்கிறார். பிறகு, பல்பைக் கழற்றிப் பார்த்துவிட்டு, ''ஒயர் அறுந்திருக்குமோன்னு நினைச்சேன். அது இல்லை. பல்ப்தான் தீஞ்சு போச்சு'' என்கிறார்.

''ஒரே விளக்கோடு போனால், எதிரே வருகிறவங்க மோட்டார் சைக்கிள் அல்லது ஸ்கூட்டர்னு நினைச்சுடுவாங்க. ஆபத்துத்தான்!'' என்கிறான் வீராசாமி.



"என்ன செய்வது...? வழியிலே எங்கே பல்ப் வாங்க முடியும்?"

"நல்லவேளை. எரியாத விளக்கு இடது பக்கம் இருப்பதால், அதிக பயமில்லை." என்று சமாதானம் கூறி விட்டு வீராசாமியும் லாரியில் ஏறிக் கொள்கிறான்.

மதுகடிப்பட்டியை அடைய இன்னும் 3 கிலோ மீட்டர்கள் இருக்கின்றன. பாதை நல்ல பாதையானாலும் இருபுறமும் அடர்ந்த காடு.



அச்சமயம், திடீரென்று, "ஏய், லாரியை நிறுத்து!" என்ற குரல் கேட்கிறது.

"திருடனாக இருக்குமோ?" என்று பயந்து டிரைவரும் வீராசாமியும் கூர்ந்து பார்க்கிறார்கள். எதிரே ஒரு போலீஸ்காரர் வருவதைப் பார்த்து இருவரும் இறங்கி, லாரியின் முன் புறம் வருகிறார்கள்.




போலீஸ்காரர் அருகிலே வந்து, "ஏ டிரைவர், என்ன இது?ஒத்தைக் கண் லாரியை இப்படி ஓட்டி வரலாமா? எதிரே கார், வண்டி வந்தால் என்ன ஆகும்?" என்று மிரட்டுகிறார்.

"புறப்படும் போது இரண்டு விளக்குமே எரிஞ்சது. வழியிலே ஒரு பல்ப் நிஞ்ச போச்சது" என்கிறார் டிரைவர்.



"இந்தக் கதையெல்லாம் எங்கிட்டே நடக்காது... உம்... உன் பேரென்ன? உன் முதலாளி யார்? உனக்குத் தண்டனை வாங்கித் தராமே நான் விட மாட்டேன்!" என்கிறார் போலீஸ்காரர்.

"ஐயா, நான் பிள்ளை குட்டிக் காரன்... என்னை மன்னிச்சுடுங்கோ. இனிமேல் இப்படி நடக்காது" என்று கெஞ்சுகிறார் டிரைவர்.



''பாவம், உன்னைப் பார்த்தால் பரிதாபமாயிருக்கு. இந்தத் தடவை மன்னிச்சுடுறேன்... சரி, எடு ஒரு பத்து ரூபாயை'' என்று கூறிக் கையை நீட்டுகிறார் போலீஸ்காரர்.

''பத்து ரூபாயா! ரொம்ப அதிக முங்க. அஞ்சு ரூபாய்...''

''அதெல்லாம் முடியாது. பத்து ரூபாய்க்கு, ஒரு பைசா குறைஞ்சாலும், 'சார்ஜ்' பண்ணிடுவேன்!''



''ஐயையோ, என்னை மாட்டி வச்சிடாதேங்க'' என்று கூறி, சாப்பாட்டுச் செலவுக்காக மடியிலே வைத்திருந்த பணத்திலே பத்து ரூபாயை எடுத்துக் கொடுக்கிறார் டிரைவர்.

லாரியில் எரிந்த ஒற்றை விளக்கில் நோட்டை நன்றாகப் பார்த்து விட்டு,

''சரி, நீங்கள் போகலாம்'' என்கிறார் போலீஸ்காரர்.

திரும்பிப் பார்க்கிறார், டிரைவர்.



அருகில் நின்ற வீராசாமியைக் காணோம்!

அதேசமயம், 'மடேல்' என்று ஒரு சப்தம் கேட்கிறது. அதைத் தொடர்ந்து ''ஐயோ! அப்பா!'' என்ற அலறலும் கேட்கிறது. டிரைவர் திகிலுடன் பார்க்கிறார். தலையிலே செங்கல் தாக்கி, போலீஸ்காரர் துடிதுடித்துத் தரையிலே விழுவது தெரிகிறது!



டிரைவர் போலீஸ்காரர் அருகிலே ஓடி, மூக்கிலே கை வைத்துப் பார்க்கிறார். மூச்சு இருக்கிறது.

இதற்குள் லாரிக்குள் பாய்ந்து ஏறி, அங்கிருந்த கயிற்றை எடுத்து வருகிறான் வீராசாமி. போலீஸ்காரரின் கைகளையும் கால்களையும் இறுக்கிக் கட்டுகிறான். டிரைவர், ''என்ன தம்பி இதெல்லாம்?'' என்று புரியாமல் கேட்கிறார்.



"இவன் போலீஸ்காரனே இல்லே. திருடன்!" என்கிறான் வீராசாமி.

"என்ன திருடனா! உனக்கு எப்படித் தெரியும்?"

"போன வாரம் மதகடிப்பட்டியிலிருந்து ஊருக்குத் திரும்பி வந்தேனே, அன்றைக்கு ஒரு போலீஸ்காரர், என் மாமாவிடத்திலே வந்து, "சார், நான் பஸ்ஸிலே வரும்போது என்னுடைய பெட்டியிலிருந்த உடுப்பு, தொப்பியெல்லாம் பெட்டியோடே காணாமல் போயிட்டுது சார்!" என்று அழுதாரு."



"அடேடே, உன் மாமாதான் இன்ஸ்பெக்டர் ரத்தினசாமி என்பதையே மறந்துட்டேனே!"

"உடனே என் மாமா, 'ஏ 111, இப்படி ஒரு போலீஸ்காரன் பறி கொடுக்கலாமா?... சரி, எப்படியும் திருடினவனைத் தேடி உடனே கண்டு பிடிக்கணும். அதுவரை நீ வேலைக்கு வர வேண்டாம். மற்றவங்களையும் அனுப்பித் தேடச் சொல்றேன்' என்றார்"



"நான் லாரி வெளிச்சத்திலே நல்லா பார்த்தேன். அதே எண் 111. நல்லாத் தெரிஞ்சுது. ஆளைக் கூர்ந்து பார்த்தேன். உடுப்பை இழந்த போலீஸ்காரர் நல்ல சிகப்பா, உயரமாயிருப்பார். இவன்தான் கருப்பா, குள்ளமா, குண்டா இருக்கிறானே! இவனைத் தூக்கி லாரியிலே போட்டு என் மாமாவிடம் கொண்டு போய்ச் சேர்த்திடுவோம்" என்றான் வீராசாமி.

அப்படியே அவனை லாரியில் கொண்டு சென்றனர்.



இன்ஸ்பெக்டர் பார்க்கும்போதுதான் மூர்ச்சை தெளிந்து விழித்துப் பார்க்கிறான் அந்தப் போலி போலீஸ்காரன்!

அவன் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான். மன்னிப்புக் கேட்கிறான்.

வழியிலே நடந்ததையெல்லாம் விவரமாக இன்ஸ்பெக்டரிடம் கூறுகிறார் லாரி டிரைவர்.

அப்புறம்...? அப்புறம் என்ன? வீராசாமிக்குப் பாராட்டுக்கு மேல் பாராட்டு குவிகிறது!

நெடுங்கதை

ஜில் ஜில் பூனை சென்றது எங்கே?

தங்கமணி



மாலை நேரம். அம்மா, வாசலைப் பெருக்கித் தண்ணீர் தெளித்துக் கோலம் போட்டுவிட்டு வீட்டுக்குள் சென்றாள்.

திண்ணையில் உட்கார்ந்திருந்தாள், சூடாமணி. அவளது மடியில் படுத்துக் கிடந்தது. ஒரு பூனை. கருப்பு மையில் முழுகி எழுந்தது போல், கன்னங்கரேலெனக் காணும் அந்தக் கடுவன் பூனையின் பட்டு மேனியைப் பரிவுடன் வருடினாள். வருடியவாறே அந்தப் பூனையின் வசீகரமான நீல நிற விழிகளையும், தங்கக் கம்பிகள் மாதிரி வாய்க்கு மேல் காணும் மீசையையும் பார்த்தாள். பார்த்துக் கொண்டே பக்கத்தில் அமர்ந்திருந்த தங்கவேலுவைக் கேட்டாள்: ''ம்... அப்புறம் என்ன அண்ணா...?''

தங்கவேலு சொன்னான்: ''அப்புறம்... அந்த எழுத்தாளர் நல்ல அறிவாளி. அவர் ஒரு யந்திரப் பிள்ளையாரை உருவாக்கினார். அந்தப் பிள்ளையாருக்குப் பேண்டும் சட்டையும் அணிவித்து. ரொம்பக் கவர்ச்சியாக வைத்திருந்தார். அந்த அதிசயப் பிள்ளையாரின் சட்டைப் பையில், ஒரு நாலணா நாணயத்தைப் போட்டுவிட்டு, என்ன கேள்வி கேட்டாலும் – விஞ்ஞானத்தைப் பற்றிய கேள்விகளுக்கு மட்டும் – சட்டென்று அவர் பதில் அளிப்பார். நான்கூட அந்த விசித்திரப் பிள்ளையாரை ஒரு கேள்வி கேட்டேன்...''

மறுநொடி, 'மியாவ்...' என்றவாறே மடியை விட்டுப் புரண்டு எழுந்தது, கருப்புப் பூனை. உடனே, ''ஏ ஜில்ஜில்... சும்மா இரு...'' எனச் செல்லமாக அதட்டியபடியே பூனையின் மேனியை இதமாகத் தடவினாள். தடவிக் கொண்டே தங்கவேலுவைப் பார்த்தாள். பார்த்தவாறே, சூடாமணி ஆர்வத்துடன் வினவினாள்: ''அந்த விஞ்ஞானப் பிள்ளையாரை நீ என்ன கேட்டாய், அண்ணா .?''

''உலகிலேயே ரொம்பப்பெரிய...ய்ய கடிகாரம் எது? – என்று கேட்டேன். கேட்ட நொடியே, அந்த நூதனப் பிள்ளையார் கூறினார்: அமெரிக்காவிலுள்ள நியூயார்க் நகரத்தில், வாரன் டேவி என்னும் விஞ்ஞானியால் அமைக்கப்பட்டிருக்கிற கடிகாரந்தான், உலகிலேயே மிகப் பெரிய கடிகாரமாகும்! அந்தப் பிரும்மாண்டமான கடிகாரத்தின் முகப் பரப்பு, 1963 சதுர அடிகள்! 27 அடிகள், 3

அங்குல நீளமுள்ள பெரிய முள், 2200 பவுண்டு எடையுள்ளது! 19 அடிகள், 8 அங்குல நீளமுடைய சின்ன முள்ளின் எடை....'' தங்கவேலு சொல்லி முடிப்பதற்குள்—

''ஹே பில்லி!... மேரா ஜில் ஜில்!... டுநர் ஹாவ்...'' எனக் கீச்சுக் குரலில் எழுந்த இந்தி மொழிச் சொற்களைக் கேட்டவுடன் —

தங்கவேலு, சூடாமணியுடன் அந்த நீலவிழி ஜில்ஜில்லும் தெரு வாசலைக் கவனித்தது. வாசலில், ரோஜா நிற பைஜாமாவும், முழங்கால் அளவு நீண்ட ஆப்பிள் நிற ஜிப்பாவும், கழுத்தைச் சுற்றிப்பொன்னிறத் துவாலையும் அணிந்து கொண்டிருந்த நர்கீஸ், அவர்களைப் பார்த்தாள். சிரித்தாள்.

''ஹரே டங்வெல்... தும்கு பேரா பாய் புலாயா, ஹாவ்...'' எனச் சிரித்துக் கொண்டே சொன்னாள்.

மடியை விட்டுத் தாவப் போன ஜில்ஜில்லை இரு கைகளாலும் பூப்போல நெஞ்சில் அணைத்தவாறே, திண்ணையை விட்டு இறங்கினாள் சூடாமணி. நர்கீஸின் இந்திப் பேச்சுப் புரியாமல், தங்கவேலுவைப் பார்த்தாள்.

''அண்ணு... இவள் என்ன சொல்லுகிறாள்...?'' எனக் கேட்டாள்.

''அவளுடைய அண்ணன் பல்வந்த் என்னைக் கூப்பிடுகிறானாம். நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன். நீ இங்கே உட்கார்ந்திரு...'' என்றவாறே திண்ணையிலிருந்து இறங்கினான், தங்கவேலு.

உடனே, ''சூடாமணி... ஜில் ஜில்லைக் கொண்டு வா. அம்மா அதை ரொம்ப நேரமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறாள்...'' என்று சூடாமணியைப் பார்த்துப் புன்சிரிப்புடன் இந்தியில் சொன்னாள், நர்கீஸ்.

அவளது பேச்சைப் புரிந்து கொள்ள முடியாமல், சிரிப்பும் வெறுப்புமாகக் கேட்டாள் சூடாமணி: ''ஏண்டி நர்கீஸ்... பல வருஷங்களாகத் தமிழ் நாட்டில் வாழ்கிறாய்... இன்னமுமா உனக்குத் தமிழில் பேச வரவில்லை...? உன் அண்ணன் பல்வந்த் நன்றாகத் தமிழ் பேசுகிறானே!...''

''டமில் பாஷாமே என்க்கு ஹச்சா போல்வான்...'' என்று சூடாமணியின் பேச்சை அரைகுறையாகப் புரிந்து கொண்ட நர்கீஸ், சிரித்தபடியே சொன்னாள்.

உடனே, ''ஆமாம் போ!... நீ டமில் பாஷாமே ஹச்சா பேசுவான். அந்த டமிலைக் கேட்டுத் தமிழ்ப் பையன் நெஞ்சங் கூசுவான். அப்புறம் தமிழைக் கெடுக்கிற உன் வாயை ஏசுவான்! உம் மூஞ்சியிலே கறுப்புத் தாரைப் பூசுவான்!...'' என்று நர்கீஸின் தமிழைக் கிண்டல் செய்யும் தங்கவேலுவின் தமாஷ் பேச்சைக் கேட்ட சூடாமணி, குலுங்கிச் சிரித்தாள்.

அந்த நொடியே குபீரெனச் சூறாவளி பாய்ந்தது போல வாசலுக்குள் நுழைந்தாள் நரம்புத் தளர்ச்சி நோயாளியான அம்மா. வாசல் அருகில் நின்ற நர்கீஸை அணுகினாள். ''ஏண்டி கழுதை! ஜில்ஜில்லை வாங்கி வா என்று அனுப்பி வைத்தால்... நீ இங்கே வந்து சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறாயா...?'' என்று மழைக் காலத்துத் தொடர் இடி மாதிரி குமுறினாள். குமுறிக் கொண்டே நர்கீஸின் தலையில் 'டங்'கென்று குட்டி விட்டு, முயலைப் பார்த்துப் பாய்கிற




ஓநாய் போலப் பாய்ந்தாள். திகைத்து நின்ற சூடாமணியின் அணைப்பிலிருந்த நீலவிழிப் பூனை ஜில் ஜில்லை, புறாக்குஞ்சைப் பறித்துப் போகும் பருந்தாட்டம் லபக்கெனப் பிடுங்கினான். ''இனிமேல் இந்தப் பூனையைத் தொட்டால் கையை முறித்துப் போடுவேன்!''... என்று பசி எடுத்த வேங்கை மாதிரி உறுமினான். உறுமிவிட்டுப் பூனையோடு ஓடினான். கதிகலங்கித் தவித்து நின்ற நர்கிஸைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியவாறே வாசலைக் கடந்து போனான்.

அப்புறம்... தங்கவேலுவும் சூடாமணியும் கும்மெனச் சூழ்ந்த அமைதியில் கம்மெனக் கிடந்தார்கள். ஓரிரு நிமிஷங்களுக்குப் பிறகு, ஏதேதோ எண்ணிப் பெருமூச்செறிந்த தங்கவேலு, மெல்லிய குரலில் சொன்னான்: ''சூடாமணி, என் வகுப்புத் தோழனான பல்வந்த் அன்று ஒருநாள் சொன்னான்: 'என் அம்மா நரம்புத்தளர்ச்சி நோயாளி. அவளுக்கு அடிக்கடி கோபம் வரும். என் அப்பாவுடன் காரணமில்லாமல் சண்டை பிடிப்பாள். ஆகவே, நீ என் அம்மாவுடன் பழகும் போது ஜாக்கிரதையாகப் பழகு' — என்று என்னை எச்சரித்திருக்கிறான். அதனால்தான், நம்முடைய வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருக்கும் என்னுடைய சிநேகிதன் பல்வந்தை, அவனது வீட்டில் நான் சந்திப்பது இல்லை. அவன் நம் வீட்டுக்கு வந்து நம்முடன் பேசிச் சிரித்து விளையாடி விட்டுப் போவான். ஆனால்... நீதான் அந்த நீலக்கண் ஜில்ஜில்லின் அழகில் மயங்கிப் போய்... சூடாமணி, இனிமேல் அந்த வீட்டுக்குப் போகாதே! அந்தப் பூனையைத் தொடாதே!....''

வருத்தம் நிறைந்த குரலில் சூடாமணி சொன்னாள்: ''அந்தப் பூனை... அந்தப் பில்லி... அந்த ஜில்ஜில்.... ரொம்ப அழகானது!... அதனுடைய பட்டுப் போன்ற கறுப்பு மேனியும், நீல நிறக் கோலிக் குண்டுகளைப் போன்ற விழிகளும்...''

''ஆண்டு முழுவதும் ஓயாமல் மழை பொழியும் பிரதேசம், இந்த உலகத்தில் உண்டு. அது, இந்திய நாட்டில் அசாம் மாநிலத்திலுள்ள காசி மலைகளின் மீதுள்ள சிரபுஞ்சி என்னும் ஊர். அதுபோலவே, காலமெல்லாம் துளி மழையைக்கூடக் காணாத ஊரும் உண்டு. அதுதான்



“ஏண்டி, நமக்கு நாய்க்குட்டி வேணுமா? வாங்கலாமா?”

தென் அமெரிக்காவிலுள்ள பெரு என்னும் நாட்டில், லீமா என்னும் ஒரு சின்னஞ்சிறிய நகரம். அந்த லீமா நகரத்தில் அடிக்கடி பூகம்பம் ஏற்படும். அதனால், லீமா நகர ஜனங்கள் தத்தம் வீடுகளையெல்லாம் களிமண்ணாலேயே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். களிமண் வீடுகளுள்ள அந்த லீமா நகரத்திலே, எப்பொழுதுமே மழை பெய்வது கிடையாது! என்றாலும், மழையையே காணாத அந்த லீமா நகர மக்கள், தண்ணீருக்காக அவஸ்தைப் படுவது கிடையாது. ஏனென்றால், பக்கத்துப் பிரதேசத்தில் உற்பத்தியாகி லீமா நகரத்துக்குள் புகுந்து ஓயாமல் பாய்ந்தோடும் ரிமாக் என்னும் பேராற்றுத் தண்ணீர், அந்த மழை காணா மக்களை மனங் குளிர வைத்துக் கொண்டிருக்கிறது!..''

முழுப் பரீட்சை முடிந்து பத்துப் பன்னிரண்டு நாட்களாயின. அன்று ஞாயிற்றுக்கிழமை. நடுப்பகல். வெய்யிலின் கொடுமை வீட்டுக்குள் தெரியவில்லை. அப்பாவும், சூடாமணியும் வெளியே போயிருந்தார்கள். அம்மா, சமையல் வேலையில் ஆழ்ந்திருந்தாள். கூடத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்து படுத்துக் கொண்டு, ஓயாமல் மழை பொழியும் பிரதேசத்தையும் மழையையே காணாத இடத்தையும் பற்றிய ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தான் தங்கவேலு.

''தங்கவேலு...'' எனத் தழைந்து வந்த குரலைக் கேட்டதும், படிப்பதிலிருந்து முகத்தை நிமிர்த்தினான். வாசலைப் பார்த்தான். வாசலில்,

எதிர்வீட்டு இந்திவாலா — தன்னுடன் ஒன்பதாம் வகுப்பில் கல்வி பயிலும் பள்ளித் தோழனான பல்வந்த், புன்சிரிப்புடன் நின்று கொண்டிருந்தான். அவனைக் கண்ட தங்கவேலு, ''பல்வந்த்... உள்ளே வாடா, என்ன சமாசாரம்?'' என்று குறுநகையுடன் விசாரித்தான். பல்வந்த் பதிலேதும் சொல்லவில்லை. பேசாமல் உள்ளே வந்தான். தங்கவேலுவை அணுகி நின்றான். அங்கும் இங்குமாக எதையோ கவனித்தான்.

''கியாரே தோஸ்த்...'' எனத் தொடங்கினான். ''பல்வந்த்... அங்கும் இங்குமாக எதையோ தேடுகிறாயே? அப்படியும் இப்படியுமாக யாரையோ பார்க்கிறாயே?... எதைத் தேடுகிறாய்? யாரைப் பார்க்கிறாய்? என்னடா விஷயம்?'' என்று இந்தியில் வினவினான், தங்கவேலு.

நொடி நேரம் தயங்கினான்; பெருமூச்செறிந்தான்; தங்கவேலுவைப் பார்த்தான்; என்னவோ ஒரு தவிப்புடன், ''சூடாமணி எங்கே?'' எனக் கேட்டான், பல்வந்த்.

''அவள் அப்பாவுடன் காலையில் போனவள்... இன்னும் வரவில்லை...'' என்று சொன்னான், தங்கவேலு.

பல்வந்த் கேட்டான்: ''சூடாமணி ஜில்ஜில்லை எடுத்துக் கொண்டு போயிருக்கிறாளா?''

தங்கவேலு புரிந்து கொண்டான். ''ஓ!... நீ அந்த நீலவிழிப் பூனையைத்தான் தேடுகிறாயா? ஊஹும்....!



பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு முன்னே, உன்னுடைய அம்மா, ரொம்பக் கோபப்பட்டுப் போய், சூடாமணியிடமிருந்து ஜில்ஜில்லைப் பிடுங்கிக் கொண்டு போனாளே..... அன்றிலிருந்து அந்த அழகிய பில்லியை ரொம்பச் சிரமத்துடன் மறந்து போனாள், சூடாமணி!...'' என்றான், அவன்.

பல்வந்த் வருத்தமும் கவலையுமாகச் சொன்னான்: ''தங்கவேலு... என் அம்மா, அந்த ஜில்ஜில்லை ரொம்ப நேசிக்கிறாள். நாலைந்து வருஷங்களுக்கு முன் என் அப்பா, வியாபார விஷயமாக ஜப்பான் தேசத்துக்குப் போயிருந்தார். அப்போது, ஒரு ஜப்பானிய நண்பர் இந்த காலா பில்லியை (கருப்புப் பூனையை) — நீலக்கண் ஜில்ஜில்லை என் அப்பாவுக்கு அன்பளிப்பாகக் கொடுத்தாராம். என் அப்பா அந்த ஜில்ஜில்லை என் அம்மாவுக்குப் பிறந்த நாள் பரிசாகக் கொடுத்தார். அழகும் கவர்ச்சியும்...''

தங்கவேலு குறுக்கிட்டான்: ''அப்படியென்றால்... வந்து... அந்த ஜில்ஜில்லுக்கு என்ன ஆயிற்று? அது எங்கே?''

''அது எங்கே போயிற்றோ, தெரியவில்லை. எப்படிப் போயிற்றோ, புரியவில்லை. இன்று காலையிலிருந்து அதைக் காணவில்லை. அதைக் காணாமல் என் அம்மா கவலையில் கருகிக் கொண்டிருக்கிறாள்....'' என்று துயரத்துடன் கூறினான்.

"பல்வந்த்... ஜில்ஜில் உங்களுடன் பாசமாகப் பழகி வளர்ந்த பில்லி ஆயிற்றே! அது எங்கே போனாலும் வீட்டுக்குத் திரும்பி வந்து விடும். வருத்தப்படாதே..!" என்று என்னவோ ஆறுதலாகச் சொன்னான், தங்கவேலு.

"என் அம்மா, உங்களுடைய வீட்டில் ஜில்ஜில் இருக்கிறதா எனப் பார்த்து வரச் சொன்னாள். பாவம்! மேரா ஜில்ஜில் கஹாங் கயா?— என்று ஓயாமல் கேட்டுக் கொண்டிருக்கிறாள். அது எங்கே போயிருக்கிறதோ...?" எனப் பெருமூச்செறிந்தவாறே சொல்லிக் கொண்டு அங்கிருந்து மெல்ல நடந்தான் பல்வந்த்.

பழந்தமிழ்ப் பெருமையும், புகழும் பெற்ற மதுரை மாநகரத்தை நோக்கிப் படுவேகத்துடன் பாய்ந்தோடிக் கொண்டிருந்தது, பாண்டியன் எக்ஸ்பிரஸ்!...

பொழுது புலர்ந்து சற்று நேரமாயிற்று. காலை நேரத்தின் இளமை வெய்யிலில் பையப் பைய வெப்பம் ஏறிக் கொண்டிருந்தது. 'குக்கூ..... குக்கூ...'வெனக் கூவியவாறே விரைந்தோடிக் கொண்டிருக்கிற ரயில் பெட்டி ஒன்றினுள், ஜன்னல் ஓரமாக உட்கார்ந்திருந்தான், தங்கவேலு. அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த சூடாமணி, அண்ணனின் மடியில் தலையைச் சாய்த்தவாறு தூங்கிக் கொண்டிருந்தாள். எதிரில் அம்மா, மனைவி இவர்களுடன் உட்கார்ந்திருந்த ஒரு வாலிபருடன் தங்கவேலு பேசிக் கொண்டிருந்தான். அவர் சொன்னார்: "தம்பி, இன்னும் பத்துப் பதினைந்து நிமிஷங்களுக்குள் இந்த ரயில், ஸ்டேஷனை அடைந்து விடும். அதற்குள் உன்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லி விடுகிறேன். 'பனிக்கட்டி மழை, ஆலங்கட்டி மழை, மீன் மழை, தவளை மழை எல்லாம் பொழியும் என்கிறார்களே?... அவ்வாறு பொழிவது உண்மையா?', எனக் கேட்டாயே, ஆம்... அவ்வாறு பொழிவது உண்மையே! பனிக்கட்டி மழையும், ஆலங்கட்டி மழையும் மழைக்காலங்களில் பொழியும். ஆனால் மீன் மழையும், தவளை மழையும் சமுத்திரங்களின் நீரோட்டத்தில் திடீரென ஏற்படும் கோளாறுகளால் உண்டாகின்றன. நீர்த் திவலைகள் கொந்தளித்துக் குமுறி எம்பிக் குதித்துக் குபீரென்று மேலே மேலே ஓங்கிச் சுழன்று, பிரும்மாண்டமான நீர்த் தூணாக உயர்ந்து, கருமேகங்களுடன் இணைந்து, இழைந்து இசைந்து மழையாய்க் கொட்டும். அத்தகைய மழைகளில், கடலின் சிறு மீன்களும், கடலில் கலக்கும் ஆறுகளின் தவளைகளும், நத்தைகளும் கொட்டும்! இத்தகைய அதிசய மழை, வெய்யில் காலத்திலேதான் பெய்யும்!..."

தங்கவேலு சிரித்தான். "அண்ணா..! இந்த ரயில் பயணத்தில் பொழுது போனதே தெரியவில்லை. இரவு முழுவதும் உங்களுடைய அறிவார்ந்த பேச்சுக்களைக் கேட்டுப் பயனடைந்தேன்!" என்று அந்த வாலிபரைப் பார்த்துப் புன்சிரிப்பும், நன்றிக் கனிவுமாகச் சொன்னான்.

அடுத்தவினாடி, "ஏண்டா கண்ணு.... நீயும் உன் தங்கச்சியும் மட்டுந்தான் மதுரைக்குப் பயணம் செய்கிறீர்களா?" என்று தங்கவேலுவைக் கேட்டாள், வாலிபரின் தாய்.



எத்தனை கோடி எலிகளடா!

இந்தியாவிலுள்ள வீட்டு எலிகளையும், வயல் எலிகளையும் கணக்கெடுத்தால், ஏறத்தாழ 2400 கோடிகள் இருக்குமாம்! வீட்டு எலிகள் உணவுப்பொருள்கள், துணிகள், புத்தகங்கள் முதலியவற்றை நாசமாக்குகின்றன. வயல் எலிகளோ பயிர்களை நாசமாக்குகின்றன.

2400 கோடி எலிகளும் நாசமாக்கும் பொருள்களின் மொத்த மதிப்பு? — எத்தனை கோடி ரூபாய்களாக இருக்குமோ?

''ஆமாம் பாட்டி... நானும் என் தங்கச்சியும் மட்டும் ஏற்கெனவே இரண்டு தடவை மதுரைக்கு வந்து போயிருக்கிறோம். இது மூன்றாவது பயணம். ஒவ்வொரு கோடை விடுமுறை நாளிலும் இப்படி வருவோம்'' பேசிக் கொண்டிருந்த தங்கவேலு, ஜன்னல் வழியே தூரத்தில் காணும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலின் கோபுரங்களைப் பார்த்தான். பார்த்ததும் பேச்சை நிறுத்திக் கொண்டான். அவனுடைய அப்பா, ரயில் பயணங்களின் போது பகலில் கோபுரங்களையும், இரவில் கோபுரங்களின் விளக்கு வெளிச்சத்தையும் பார்த்தால், கை குவித்துக் கும்பிடுவார். அவ்வாறே, இப்போது இவனும் கும்பிட்டான்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு, மதுரைப் புகைவண்டி நிலையத்திற்குள் எக்ஸ்பிரஸ் நுழைந்தது. தண்டவாளங்களில் சக்கரங்கள் அழுந்தித் தேய, 'டர்ர்...'ரெனச் சத்தமிட்டுக் கொண்டு நின்றது. உடனே, மற்றப் பயணிகளைப் போலவே தங்கவேலுவும் பரபரப்படைந்தான். தனது மடியில் தலை சாய்த்திருந்த சூடாமணியைக் கூப்பிட வாயைத் திறந்தான். அதற்குள், தன்னிச்சையாகத் தூக்கம் கலைந்து, ''அண்ணா...'' எனக் கூப்பிட்டபடியே எழுந்தாள். எழுந்ததும், தூக்க மயக்கத்துடன் சொன்னாள்: ''அண்ணா.... அந்த ஜில்ஜில் பீங்கான் கோப்பையில் பால் குடித்...''

''ஹும்!... அந்த ஜப்பான் பூனையை நீ மறந்து போயிருப்பாய் என்றல்லவா நினைத்தேன்? ஆமாம்... கனவு கண்டாயா, சூடாமணி...?'' எனக் கேட்டான், தங்கவேலு.

''ஆமாம் அண்ணா. வந்து... அந்த ஜில்ஜில்லும் நானும்...'' எனத் தொடர்ந்த சூடாமணியின் கனவுக்குள் குறுக்கே வெட்டிப் பாய்ந்தான், தங்கவேலு: ''ம்... ம்... பையை எடுத்துக் கொண்டு புறப்படு. பையில் அக்காவின் குழந்தைக்கு ஏரோப்ளேன் பொம்மை...''

''ஓ... அது பத்திரமாயிருக்கிறது. உன்னுடைய பை...''

''என்னுடைய பை இருக்கிறது. ஆனால், அதிலிருந்த ரொட்டி, பிஸ்கோத்து, பலகாரமெல்லாம் ஓகயா! நீ தூங்கிக்கொண்டு வந்தாய். நான் முழித்துக்கொண்டு வந்தேன். சும்மாயிருக்க முடியுமா...?'' எனச் சொல்லியவாறே தனது காலிப் பையை உதறிக் கொண்டு சூடாமணியுடன் புறப்பட்டான், தங்கவேலு.

சற்று நேரத்துக்குள் —

இருவரும் மீனாட்சியம்மன் கோவில் தெற்கு மாசி வீதியிலுள்ள பெரியப்பாவின் வீட்டுக்கு வந்தார்கள். லேசாகச் சாத்திக் கிடந்த வாசல் கதவை மெல்லத் திறந்தான் தங்கவேலு. திறந்த நொடியே —

''மியாவ்ங்ங்...''

இந்தச் சத்தத்தைக் கேட்டதும் —

கீழே விழுந்த பந்து போல் துள்ளிக் குதித்தன, உள்ளங்கள்!.... பரபரப்பும் துருதுருப்புமாய்த் தங்கவேலுவை நெட்டித் தள்ளிக் கொண்டு சூடாமணி பாய்ந்தாள். கதவைப் பரக்கத் திறந்து கொண்டு பார்த்தாள்.

ஆ! உள் வாசலுக்கு நடுவில் அது படுத்துக் கிடந்தது!

எது...?

அந்தப் பூனை...!

எந்தப் பூனை...?

நர்கிஸ் வீட்டு பில்லி!

நீலவிழி ஜில்ஜில்!...

அதைக் கண்டதும்–

தங்கவேலு: ''ஏ... காலர் பில்லீ!...''

சூடாமணி: ''ஓ... ஜில்ஜில்!...''

இவர்களைப் பார்த்ததும்–

அது: 'மியாவ்ங்ங்!...'

அடுத்த நொடியில் —

குபீரெனத் தாவிப் பாய்ந்தோடினாள். ஜில்ஜில்லை இருகைகளாலும் வாரியெடுத்து நெஞ்சோடு அணைத்துக் கொண்டாள், சூடாமணி. தங்கவேலு

"என் பூனை எலியைச் சரியாப் பிடிக்க மாட்டேங்குது டாக்டர். கண் தெரியல்லே போலேயிருக்கு. கண்ணாடி போட்டு விடுங்கோ!"





அரசாண்ட பாலர்கள்!

என்ன! பாலர்கள் அரசாண்டார்களா?

ஆம் ஆனால், நீங்கள் நினைப்பது போல் அவர்கள் குழந்தைகளல்ல; அவர்கள் வங்காளத்தில் அரசாண்ட ஓர் அரச பரம்பரையினர்:

கோபாலன்	நயபாலன்
தருமபாலன்	விக்கிரமபாலன்
தேவபாலன்	சூரபாலன்
மகிபாலன்	ராமபாலன்

என்பவை அவர்களது பெயர்கள். 'பாலன்' 'பாலன்' என்று ஒவ்வொரு பெயரும் முடிந்ததால், 'பாலர் பரம்பரை' என்று பெயர் வைத்து விட்டார்கள்!

வுக்குப் பேராச்சரியம் மண்டைக்கு ஏறிச் சுழன்றது! ''இந்த ஜில்ஜில் சென்னையிலிருந்து மதுரைக்கு எப்படி வந்தது...?'' என்று மனத்துக்குள் அசைபோட்டவாறு திகைத்துத் தவித்து நின்றான்.

அந்தச் சமயத்தில்—

வாசலில்எழுந்த பேச்சுச் சத்தத்தைக் கேட்டு, சமையல் அறையில் தோசை சுட்டுக் கொண்டிருந்த அவர்களின் பெரியப்பா மகளான மீனாட்சி சட்டென்று எழுந்தாள். சுருக்காக வாசலுக்கு வந்தாள். திகைத்து நிற்கிற தங்கவேலுவைக் கண்டாள். நீலவிழிப் பூனையுடன் சூடாமணியைப் பார்த்தாள். பரபரப்படைந்தாள். ''அடே!... தங்கம்! பலே!... இப்போதுதான் வருகிறீர்களா?... வாருங்கள்!... உங்களுடைய அண்ணன் குமாரசாமி, உங்களை அழைத்து வருவதற்காக ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தானே..!'' எனப் பரவசமும் புன்சிரிப்புமாகப் பேசினாள்.

''அக்கா, பெரியப்பா இன்னும் டூட்டியிலிருந்து வரவில்லையா...?'' எனக் கேட்டான், தங்கவேலு.

''அப்பா, இப்போதெல்லாம் வீட்டுக்கு லேட்டாகத் தான் வருகிறார். ஹெட் கான்ஸ்டேபிளாகப் பதவி உயர்வு பெற்றதிலிருந்து இப்படித் தான்!'' என்றாள், மீனாட்சி.

சூடாமணி, ஜில்ஜில்லின் கறுப்பு மேனியைச் செல்லமாகத் தடவியபடி ஆவலுடன் கேட்டாள்: '''அக்கா, இந்தப் பூனை...?''

''சில நாட்களுக்கு முன்னே,இந்தப் பூனையைத் திண்டுக்கல்லிலிருந்து நான் தான் கொண்டு வந்தேன்...'' என்று சொன்னது, மீனாட்சி அல்ல —அவளுடைய தம்பி — அப்போதுதான் வீட்டிற்குள் நுழைந்த குமாரசாமி.

''அண்ணா... இந்தப் பூனையைத் திண்டுக்கல்லிலிருந்தா கொண்டு வந்தாய்?...'' எனக் குழப்பமும், வியப்புமாய்க் கேட்டான் தங்கவேலு.

அவனுடைய கேள்வியைக் கவனிக்கவில்லை குமாரசாமி. தழைத்துச் சுழலும் ஏதோ ஒரு வாசனையை மூக்கைச் சுருக்கிச் சுவாசத்தை இழுத்து உணர்ந்தான். உடனே மீனாட்சியைப் பார்த்துக் கூவினான்: ''அக்கா!... சமையல் அறையில் தோசை தீய்ந்து கரியாகிக் கொண்டிருக்கிறது!... நீ இங்கே...''

''ச்சோ! ச்சோ!...'' என நாக்கைச் சொடுக்கியவாறே சமையல் அறையை நோக்கிச் சரேலெனப் பாய்ந்தோடினாள், மீனாட்சி.

அப்புறம்—

''நான் ஸ்டேஷனுக்கு வருவதற்குள் நீங்கள் வீட்டுக்குப் பறந்தோடி வந்து விட்டீர்களே!...'' எனப் பேசியபடி தங்கவேலுவையும் சூடாமணியையும் அழைத்துக் கொண்டு, கூடத்திற்குள் நுழைந்தான். சூடாமணியிடமிருந்து ஜில்ஜில்லை வாங்கிக் கொண்டான். ''நீங்கள் குளித்து விட்டு வாருங்கள். பலகாரம் சாப்பிடலாம்...'' என்றவாறே நாற்காலியில் உட்கார்ந்தான், குமாரசாமி.

''அண்ணா... இந்தப் பூனையைத் திண்டுக்கல்லில் யாரிடமிருந்து, அல்லது,எப்படிக் கொண்டு வந்தீர்கள்...?'' எனக் கேட்டான் தங்கவேலு.

குமாரசாமி சொன்னான்: ''நானும், என்னுடன் கல்லூரியில் படிக்கிற ஒரு நண்பனும் திண்டுக்கல்லுக்குப்

பஸ்ஸில் போய் ரயிலில் திரும்பி வந்து கொண்டிருந்தோம். அப்போது, எங்களுக்கு எதிர் இருக்கையில், ஒரு தெலுங்குக் கிழவரும், பையனும் அமர்ந்திருந்தார்கள். கிழவரின் மடியில் இந்தக் கறுப்புப் பூனை சுருண்டு படுத்திருந்தது. அதனுடைய கோலி உருண்டைகளைப் போன்ற நீலக் கண்களின் அழகும் கவர்ச்சியும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. 'ரொம்ப அழகான பூனை!...' என்றேன்.

'பூனை அழகாகத் தான் இருக்கிறது. ஆனால், அதனுடைய சேஷ்டை தான் சகிக்கவில்லை!...' என்றார், கிழவர்.

'நீங்கள் வளர்க்கிற பூனைதானே?...' எனக் கேட்டான், என் நண்பன்.

'இது, நாங்கள் வளர்க்கிற பூனை அல்ல. சென்னை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனில், இந்தப் பூனை அங்கும் இங்குமாக ஓடிக் கொண்டிருந்தது. என் பையன் இதைப் பார்த்துப் பிரியப்பட்டுக் கேட்டான். இதைப் பிடித்து என் மகனிடம் கொடுத்தேன். வழியிலே இது நகங்களால் என்னையும், என் மகனையும் பிறாண்டி விட்டது!...' என்றார், கிழவர்.

'உங்களுக்கு விருப்பமில்லை என்றால், இந்தப் பூனையை எனக்குக் கொடுத்து விடுங்கள், நான் வளர்த்துக் கொள்ளுகிறேன்...' என்று கேட்டேன். அந்தக் கிழவர் உடனே கொடுத்து விட்டார். நான் வாங்கி வந்தேன்...''

''ஓ! அப்படியா...?'' என்றாள் சூடாமணி.

''பவழக்காரத் தெருவிலிருந்த பூனை எழும்பூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எப்படிப் போயிற்று...?'' எனக் குழம்பித் தவித்த தங்கவேலு, குமாரசாமியிடமிருந்த ஜில்ஜில்லை வாங்கினான். முகத்துக்கு நேரே தூக்கிப் பிடித்தான். அதனுடைய அழகிய நீல விழிகளைப் பார்த்தவாறே இந்தியில் கொஞ்சினான்: ''ஏ... ஜில்ஜில்! எக்மோர் ரயில்வே ஸ்டேஷன்மே தும் கைஸா ஹாயாரே...?''

தங்கவேலுவின் இந்திப் பேச்சைக் கேட்டவாறே கூடத்துக்குள் நுழைந்தார் அவனது பெரியப்பா. போலீஸ் தொப்பியை மேசை மீது வைத்துக் கொண்டே, ''என்னடா, தங்கவேலு.. இந்தியில் பேசுகிறாய்?'' எனக்கேட்டார்.

''பெரியப்பா... இது ஒரு இந்திப் பூனை. அதனால், இதனுடன் இந்தியில் பேசுகிறேன்...'' என்றான், தங்கவேலு.

''உனக்கு இந்தி தெரியுமா...?'' என்று என்னவோ யோசனையுடன் கேட்டார், பெரியப்பா.

''சுமாராகத் தெரியும்...'' என்றான் தங்கவேலு.

''அப்படியென்றால்,... என்னுடன் வா. ஒரு முக்கியமான விஷயம்...'' என்றவாறே தங்கவேலுவை அழைத்துக் கொண்டு புறப்பட்டார் பெரியப்பா.

''பெரியப்பா, நானும் வருகிறேன்...'' என்றபடியே சூடாமணி ஜில்ஜில்லைத் தூக்கிக் கொண்டு அவர்களுடன் ஓடினாள். வாசலில் நிற்க வைத்திருந்த காப்பி கலர் ஸ்கூட்டரில் தங்கவேலு

திருக்குறள் புதிர் – விடை

புதிர் 12:

கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல். **(894)**

வலிமை இல்லாதவர்கள், வலிமையுடையவருக்குக் கேடு செய்வது, எமனைக் கையைக் காட்டி அழைப்பது போலாகும்.

புதிர் 13:

அறத்தாறு இதுஎன வேண்டா; சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை. **(37)**

அறம் செய்வதனால் ஏற்படும் பலன் இன்னது என்று ஆராய்ந்து அறிய வேண்டியதில்லை. பல்லக்கைத் தூக்குபவனுக்கும், பல்லக்கில் செல்பவனுக்கும் உள்ள வேறுபாடுகளே அறத்தின் பயனை விளக்கிக் காட்டும்.



லுவையும், சூடாமணியையும் ஜில்ஜில்லையும் ஏற்றிக் கொண்டு, விசையை முடுக்கினார், பெரியப்பா.

சூடாமணியால் ஜில்ஜில்லைக் கையில் வைத்துக்கொண்டு ஸ்கூட்டரில் செல்ல முடியவில்லை. எனவே, அதை வாங்கி வலது புறம் இருந்த பெட்டியில் வைத்தார் பெரியப்பா.

சற்று நேரத்திற்குள் –

இரண்டு இரண்டரை கிலோமீட்டர் தூரத்திலுள்ள போலீஸ் ஸ்டேஷன் வாசலை அடைந்ததும், ஸ்கூட்டரை நிறுத்தினார் பெரியப்பா. ''என்னப்பா விஷயம்...?'' எனக் கேட்டவாறே ஜில்ஜில்லை எடுத்து நெஞ்சில் அணைத்துக் கொண்டு வண்டியிலிருந்து இறங்கினான் தங்கவேலு. ''மதுரைக்கு வந்ததும் வராததுமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்து வந்திருக்கிறீர்களே, என்னப்பா சங்கதி...?'' என்று சிரித்தபடி கேட்டுக் கொண்டே ஸ்கூட்டரிலிருந்து குதித்தாள், சூடாமணி.

''உள்ளே வாருங்கள், எல்லாம் விளங்கும்!...'' பெரியப்பா, தங்கவேலுவையும், சூடாமணியையும் அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குள் நுழைந்தார். அவரைக் கண்டதும், வராந்தாவில் துப்பாக்கியுடன் நின்ற போலீஸ்காரர் ஒரு சல்யூட்டுடன் கேட்டார். ''என்ன சார்... வீட்டுக்குப் போகிறேன் என்று போய்... உடனே திரும்பி வந்து...''

''அது சரி... இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறாரா...?''

''இல்லை சார்... சப் – இன்ஸ்பெக்டர்தான்...'' அந்தப் போலீஸ்காரரின் பதிலைக் கேட்டுக் கொண்டே பக்கவாட்டிலுள்ள ஒரு பெரிய அறைக்குள் நுழைந்தார் பெரியப்பா. என்னவோ எழுதிக் கொண்டிருந்த சப் – இன்ஸ்பெக்டரைப் பார்த்து, ''குட் மார்னிங் சார்...'' என்றார். சப் – இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார்.

மறுவிநாடி–

'மியாவ்ங்!...' தங்கவேலுவின் கையிலிருந்த ஜில்ஜில், ஏதோ ஓர் உணர்ச்சிப் பெருக்குடன் கிரீச்சிட்டுக் கூவியது!

அந்தக் கூவலைக் கேட்டதும் –

அறையின் மூலையிலிருந்த பெஞ்சியில் உட்கார்ந்து தலையைத் தாழ்த்தியவாறு தூங்கிக் கொண்டிருந்த சிறுமி திடுக்கிட்டாள்; தூக்கம் சிதைந்து நிமிர்ந்தாள்; பார்த்தாள் சூடாமணியை – தங்கவேலுவை – தங்கவேலுவின் கையிலிருந்த ஜில்ஜில்லை. பார்த்த நொடியே, ''ஏ...

மேரா ஜில்ஜில்!''... எனக் கூவிக் கொண்டே தாவிப் பாய்ந்தாள்; தங்கவேலுவின் கையிலிருந்து வளைந்து நெளிந்து எம்பிக் குதித்த ஜில்ஜில்லை இரு கைகளாலும் கப்பெனப் பிடித்து நெஞ்சோடு இறுக்கிக் கொண்டாள்; ''மேரா பில்லி! மேரா ஜில்ஜில்! தும் கைஸே இதர் ஹாயாரே!...'' என்று கண்ணீர் சிந்தியபடி கொஞ்சிக் கொஞ்சி முத்தமிட்டுப் புலம்பினள், அவள்.

எவள்...?

நர்கீஸ்!

பல்வந்த்தின் தங்கை!...

அவள் எப்படி இங்கே?...

''ஏ.... நர்கீஸ்!.... தும் கைஸே இதர் ஹயா....?'' நர்கீஸை அணுகி நின்று திகைப்பும், , தவிப்பும்,பதைப் பும் பரிவுமாக விசாரித்தான், தங்க வேலு.

நர்கீஸ் அழுதாள். தங்கவேலுவை யும், சூடாமணியையும் பார்த்துப் பார்த்துத் தேம்பித் தேம்பி அழு தாள்!

''பெரியப்பா, இவள்... சென்னை யில் நம்முடைய வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருப்பவள். என்னுடைய சிநேகிதி. இவள் எப்படி இங்கே வந்தாள்...?'' என்று ஏதும் விளங் காமல் கேட்டான், சூடாமணி.


''இங்கே யாருக்கும் இந்தி தெரி யாது. இந்தப் பெண்ணுக்குத் தமிழ் தெரியவில்லை. என்னவோ ஓரிரண்டு தமிழ் வார்த்தைகளைச் சொல்லுகிறாள். ஆனால், அதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. டேய், தங்கவேலு.... அவளை நீயே விசாரி... ராத்திரி மூன்று மணியளவில், இவள் எங்கி ருந்தோ பாய்ந்தோடி வந்து இங்கே தஞ்சமடைந்தாள். என்ன? ஏன்? எப்படி? — என்றெல்லாம் விளக்கமாகக் கேட்டுச் சொல்...'' என்றார், பெரி யப்பா.

''நர்கீஸ் அழாதே... இந்த ஸ்டேஷ னில் ஹெட் காண்ஸ்டபிளாகப் பணி யாற்றும் இவர், எங்களுடைய அப்பா வின் அண்ணன். எங்கள் பெரியப்பா. நானும், சூடாமணியும் இவருடைய வீட்டுக்குக் கோடை விடுமுறையைக் கழிப்பதற்காக இன்று காலையில் தான் வந்தோம். வந்தவுடனே, சென்னையில், காணமல் போன ஜில் ஜில்லை, இங்கே மதுரையில், எங்கள் பெரியப்பாவீட்டில்பார்த்துத்திகைத்துப் போய் விட்டோம். அப்புறம்.... உன்னை... இங்கே பார்த்து.....ஆமாம் நர்கீஸ்... நீ எப்படி இங்கே வந் தாய்...? என்ன நடந்தது...? இனி மேல் உனக்கு எந்த ஆபத்தும் வராது! பயப்படாதே! கவலைப் படாதே! விவரமாகச் சொல்லு....'' என்று அன்பும் ஆதரவுமாக இந்தியில் கேட்டான், தங்கவேலு.

நர்கீஸ் தேம்பிக் கொண்டே இந்தி யில் பதிலளித்தாள்: ''தீங்கு செய் தால் தீங்குதான் உண்டாகும் என் பார்களே, அது உண்மைதான்! ஒரு நாள்... சூடாமணியையும், உன்னை யும் என் அம்மா கோபமாகப் பேசி விட்டாளே!... அன்றிலிருந்து நீங்கள் எங்கள் வீட்டுக்கு வருவதில்லை. நாங் களும் உங்கள் வீட்டுப் பக்கம் எட்டிக் கூடப் பார்ப்பதில்லை. அன்பும், ஆசை யும், விளையாட்டும் சிரிப்புமாக வளர்ந் திருந்த நம்முடைய சிநேகிதம் இந்தப் பூனையால்தானே கெட்டுக் குலைந்து போயிற்று! அதனல்... இரண்டு நாட் களுக்கு முன்னே... எழும்பூரிலுள்ள ஒரு பெரிய ஓட்டலில் என் மாமா ஒருவர் வேலை செய்கிறார். அம்மா, அவரைப் பார்த்து வரச் சொல்லி என்னை அனுப்பி வைத்தாள். நான் அம்மாவுக்குத் தெரியாமல் ஜில்ஜில்லைத் தூக்கிக் கொண்டு மின்சார ரயிலில் ஏறி எழும்பூருக்குப் புறப்பட்டேன். ரயில், எழும்பூர் ஸ்டேஷனை நெருங்கிக் கொண்டிருக்கையில், 'சிநேகிதத்தைக் கெடுக்கிற சைத்தானே, தொலைந்து போ!' என்று கறுவிக்கொண்டே....

ஜில்ஜில்லைத் தூக்கி
ஜன்னலுக்கு வெளியே
போ...ட்...டே...ன்...''

நர்கீஸ், ஜில்ஜில்லின் முகத்தோடு முகம் வைத்துக் கதறி அழுதாள்!...



தங்கவேலு, நர்கீஸின் தோளில் கை வைத்து அசைத்து, "அழாதே, நர்கீஸ்... அப்புறம் என்ன நடந்தது?.." என்று கனிவாகக் கேட்டான்.

பொங்கி வரும் அழுகையைச் சிரமத்துடன் அடக்கிக் கொண்டாள். ஜில் ஜில்லின் பட்டு உடலைப் பாசத்துடன் வருடியபடியே, நர்கீஸ் கூறினாள்: "அப்புறம்... எழும்பூர் ஸ்டேஷனிலிருந்து வெளியே வந்தேன். என் மாமா வேலை செய்யும் ஓட்டலை நோக்கி நடந்தேன். இருபுறங்களிலும் மரங்கள் அடர்ந்து வளர்ந்திருந்த ஒரு தெருவில் போய்க் கொண்டிருக்கையில்....

திடீரென்று, ஒரு நீலநிற மோட்டார் கார் வந்தது. என்னை உரசுகிற மாதிரி நெருங்கி நின்றது. படாரெனத் திறந்த கதவுக்குள்ளிருந்து இரண்டு முரட்டுக் கைகள் என்னை இறுக்கிக் கவ்வியிழுத்து....

நான் காருக்குள் இழுபட்ட நொடியே—

கார் பறந்தது!

திகைப்பில் தவித்தது மூச்சு! பயத்தில் பதைத்தது உடல்!... காருக்குள் உட்கார்ந்திருந்த மனிதர்களுக்கிடையே நான் கல்லாய்க் கிடந்தேன்! சில நிமிஷங்களுக்குப் பிறகு... நான் மருண்டு நடுங்கியவாறே, இருக்கையில் சரியாக நிமிர்ந்து உட்கார்ந்தேன். எனக்கு இரண்டு பக்கங்களிலும் அமர்ந்திருந்தவர்களைக் கண்ணீர் சிந்தியவாறே கவனித்தேன்.

ஒருவன் வழுக்கைத் தலைக் கிழவன். அவன் கைப்பிடியில் துப்பாக்கி!... இன்னொருவன் சுருள் மயிர் கிராப்பும், கிருதாவுடன் இணைந்த மீசையுமாய் இருந்தான். அவன்தான் என்னைக் காருக்குள் இழுத்துப் போட்ட பிசாசு!...

கார் ஓடிக் கொண்டிருந்தது.

நான், என்னைத் தைரியப்படுத்திக் கொண்டு, அந்த வழுக்கைத் தலைக் கிழவனைப் பார்த்துக் கேட்டேன்: 'நீங்கள் யார்?... என்னை எங்கே அழைத்துப் போகிறீர்கள்...?'

'அரபு நாட்டில் ஒரு பெரிய கோடீசுவரர். அவருக்கு உன்னை மகளாக்கி வைப்பதற்காகக் கொண்டு போகிறோம்...' என்று கைத்துப்பாக்கியை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்துக் கொண்டே சொன்னான், அந்தக் கிழவன்.

அப்புறம்—

நான் பேசவில்லை.

கம்மெனக் கிடந்தேன்.

ஆனால், என் மூளை—



பேனா

முற்காலத்தில் வாத்தின் இறகைத்தான் எழுதுவதற்குப் பயன்படுத்தினார்கள். லத்தீன் மொழியில் வாத்தின் இறகிற்குப் 'பென்னா' என்று பெயர்.

இதையே ஆங்கிலத்தில் 'பென்' என்றார்கள். தமிழில் 'பேனா' என்றோம்.


—எஸ். விஜயா சீனிவாசன்

அது ரொம்பத் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தது! 'இந்தப் படுபாவிகளிடமிருந்து எப்படியேனும் தப்பித்துக் கொள்வதற்கு என்ன வழி...?' என்று ரொம்பச் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது!

இருட்டி வெகு நேரமாயிற்று.

கார் படுவேகமாகப் பறந்தோடி... பின்னிரவு வேளையில் ஓர் ஊருக்குள் நுழைந்தது. அந்த ஊருக்குள்ளிருந்த ஒரு பழைய வீட்டுக்கு முன் காரைக் கொண்டு போய் நிறுத்தினார்கள். என்னை அழைத்துப் போய், அந்த வீட்டின் ஓர் அறையில் தள்ளிக் கதவைப் பூட்டி விட்டுப் போனார்கள். பொழுது விடிந்து வெகு நேரத்திற்குப் பிறகு வந்தார்கள். எனக்குப் பலகாரமெல்லாம் கொடுத்தார்கள். நான் வயிறாரத் தின்றுவிட்டுத் தூங்கவில்லை. தூங்குவது போல் பாசாங்கு செய்தபடி சிந்தித்துக் கொண்டிருந்தேன்...

அன்று முன்னிரவு. மீண்டும் கார்ப் பயணம் தொடங்கியது. நள்ளிரவு நேரத்தில் இந்த ஊரைக் கடந்து கொண்டிருக்கையில்...



திடீரென்று, பின் சக்கரம் ஒன்று பஞ்ச்சராகிக் கார் நின்றது. காரை ஓட்டிவந்த டிரைவர் வண்டியிலிருந்து இறங்கினான். காற்றுப் போய் நசுங்கிக் கிடந்த சக்கரத்தை டார்ச் லைட் வெளிச்சத்தில் கவனித்தான். சற்றுத் தயங்கினான். அப்புறம், ''டே மஸ்தான்... இறங்கி வாடா...'' என்றான். உடனே, என் பக்கத்திலிருந்த மீசைக்கார வாலிபன் வண்டியிலிருந்து இறங்கிப் போனான். அதற்கப்புறம், முஸ்தபா பாய்... நீ வண்டியில் இரு. நாங்கள் இருவரும் போய்.. மரைக்காயர் வீட்டிலிருந்து கார் கொண்டு வருகிறோம்...' என்று வழுக்கைத்தலைக் கிழவனிடம்சொல்லிக் கொண்டு, அவர்கள் இருவரும் இருளில் நடந்து மறைந்தார்கள்.

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

எங்கோ இருள் சூழ்ந்த மரங்களிலிருந்து கிளம்பிய ஆந்தையின் அலறல் நெஞ்சை நடுக்கியது! தூரத்தில் ஏதோ ஒரு நாய் குரைக்கிற சப்தம் தெளிவாகக் கேட்டது. நான் தூங்குகிற மாதிரி பாசாங்கு செய்து கொண்டிருந்தேன்.

சில நிமிஷங்களுக்குப் பிறகு...

கைத்துப்பாக்கியைஇடுப்பில் செருகிக் கொண்டு,வண்டியிலிருந்துகிழவன்இறங்கினான். காற்றுப்போன சக்கரத்துக்கு அருகில் உட்கார்ந்தான். சக்கரத்தின் சுருங்கிக் கிடக்கும் டயரைக் கவனித்தான். கவனித்துக் கொண்டே, 'ஏ பொண்ணு...' எனக் கூப்பிட்டான்.

'என்ன...?'

'சீட்டுக்கு அடியில் ஒரு குறடு இருக்கிறது. அதை எடு...' என்றான் வழுக்கைத் தலை.

நான், இருக்கைக்கு அடியில் தேடினேன். ஒரு பிச்சுவாக் கத்தியின் அருகிலே ஓர் இரும்புக் குறடு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு, மூடிக் கிடக்கும் கதவின் ஜன்னல் வழியாகக் கிழவனைப் பார்த்தேன். அவன் சக்கரத்தைக் குனிந்து கவனித்துக் கொண்டிருந்தான்.

மறுவிநாடி—

'மடேர்!...' கனத்த இரும்புக் குறடைத் தூக்கி, ஓங்கி வழுக்கை மண்டையில் போட்டேன், ஒரு போடு!...

மூச்சு விடவில்லை, பொத்தெனச் சுருண்டு விழுந்தான் கிழவன்! கூண்டி

விருந்து பறக்கும் கிளி மாதிரி, நான் காரிலிருந்து குதித்து ஓடினேன். என்னால் எவ்வளவு முடியுமோ,, அவ்வளவு வேகமாகப் பாய்ந்தோடி....

இது ஒரு போலீஸ் ஸ்டேஷன் என்று எனக்குத் தெரியாது! ஆனால்... பகவானின் கருணையால் இங்கே ஓடி வந்து தஞ்சமடைந்தேன்!... பாவம், இந்த ஜில்ஜில்லுக்கு நான் செய்த கொடிய பாவத்துக்கு எனக்கு இந்தத் தண்டனை போதும்!...''

நர்கீஸ், • குழந்தைகளைக் கடத்திக் கொண்டு போய் அயல் நாடுகளில் விற்கும் கொடிய பாவிகளிடம் சிக்கி அவஸ்தைப் பட்டதையெல்லாம் துயரம் தழையத் தழையச் சொல்லி முடித்து விட்டுத் தேம்பி அழுதாள். அவள் இந்தியில் சொல்லியவற்றையெல்லாம் கேட்டு மனம் உருகித் தமிழிலே சொன்னான், தங்கவேலு—

அதைக் கேட்டதும்—

—நர்கீஸைக் கட்டிக் கொண்டு கதறினாள், சூடாமணி.

''பாவம்!...'' எனப் பெருமூச் செறிந்தார், பெரியப்பா.

''ஹூம்!... தனது அறிவாலும் ஆற்றலாலும் தன்னையே காப்பாற்றிக் கொண்ட வீரச் சிறுமி இவள், ஸபாஷ்...!'' எனப் பாராட்டினார், சப் — இன்ஸ்பெக்டர்!


அடுத்த நொடி—

''சார்...!'' என்றான், தங்கவேலு.

''என்ன...?'' என்றார் சப் — இன்ஸ்பெக்டர்.

தங்கவேலு சொன்னான்: ''இந்தப் பூனையைக் காணாமல், மேரா ஜில்ஜில் கஹாங் கயா? என்னுடைய ஜில்ஜில் எங்கே போயிற்று? — என்று இவளுடைய அம்மா பிதற்றிக் கொண்டிருந்தாள். இப்போது, மேரா ஜில்ஜில் கஹாங் கயா? மேரா நர்கீஸ் கஹாங் கயா?— என்று ஓயாமல் கதறிக் கொண்டிருப்பாள்! உடனே, 'நர்கீஸும், ஜில்ஜில்லும் மதுரையில் நலமாக இருக்கிறார்கள்!' என்று அந்தக் கோபக்கார அம்மாவுக்குத் தந்தியில் தகவல் அனுப்பி வையுங்கள். அத்துடன், நர்கீஸையும் ஜில்ஜில்லையும் உடனடியாகச் சென்னைக்குக் கொண்டு போய், அவளது வீட்டில் சேர்த்து வையுங்கள்...''

''அப்படியே செய்யலாம்...'' என்றார், பெரியப்பா.



கொய்யாப்பழம்



— புவனா கலைச்செழியன்

"அட சண்டாளா! என் பிழைப்பிலே மண்ணைப் போட்ட நீ நல்லா இருப்பியா? ஏழை வயித்திலே அடிச்ச நீ உருப்படுவியா? உன் கையைக் கண்ணாடி விரியன் கடிக்க!" இப்படிச் சாபமிட்டுத் தீர்த்தாள் சம்பூர்ணம் என்ற அந்த ஏழைப்பெண்.

தொலைவில் ஓடிக் கொண்டிருந்த ரயில், 'நீ ஓர் ஏமாந்த சோணகிரி' என்று கூவிவிட்டு மறைவது போல் தோன்றியது.

'என்னை ஏமாற்றி விட்ட அந்தப் பயல் பார்ப்பதற்கு எத்தனை நாகரிகமாக, பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளை மாதிரி இருந்தான்!' மனம் புழுங்கினாள் சம்பூர்ணம்.

இரண்டு ரூபாய் அவனுக்கு அற்பமான காசாய் இருக்கலாம். ஆனால் அவளுக்கு? மூன்றுவேளை அவளும் அவள் விதவைத் தாயும் தம்பியும் அரை வயிறாவது கழுவிக் கொள்ள உதவும் பெரும் பொக்கிஷம் அல்லவா?

ரயில் வண்டி அந்த நிலையத்தில் வந்து நின்றது. பிளாட்பாரத்தில் அங்காடிக் கூடையைத் தூக்கிக் கொண்டு வரும் சம்பூர்ணத்தைப் பார்த்த அவன், "கொய்யாப் பழம் குண்டு குண்டாய் இருக்குதே!" என்று நினைத்து, "என்ன விலை?" என்று கேட்டான். அவனுக்குப் பதினாறு பதினைந்து வயதிருக்கும்.

"நாட்டுக் கொய்யா... கொள்ளை மலிவு! ரூபாய்க்குப் பத்துன்னு விக்கிறேன். எவ்வளவு வேணும்?"

'இரண்டு ரூபாய்க்கு வாங்குகிறேன். கூட நாலு பழம் போட்டுக் குடுப்பியா?"

"கட்டுப் படி ஆகாது! வேணும்னா ரெண்டு பழம் மேலே எடுத்துக்க."

"சரி, பழத்தை நானே பொறுக்கி எடுத்துக்கறேன். கூடையைக் கொஞ்சம் இப்படிக் கொடு" என்றான்.

சம்பூர்ணம் உடம்பை எக்கிப் பழக் கூடையை அவனிடம் தந்தாள். அவனோ சாவதானமாகப் பழங்களைப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தான். அவன் இருபத்திரண்டாவது பழத்தை எடுத்து முடிக்கவும், எஞ்சின் விசில் ஊதவும் சரியாய் இருந்தது.

சம்பூர்ணத்திற்கோ பரபரப்புத் தாங்கவில்லை. இரண்டு ரூபாய் வள்ளிசாகக் கிடைக்கிறதே என்ற ஆவல் அவளைக் கட்டிப் போட்டிருந்தது. "ஆச்சா... சீக்கிரம், சீக்கிரம்!" என்று கூறிக் கொண்டே பிடுங்காத குறையாகக் கூடையை அவள் எடுத்துக் கொள்ளவே வண்டி நகரத் தொடங்கியது.

'பணம்... பணம்!' என்று கூவி அவள் கையை நீட்டினாள். அவனோ பெட்டியின் உள் பக்கமாகத் திரும்பி அங்கிருந்தவர்களுடன் ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

வண்டியுடன் ஓடிவந்த அவளால் மேலும் ஓட முடியவில்லை. குறுக்கும் நெடுக்குமாக வந்தவர்களைக் கடந்து அவள் செல்வதற்குள் வண்டி பிளாட்பாரத்தைக் கடந்து வேகமாகச் சென்று விட்டது!

'அவன் பித்தலாட்டக்காரனாகத்தான் இருக்க வேண்டும்! இல்லையென்றால், வண்டி ஓடுகிற வேகத்திலும் பிளாட்பாரத்தில் காசை வீசிவிட்டுப் போயிருக்கலாமே! அவன் திட்டமிட்டுத்தான் என்னை ஏமாற்றியிருக்கிறான். சே! எத்தனை வெட்கக்கேடான விஷயம்! பழத்தைப் பொறுக்குகிறேன் என்று சொன்னவுடனேயே நான் சந்தேகித்திருக்க வேண்டும். இரண்டு ரூபாய்க்கு வாங்கப் போகிறான் என்றதும், வாயைப்பிளந்து கொண்டு இருந்துவிட்டேன்! பேராசை பிடித்த எனக்கு இதுவும் வேணும், இன்னமும் வேணும்!'

தன்னைத்தானே நொந்து கொண்டு' கூடையை ஒருபுறம் வைத்துவிட்டுத் தரையில் அமர்ந்தாள் சம்பூர்ணம். நடந்த சம்பவத்தை மறக்க முயன்றும், அவளால் முடியவில்லை.

'இப்படிப்பட்ட களவாணிகள் நிறைந்து விட்டதால்தான் நாட்டிலே மழை – மாரி கூடப் பெய்யாமல் பொய்த்து விட்டது. போயும் போயும் வாய்க்கும் வயிற்றுக்கும் தானம் போடும் நான்தானா அகப்பட்டேன், அந்தக் கொடுமைக்கார எத்தனுக்கு?'

சிந்தனை சிறிதுகூட ஓய்கிற வழியாக இல்லை.

அடுத்த ரயில் வந்தது. எஞ்சின் நீராவியை வெளியிட்டபடி ஓய்வெடுக்கத் தொடங்கியது. ஏறுவோரும் இறங்குவோருமாகப் பயணிகள் கூட்டம் பரபரத்தது. அவசரம் அவசரமாக எழுந்த சம்பூர்ணம், 'கொய்யாப் பழம்! கொய்யாப் பழம்!' என்று கூவிக் கொண்டே பெட்டி பெட்டியாக ஓடினாள்.

இப்போது எச்சரிக்கை உணர்வு மிகுதியாக இருந்தது அவளிடம். யாரையும் தானாகப் பொறுக்கியெடுக்க விடவில்லை. பணத்தை வாங்கிக் கொண்ட பிறகே பழத்தைக் கொடுத்தாள். கூடையைத் தலைக்கு மேல் உயர்த்தாமல் இடுப்பில் வைத்தபடியே வியாபாரம் செய்தாள். தப்பித் தவறிக் கைநீட்டியவர்களும் பணத்தை அவள் கையில் திணித்த பிறகே பழத்தைப் பெற்றுக் கொண்டனர்.

சுறுசுறுப்பும் சுள்ளாப்பும் அதிகமாகக் காட்டினாள் சம்பூர்ணம். அத்துடன் வண்டி வழக்கத்தைவிடச் சற்றுத் தாமதித்து விட்டே அந்த நிலையத்தை விட்டு அகன்றது.

இதயத்தை இரும்புக் குண்டாக அழுத்திக் கொண்டிருந்த ஏமாற்ற உணர்வு, இப்போது சொல்லாமல் கொள்ளாமல் விடைபெற்றுக்கொண்டது. மனம் இலேசாயிற்று. இனிமேல் சாயந்திரமாகத்தான் வண்டி வரும். கூடையைச் சுமந்தபடி வீடு நோக்கி நடந்தாள் சம்பூர்ணம்.

சாப்பிட்டு விட்டுத் தலை சாய்த்தாள் சம்பூர்ணம். அவள் அம்மா கூலி வேலைக்குப் போயிருந்தாள். ''அக்கா! அக்கா!'' என்ற குரல் கேட்டு விழித்துப் பார்த்தாள் சம்பூர்ணம்.

அவள் தம்பி மாரிமுத்துவின் பிஞ்சுக் கையில் புத்தம் புதிய இரண்டு ரூபாய்



நோட்டு ஒன்று இருந்ததைக் கண்டாள்.

''ஏதுடா மாரி, இந்தப் பணம்?'' வியப்புடன் வினவினாள் சம்பூர்ணம்.

''பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் வழக்கம்போல் கொய்யாப்பழம் எடுக்கக் கூடையைத் துழாவினேனு... அப்போ கையிலே சிக்கிச்சு. ஏனக்கா இப்படி அலட்சியமாப் பணத்தைக் கூடையிலே போட்டு வச்சே? யாராவது தூக்கிட்டுப் போயிட்டா என்ன செய்யறது?''

நோட்டை அக்காவிடம் தந்தான் மாரிமுத்து. முகம் மலர வாங்கிக் கொள்ள முடியவில்லை அவளால். கையில் இனம் புரியாத நடுக்கம்! இதயம் அதி வேகமாகப் படபடத்தது.

'என்னவெல்லாம் திட்டிவிட்டேன் அந்தப் பையனை! இரண்டு ரூபாய்க்கு கொய்யாப் பழம் வாங்கிய அவன், வண்டி நகர்ந்து விட்டதால், ரூபாயைக் கூடையில் போட்டிருக்கிறான். புரிந்து கொள்ளாமல், அவனைக் கண்டபடி திட்டிவிட்டேனே.'

சம்பூர்ணத்திற்கு நெஞ்சம் நிலை கொள்ளவில்லை. பணம் தராமல் போனதாகக் கருதி அவனைச் சபித்துக் கொட்டியதே மாபெரும் பாவமாகத் தோன்றியது. மனச்சாட்சி அவளைக் கொக்கி போட்டுக் குடையத் தொடங்கி விட்டது.

'எத்தனை உத்தமமான மனம் அந்தப் பையனுக்கு! கடவுளே! புத்தி மயங்கிக் கண்மூடித்தனமாய் அவனைத் திட்டினதற்கு நீதான் என்னை மன்னிக்கணும். அந்தப் பையன் சகல சம்பத்துடன், நோய், நொடி அண்டாமல் நீண்ட காலம் வாழணும்!' என்று இறைவனை வேண்டிப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

அத்துடன் 'எப்படியும் அந்தப் பையன் என்றாவது ஒருநாள் இந்த ஊர் வழியாக வருவான். கண்டிப்பாக என் கண்ணில் படுவான். அப்பொழுது அவனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்' என்றும் நினைத்தாள்.

சொல்லுங்கள் பார்க்கலாம்



1. அரேபிக், ரோமன் எண் குறிமுறைகளைப் பற்றி நீங்கள் தெரிந்திருப்பீர்கள். 5 என்பது V என்ற குறியாலும் 10 என்பது X என்ற குறியாலும் அறியப்படுகின்றன. 50, 100, 500, 1000 ஆகிய அரேபிக் எண்களைக் குறிக்கும் ரோமன் எண்கள் என்ன என்ன தெரியுமா?

2. பேனா, பென்சில், சாக்பீஸ் முதலிய எவ்வித எழுதுபொருளையோ, காகிதம், அட்டை முதலியவற்றையோ உபயோகிக்காமல், யானையின் படம் வரைந்து அனைவருக்கும் அதைக் காட்டி மகிழ்ந்தான் கிதா. அவன் எப்படி வரைந்திருப்பான்?

3. 36 செ. மீ. நீளம், 10 செ. மீ. அகலம் கொண்ட ஒரு தகட்டிலிருந்து, 8 செ. மீ. X 3 செ.மீ. அளவுள்ள சிறிய துண்டுகள் எவ்வளவு வெட்டியெடுக்கலாம்?

—ஆர். எஸ். சுப்பிரமணியம்.

விடைகள்:-

1. 50 (L), 100 (C), 500(D), 1000 (M); 2. கோலம் போட்டு; 3. 12 துண்டுகள் (15 துண்டுகள் வெட்ட முடியாது);

தந்தையே நல்லவர்!

அரசர் ஒருவர் இறக்கும் போது
அருகில் மகனை அழைத்தனர்.
''அருமை மகனே, எனது கடைசி
ஆசை ஒன்றைக் கூறுவேன்.

அடிமை யாக மக்கள் தம்மை
அடக்கி ஒடுக்கி ஆண்டதால்,
'கொடிய மன்னன்' என்றே என்னைக்
கூறு கின்றார் அனைவரும்.

இறந்து போன பின்ன ரேனும்
என்னை 'மிகவும் நல்லதோர்
அரசன்' என்று கூறும் வகையில்
அருமை மகனே, நடந்துகொள்.''

என்று கூறி இறந்து போனார்.
என்ன செய்தான் மகனுமே?
அன்றே நாட்டு மக்க ளுக்கோர்
ஆணை போட்டு விட்டனன்.

தண்டோரா போடுகிறவர்கள்

டமடம, டமடம, டும்டும்டும்;
டமடம, டமடம, டும்டும்டும்;

அரசின் புதிய கட்டளையை
அறிவிக்கின்றோம் இதன்மூலம்.
அரண்மனைக் களஞ்சியம் அதில்
முன்னாள்
அரசரின் ஆணைப் படிதினமும்,

ஒருபடி அரிசியைக் கொடுப்பீர்கள்;
ஒருபடி நெல்லைப் பெறுவீர்கள்.
இனி,
ஒருபடி அரிசியைத் தினம் கொடுத்து,
ஒருபடி உமியைப் பெறவேண்டும்.
டமடம, டமடம, டும்டும்டும்;
டமடம, டமடம, டும்டும்டும்;

புதிய அரசரின் ஆணை இது!
புரியும் படியாய்க் கூறுகிறோம்.
இதனை மீறி நடப்ப வர்க்கோ
ஏழு மாதம் சிறைவாசம்!
டமடம, டமடம, டும்டும்டும்;
டமடம, டமடம, டும்டும்டும்;

இந்தச் செய்தி கேட்டதுமே,
''என்னேகொடுமை! இவனுடைய
தந்தை மிகவும் நல்லவனே!''
என்றனர் மக்கள் அனைவருமே!



குழந்தைக் கவிஞர்

நாடோடிப்



பனிநீர்

மூங்கில் இலைமேலே
தூங்கும் பனி நீரே!

கோவை இலைமேலே
கொள்ளும் பனிநீரே!

பாவை இலைமேலே
படரும் பனிநீரே!

வாழை இலைமேலே
வளரும் பனிநீரே!

சந்தமாமா:

எட்டு நாளைக்கு முன்னாலே
செத்தபாம்பை-நான்
எட்ட நின்னு அடிச்சிடுவேன்
சந்தமாமா
வத்திக் கிடக்கிற ஏரியிலே
சந்தமாமா—நான்
வளைஞ்சு வளைஞ்சு நீச்சடிப்பேன்
சந்தமாமா.
ஆர்க்காட்டிலே சண்டையின்னு
சந்தமாமா—நான்
அடுப்பங்கரையில் ஒளிஞ்சிடுவேன்
சந்தமாமா.
வேலூரிலே சண்டையின்னு
சந்தமாமா—நான்
வேலிப்பக்கம் ஒளிஞ்சிடுவேன்
சந்தமாமா.

மாவளி ஆட்டம்:

மாவளிக்காரன் பெண்டாட்டி
மரக்கால் பிள்ளை பெத்தாளாம்!

எடுக்க வந்த சீமாட்டி
இடுப்பு ஒடிஞ்சு செத்தாளாம்!

பார்க்க வந்த சீமாட்டி
பல் உடைஞ்சு செத்தாளாம்!

கேட்க வந்த சீமாட்டி
கீழே விழுந்து செத்தாளாம்!

தூக்க வந்த சீமாட்டி
தோள் ஒடிஞ்சு செத்தாளாம்.

கும்மா வந்த சீமாட்டி
சுருண்டு விழுந்து செத்தாளாம்!

பாடல்கள்

நான் கண்ட பூக்கள்:

ஓடையிலே கண்டேன்
தாழை இளம் பூவை!
தண்ணியிலே கண்டேன்
தாமரைப்பூச் செண்டை.

ஆழத்திலே கண்டேன்
அல்லி இளம் பூவை!

தூரத்திலே கண்டேன்
தூயமல்லிப் பூவை!

இத்தனையும் நானே
நித்தம் பறிப்பேனே!

பனைமரம் சொன்ன பதில்:
நெட்ட நெட்டப் பனைமரமே,
நீ வளர்ந்த நேர்த்தியென்ன?

நான் வளர்ந்த காரணத்தை
நாட்டாரே, சொல்லுகிறேன்.

பசித்துவரும் மக்களுக்குப்
பழுத்தபழம் நான்தருவேன்.

வீடுகட்ட மரமாவேன்.
விறகாகப் பயன்படுவேன்.

கோடைவெயில் காலத்திலே
குளிர்ந்த நுங்கு நான்தருவேன்.

படுக்கப் பாய் நான் தருவேன்.
பயனுள்ள உறியாவேன்.


மாடுகட்டக் கயிறுவேன்.
மக்களுக்குத் தொழில்தருவேன்.

இப்படிநான் உதவிசெய்ய
ஈசனுமே படைச்சிருக்கான்.

ஏரிக்கரை மேலே
எந்நாளும் நானிருப்பேன்.








உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை-10

ஐவான், ஓர் அசடு!

மூலம்: லியோ டால்ஸ்டாய்

தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி





ஒரு குடியானவனுக்கு சைமன், தாரஸ், இவான் என்ற மூன்று பிள்ளைகளும் மார்த்தா என்ற ஓர் ஊமைப் பெண்ணும் இருந்தனர். சைமன் பட்டாளத்தில் சேர்ந்தான். தாரஸ் பட்டணத்தில் வியாபாரம் துவக்கினான். இவானும், தங்கையும் நிலத்தில் உழைத்துப் பெற்றோருக்கு உதவியாக இருந்தனர்.

சைமன் ராணுவத்தில் பெரிய பதவிக்கு உயர்ந்தான்; ஒரு பிரபுவின் மகளை மணந்தான். கைநிறையச் சம்பாதித்தான். இருந்தாலும் அவனுக்குக் கடன் அதிகமாகியது. ஏனென்றால் அவனுடைய மனைவி வரவுக்கும் அதிகமாகச் செலவு செய்தாள். சைமனுக்கு அரசர் நிலங்களை மான்யமாக அளித்திருந்தார். அவற்றில் பயிர்த் தொழில் செய்ய அவனுக்கு முன் பணம் தேவைப்பட்டது.

சைமன் அப்பாவிடம் போய், ''அப்பா! உழவுக்கு ஏற்பாடு செய்ய அவசரமாக எனக்குப் பணம் தேவைப்படுகிறது. எனக்குச் சேர வேண்டிய பங்கைச் சொத்திலிருந்து பிரித்துக் கொடுங்கள்'' என்று கேட்டான்.

''சைமன்! நீ சம்பாதித்த பிறகு வீட்டுக்கு ஒன்றுமே கொண்டு வரவில்லை. உனக்கு எதற்குப் பங்கு? இவானும் மார்த்தாவுமே உழைக்கின்றனர். நீ அவர்களுக்கு அநீதி இழைக்கலாமா? எதற்கும் அவனை ஒரு வார்த்தை கேட்டு விடுகிறேன் என்று சொல்லி அவர் இவானை அணுகினார். ''அப்பா! சைமனுக்கு என்ன வேண்டுமோ அவன் எடுத்துக் கொள்ளட்டுமே!'' என்றான் இவான் தாராளமாக. தேவையான கருவிகளை எடுத்துக் கொண்டு சைமன் தன் நிலத்தில் உழவுக்கு ஏற்பாடு செய்தான்.

தாரசுக்கு வியாபாரத்தில் பெருத்த லாபம் கிடைத்தது. அவன் ஒரு வியாபாரியின் மகளைக் கல்யாணம் செய்து கொண்டான். வியாபாரத்தை வளர்க்க அவனுக்குப் பணம் தேவைப்பட்டது. அப்பாவிடம் போய்த் தன் பங்கைக் கேட்டான். அப்பா இவானிடம் கேட்டார். இவான் தாராளமாக ஒப்புக் கொண்டான். கிடங்கில் இருந்த தானியங்களையும், ஒரு நல்ல குதிரையையும் தாரஸ் எடுத்துக் கொண்டான். நிலமும் ஒரு கிழட்டுக் குதிரையும் மட்டுமே மிஞ்சின. இவானும், மார்த்தாவும் அவற்றை வைத்துக் கொண்டு உழவைக் கவனித்தனர். பெற்றோரையும் காப்பாற்றினர். 'பிழைக்கத் தெரியாதவன்', 'அசடு', 'முட்டாள்'— போன்ற பட்டங்களையும் இவான் சம்பாதித்துக் கொண்டான்.

அந்த மூன்று பிள்ளைகளும் பாகப் பிரிவினையின் போது சண்டை போடுவார்கள் என ஒரு கிழட்டுப் பேய் எதிர்பார்த்தது. அதற்கு மாறாக அவர்கள் சந்தோஷமாகப் பிரிந்து போனதால், அது ஏமாற்றமடைந்தது. அவர்கள் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணியது.



கிழட்டுப்பேய் தன் குழந்தைகளான மூன்று குட்டிப் பிசாசுகளையும் கூப்பிட்டு, ''குழந்தைகளே! உங்களுக்கு ஒரு வேலை தருகிறேன். சைமன், தாரஸ், ஐவான் ஆகிய மூவரும் சகோதரர்கள். பாகப்பிரிவினை காரணமாக அவர்களுக்குள் சண்டை வந்திருக்க வேண்டும். ஆனால் ஐவான் என்னும் முட்டாள் நல்ல மனத்தோடு விட்டுக்கொடுத்து என் திட்டங்களைக் கெடுத்து விட்டான். ஆகவே நீங்கள் உடனே அவர்களிடம் செல்லுங்கள். அவர்களுடைய அன்பையும், சந்தோஷத்தையும் குலைத்து, விரோதத்தையும், துன்பத்தையும் வளர்க்க வேண்டும். புறப்படுங்கள்!'' என்று சொல்லி அனுப்பியது.

குட்டிப் பிசாசுகள் மூன்றும் கூடிப் பேசின. ஒவ்வொரு பிசாசும் ஒரு சகோதரனின் வாழ்வைக் குலைப்பது என்றும், முதலில் வேலையை முடிக்கும் பிசாசு மற்ற இரண்டுக்கும் உதவ வேண்டும் என்றும் தீர்மானித்தன.

குறிப்பிட்ட நாளில் குட்டிப் பிசாசுகள் மூன்றும் கூடின. அவை தங்கள் அனுபவங்களைப் பரிமாறிக் கொண்டன. சைமனிடம் போன பிசாசு முதலில் தன் கதையைக் கூறியது — ''நான் சைமனைத் தைரியசாலி ஆக்கி அரசனிடம் போகச் செய்தேன். அரசருக்காக அவன் இந்த உலகத்தையே ஜெயிப்பதாக வீரம் பேசினான். அரசர் அவனை ஒரு பெரிய படைக்குத் தளபதி ஆக்கி இந்தியாவைப் பிடிக்குமாறு அனுப்பினார். போருக்கு முதல் நாள் நான் மழையை வரவழைத்தேன். சைமனின் வெடிமருந்துகள் நனைந்தன. மேலும், இந்தியப் படையில் நான் ஆட்களை அதிகரித்தேன். இரு படைகளும் மோதின. சைமனின் துப்பாக்கிகளும், பீரங்கிகளும் இயங்கவில்லை. சைமனின் வீரர்கள் பயந்து ஓடினர். இந்தியப் படை அவர்களைச் சின்னாபின்னமாக்கியது. அரசர் கோபமடைந்து சைமனைச் சிறையில் அடைத்திருக்கிறார். விரைவில் நான் அவனை வெளியேற்றி அவனுடைய அப்பாவிடம் அனுப்பப் போகிறேன். அதோடு என் வேலை முடிகிறது. உங்களுக்கும் விரைவில் உதவுவேன்.''

இரண்டாவது குட்டிப் பிசாசு பேசியது — ''நான் தாரஸைத் தொடருகிறேன். அவனுடைய மனத்தில் பேராசையை எழுப்பியிருக்கிறேன். எதைப் பார்த்தாலும் வாங்குகிறான். கையிலிருந்த ரொக்கத்தை எல்லாம் செலவழித்து விட்டான். 'பணம், பணம்' என்று அலைகிறான். நாலா பக்கங்களிலிருந்தும் கடன் சுமை அவனை அழுத்துகிறது. கடன் என்னும் பள்ளத்தில் கீழே கீழே போய்க் கொண்டே இருக்கிறான். அவன் கடனை அடைக்கத் துவங்குவதற்குள் நான் அவனுடைய சரக்குகளை அழித்து விடுவேன். இன்னும் ஒரே வாரத்தில் தாரஸ் வியாபாரத்தை விட்டுவிட்டு ஓடி விடுவான்.''



ஆற்றிலே அளந்து போடு!

திருநெல்வேலி ஜங்ஷனைவிட்டு இறங்கியதும், பாளையங்கோட்டை போகும் வழியில் தாமிரபரணியைக் கடக்க ஒரு பாலம் இருக்கிறது. இதற்குச் சிந்துபூந்துறைப் பாலம் என்று பெயர்.

சிந்துபூந்துறை ஜமீன்தார் நிறையப் பணம் சேர்த்து வைத்திருந்தார். அவருடைய பிள்ளை, தந்தையிடம், ''இவ்வளவு பணத்தையும் வைத்துக் கொண்டு என்ன செய்வது?'' என்று கேட்டார். ஜமீன்தார் ''ஆத்தில் போடு'' என்றாராம். மகன் ''ஆத்தில் எப்படிப் போடுவது?'' என்று கேட்க, தந்தை ''அளந்து போடு'' என்றாராம்.

உடனே அந்த ஜமீன்தாரின் மகன் ஆற்றை அளந்து பாலம் போட்டாராம். இதிலிருந்துதான் ''ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு'' என்ற வசனமே வந்ததாம்.

—ஜெயா வி. ராமன்



கடைசியில் மூன்றாவது குட்டிப் பிசாசு தன் கதையை மொழிந்தது—

''நான் அறிவில்லாத ஐவானிடம் மாட்டிக் கொண்டிருக்கிறேன். முதலில் நான் அவனுக்கு வயிற்று வலியை உண்டாக்கினேன். அந்த முட்டாள் வலியை லட்சியம் செய்யாமல் வழக்கம் போல் வேலைக்கு வந்து விட்டான். கலப்பையைப் பிடித்துக் கொண்டு உழுதான். நான் வயலின் மண்ணைக் கெட்டிப் படுத்தினேன். கலப்பையை ஒடித்தேன். பலவிதத் தொல்லைகளைக் கொடுத்தேன். அவன் எதற்கும் மசியவில்லை. புதிய கலப்பையைக் கொண்டு வந்து, வெறி பிடித்தவன் போல உழுதான். ஐவான் மாடு போல உழைக்கிறான். அவனை முறியடிப்பது கடினமாக இருக்கிறது. நீங்களும் வந்து உதவினால்தான் முடியும்.''

கூட்டம் முடிந்ததும் குட்டிப் பிசாசுகள் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்றன.

ஐவான் உழுவதற்கு இன்னும் ஒரு சின்னத் துண்டு நிலமே பாக்கி இருந்தது. அதில் ஏர் நகர மறுத்தது. ஏரின் அடிப்பாகத்தை யாரோ பிடித்து நிறுத்துவது போல இருந்தது. ஐவான் மண்ணுக்கு அடியில் கையை விட்டு ஏதோ ஒன்றைப் பிடித்து வெளியே இழுத்தான். சிறிய அளவில் கன்னங் கரேலென்று நீண்ட வாலுடன் குட்டிப் பிசாசு ஒன்று காட்சி அளித்தது!

தனக்குத் தொல்லை அளித்த பிசாசை ஐவான் கொல்லப் போனான். ''கொல்லாதே! என்னை விட்டுவிடு. நீ கேட்கும் உதவியைச் செய்கிறேன்'', என்று பிசாசு கெஞ்சியது. ''என் வயிற்று வலி தீர வேண்டும்'', என்று ஐவான் கேட்டான்.

உடனே பிசாசு பூமிக்குள் சென்று மூன்று வேர்களை எடுத்து ஐவானிடம் கொடுத்தது. ''இதில் ஒன்றைச் சாப்பிட்டால் எல்லா வலிகளும் தீரும்'' என்றது. ஐவான் ஒரு வேரைச் சாப்பிட்டான். வலி நீங்கியது. மற்ற இரண்டு வேர்களைப் பத்திரமாக வைத்துக் கொண்டான். குட்டிப் பிசாசு பூமிக்குள் பாய்ந்து மறைந்தது.

மாலையில் ஐவான் வயலிலிருந்து வீட்டுக்குத் திரும்பினான். சிறையிலிருந்து தப்பித்த சைமன் தன்

மனைவியை அழைத்துக் கொண்டு வந்திருந்தான். சைமன் இவானிடம், ''எனக்கு வேலை போய் விட்டது. மறுபடியும் வேலை கிடைக்கும் வரை நீதான் எங்களைக் காப்பாற்ற வேண்டும்!'' என்று கேட்டான். இவான் தாராளமாக ஒப்புக் கொண்டான்.

சைமனின் குட்டிப் பிசாசு தன் வேலையை முடித்துக் கொண்டு இவானின் குட்டிப் பிசாசுக்கு உதவி செய்ய வந்தது. ஆனால், அதைக் காணவில்லை. ஏதோ ஆபத்து வந்து அது மறைந்திருக்க வேண்டும் என்று ஊகித்தது. இவானைத் துன்புறுத்தும் பணியை அது மேற்கொண்டது.

இவானுடைய வேறொரு நிலத்தில் பயிர்கள் முற்றி அறுவடைக்குத் தயாராக இருந்தன. இவானும், தங்கையும் கதிர்களை அறுக்க ஆரம்பித்தனர். பயிரின் மறைவில் ஒளிந்து கொண்டு குட்டிப் பிசாசு அரிவாளை ஒழுங்காக நகர விடாமல் தொந்தரவு செய்தது. இவான் புதிய அரிவாளை எடுத்து ஒரே மூச்சில் அறுவடையை முடித்தான். வண்டியில் ஏற்றுவதற்காகக் கதிர்களைச் சிறுசிறு கட்டுகளாகச் செய்து அடுக்கினான்.

பிசாசு கட்டுகளின் இடையே புகுந்து கொண்டு அவற்றை அழுகச் செய்தது. இவான் ஒரு முள் கரண்டியால் அதைக் குத்தி வெளியே எடுத்தான். ''மறுபடியும் வந்து விட்டாயா?'' என்று கோபத்தோடு கேட்டுக் கொண்டே அதைக் கொல்லப் போனான். தன்னை விட்டுவிடும்படி பிசாசு கெஞ்சியது. பதில் உதவியாக அது வைக்கோல் கட்டுகளைப் போர் வீரர்களாகவும், போர் வீரர்களைப் பழையபடி வைக்கோல் கட்டுகளாகவும் மாற்றச் செய்யும் இரு அரிய பாடல்களை இவானுக்குக் கற்பித்தது. பிறகு பூமிக்குள் ஓடி மறைந்தது. வீரர்கள் சேர்ந்து வழங்கும் வேடிக்கையான இசையைக் கொண்டு தன் ஊர் மக்களை மகிழ்விக்கலாம் என்று இவான் எண்ணினான்.

களத்து மேட்டிலிருந்து இவான் வீடு திரும்பினான். கடன்களை அடைக்க முடியாத தாரஸ் தன் மனைவியை அழைத்துக் கொண்டு அங்கு வந்திருந்தான். இவான் இன்முகத்தோடு அவர்களை வரவேற்றுத் தன்னோடு தங்கும்படி கேட்டுக் கொண்டான்.

தாரசின் குட்டிப் பிசாசு தன் பணியை முடித்துக்கொண்டு இவானின் குட்டிப் பிசாசுகளைத் தேடியது. காணவில்லை. ஏதோ ஆபத்து வந்து மற்ற இரண்டு பிசாசுகளும் மறைந்திருக்க வேண்டும் என்று அது ஊகித்தது. ஆகவே இவானின் நலன்களைக் கெடுக்கும் பணியை அது மேற்கொண்டது.

சகோதரர்களுக்கு இவானின் வீட்டில் இடம் போதவில்லை. பட்டணத்து நாகரிகத்தில் மூழ்கியிருந்த அண்ணிகள் இருவருக்கும் பட்டிக்காட்டு இவானின் தோற்றமும், செய்கைகளும் அறவே பிடிக்கவில்லை. ஒரு புதிய இல்லம் கட்டும்படி அவர்கள் ஆலோசனை கூறினர். இல்லத்திற்கு மரம் கொண்டுவர இவான் காட்டிற்குப் போனான். உயரமான மரங்களின் கிளைகளை வெட்டினான். வெட்டப்பட்ட கிளைகள் கீழே விழவில்லை. மேலேயே சிக்கிக் கொண்டன. மரத்தின் உச்சியில் அந்தக் குட்டிப் பிசாசு அமர்ந்து கொண்டு பல விதங்களிலும் அவனுக்கு இடைஞ்சல் விளைவித்தது. களைப்பு மேலிட இவான் மரத்தடியில் உட்கார்ந்தான். அன்றைக்கு அவனுடைய வேலையைத் தடுத்து நிறுத்தி விட்டதாகக் குட்டிப் பிசாசு எண்ணிக் குதூகலித்தது.

இவான் திடீரென எழுந்தான். ஒரே மூச்சில் அநேக மரங்களை வரிசையாக வெட்டிக் கீழே சாய்த்தான். கீழே விழுந்த மரத்தின் அடியில்


பசி வேளையா?

ஆசிரியர்: உனக்குப் பசிக்குதா?

பையன்: ஆமாம் சார், எப்படிக் கண்டுபிடிச்சீங்க?

ஆசிரியர்: 'இத்தாலி' என்று எழுதச் சொன்னால், 'இட்டிலி' என்று எழுதி இருக்கிறாயே!

—கடலூர் கன்னியப்பன்




குட்டிப் பிசாசு சிக்கிக் கொண்டது. அதனால் எழுந்திருக்க முடியவில்லை. ஐவானின் பார்வை தற்செயலாக அதன் மீது விழுந்தது. பழைய குட்டிப் பிசாசு என்று நினைத்து அதைக் கொல்வதற்காகக் கோடரியை ஓங்கினான். ''என்னைக் கொல்லாதே! உனக்கு ஒரு உதவி செய்கிறேன்'', என்று சொல்லி, ஓக் மரத்தின் இலைகளைத் தேய்த்துப் பவுன் காசுகள் வரவழைக்கும் வித்தையை அது அவனுக்குக் கற்பித்தது. குழந்தைகள் உருட்டி விளையாடப் பொற்காசுகள் உதவும் என்று ஐவான் கருதினான். மூன்றாவது குட்டிப் பிசாசும் பூமிக்குள் பாய்ந்து மறைந்தது.

ஐவானும், சகோதரர்களும் தனித் தனியே வீடு கட்டிக் கொண்டு வசித்தனர். அறுவடை முடிந்ததும் ஐவான் ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்தான். தொழிலாளர்களின் விருந்து தங்களுக்குப் பிடிக்காது என்று சொல்லி மூத்த சகோதரர்கள் இருவரும் ஒதுங்கினர். ஊரார் அனைவரும் உற்சாகமாக அதில் கலந்து கொண்டனர். விருந்தில் உணவிற்குப் பிறகு பாட்டு, , ஆட்டம் எல்லாம் நிறைய இருந்தன.

''என்னைப் பற்றி ஒரு பாட்டுப் பாடுங்கள்; பரிசு தருகிறேன்'', என்று ஐவான் பெண்களிடம் கூறினான். அவர்கள் பாடினர். ஐவான் காட்டுக்குள் ஓடி ஒரு கூடை நிறையப் பொற்காசுகளைக் கொண்டு வந்து வாரி இறைத்தான். எல்லோரும் போட்டி போட்டுக் கொண்டு அள்ளிச் சென்றனர்.

இன்னொரு அதிசயத்தையும் ஐவான் அவர்களுக்குச் செய்து காட்டினான். வைக்கோல் கட்டிலிருந்து வீரர்களை வரவழைத்தான். அவர்கள் இனிமையாகப் பாடி இசைக் கருவிகளை வாசித்தனர். விருந்தினர் கேட்டு மனம் மகிழ்ந்தனர்.

அடுத்தநாள் ஐவானைத் தேடிக் கொண்டு சைமன் வந்தான்; ''உன்னிடம் நிறைய வீரர்கள் இருக்கிறார்களாமே? எனக்கு ஒரு படையைக் கொடுத்தால் நான் ஒரு நாட்டை வெல்லுவேன்'' என்றான். அதைக் கேட்டு ஆச்சரியமடைந்த ஐவான் உடனே வைக்கோல் கட்டுகளை வீரர்களாக மாற்றிக் கொடுத்தான். சைமன் அவர்களுக்குத் தலைமை ஏற்று நடத்திச் சென்றான்.



மனைவி: என்னங்க, நம்ம பையன் கிட்டே இது 'டிராயிங்கும்'னு ஏன் சொன்னீங்க? இப்பப் பாருங்க.

சிறிது நேரங்கழித்து ஐவானைத் தேடித் தாரஸ் வந்தான்; ''உன்னிடம் நிறையப் பொற்காசுகள் இருக்கிறதாமே? எனக்குக் கொஞ்சம் கொடுத்தால் நான் இந்த உலகத்தையே விலைக்கு வாங்குவேன்'' என்றான். அதைக் கேட்டு வியப்புற்ற ஐவான் ஓக் மரத்தின் இலைகளைக் காசுகளாக மாற்றிக் கொடுத்தான். தாரஸ் அவற்றைப் பெற்றுக்கொண்டு பட்டணத்தில் மறுபடியும் வியாபாரம் தொடங்கினான்.

சைமன் ஒரு நாட்டை வென்று அரசன் ஆனான். ஆனால் வீரர்களைக் காப்பாற்ற அவனிடம் போதிய பவுன் காசுகள் இருக்கவில்லை. வியாபாரம் செய்த தாரஸ் பொற்காசுகளைக் குவித்தான். ஆனால் அவற்றைப் பாதுகாக்க அவனிடம் போதிய வீரர்கள் இருக்கவில்லை. சைமனும் தாரசும் மேலும் படைகளையும், பணத்தையும் வாங்கி வர ஐவானிடம் போயினர். ''எனக்கு இன்னும் கொஞ்சம் வீரர்கள் வேண்டும்''— ஐவானிடம் சைமன் கேட்டான்.

''இனிமேல் உனக்கு வீரர்களைத் தர முடியாது'', என்று உறுதியாக ஐவான் மறுத்துவிட்டான்.

''எவ்வளவு பேர் வேண்டுமானாலும் தருகிறேன் என்று முன்பு சொன்னாய். இப்போது முட்டாள்தனமாக முடியாது என்று சொல்கிறாயே! என்ன காரணம், தம்பி!'' என்று சைமன் கேட்டான்.

''இந்த ஊர்ப் பெண்ணின் கணவனை உன் வீரர்கள் யுத்தத்தில்

கொன்று விட்டனர். அவள் துக்கம் தாங்காது அழுது கொண்டிருக்கிறாள். வீரர்கள் என்றால் இனிய இசை வழங்கி மக்களை மகிழ்விப்பார்கள் என்றுதான் நினைத்தேன். அவர்கள் இரக்கம் இல்லாமல் கொலை செய்வார்கள் என்று எனக்குத் தெரியாது. வீரர்கள் வேண்டும் என்று மறுபடியும் கேட்காதே!'' என்று தீர்மானமாகச் சொன்னான் ஐவான்.

அடுத்து தனக்குப் பொற்காசுகள் வேண்டும் என்று தாரஸ் கேட்டான். அதற்கும் ஐவான் மறுத்து விட்டான். தாரஸ் காரணம் கேட்கவே,



''மைக்கேலின் பெண்ணிடம் ஒரு பசு இருந்தது. குழந்தைகள் அந்தப் பாலைப் பருகி வந்தனர். ஒருநாள் உன் கணக்குப் பிள்ளை சில பொற்காசுகளைக் கொடுத்து அந்தப் பசுவை ஓட்டிச் சென்று விட்டான். குழந்தைகள் பால் இல்லாமல் பசியால் தவிக்கின்றனர். பொற்காசுகளை வைத்துக் கொண்டு பிள்ளைகளுடன் விளையாடுவாய் என்று நினைத்தேன். ஆனால் அவர்களுடைய பசுவைப் பறித்துக் கொண்டு அவர்களைப் பட்டினி போட்டு விட்டாயே! இனிமேல் என்னிடம் காசு கேட்காதே!'' என்று கோபத்தோடு கூறினான் ஐவான்.

சைமனும், தாரகம் தங்கள் உடைமைகளில் ஒரு பாதியை மற்றவருக்கு வழங்கி, இருவரும் அரசர் ஆயினர். இன்பமாக வாழ்ந்தனர். ஐவானும், அவன் ஊமைத் தங்கையும் வழக்கம் போல் வயலில் உழைத்துத் தங்கள் பெற்றோரை அன்போடு காத்தனர்.

ஒருசமயம் ஐவானின் நாய்க்கு நோய் கண்டது. அவனிடமிருந்த வேர்களில் ஒன்றைத் தற்செயலாக அது விழுங்கியது. உடனே அதற்கு நோய் தீர்ந்தது. அதேசமயம் அந்நாட்டு அரசகுமாரி நோயுற்றாள். மருந்துகள் பலிக்கவில்லை. திருமணம் ஆகாத ஆண்மகன் யாராவது அவளுடைய நோயைத் தீர்த்தால், அவனுக்கு அரசகுமாரியை மணம் செய்வதாக மன்னர் அறிவித்தார்.

பெற்றோர்கள் தூண்டவே, அபூர்வ வேரை எடுத்துக் கொண்டு அரசகுமாரியைக் குணப்படுத்த ஐவான் புறப்

பட்டான். வழியில் நோயாளியான ஒரு பிச்சைக்காரியைக் கண்டான். அவள் மீது இரக்கப்பட்டுத் தன்னிடமிருந்த ஒரே வேரை அவளுக்குக் கொடுத்தான். பிச்சைக்காரி நோய் நீங்கி அவனை வாழ்த்திச் சென்றாள்.


அரசகுமாரிக்காகவும் ஐவான் இரங்கினான். தன்னிடம் வேர் இல்லாவிட்டாலும் அவளைக் காண்பதற்காக அரண்மனைக்குப் போனான். ஐவான் அவளுடைய அறையில் நுழைந்ததும் அவள் குணமடைந்தாள்! மன்னர் ஐவானைப் பாராட்டி, அரசகுமாரியை அவனுக்கு மணம் முடித்தார். சில தினங்களில் மன்னர் இறக்கவே, ஐவான் அந்த நாட்டு அரசன் ஆனான்.

மூன்று குட்டிப் பிசாசுகளிடமிருந்தும் செய்தி வராமல் போகவே, கிழட்டுப் பேய் அவற்றைத் தேடிப் போயிற்று. எங்கும் காணவில்லை. அவை மாயமாக மறைந்திருந்தன. சைமனும், மற்ற இரு சகோதரர்களும் அரசர்களாகி அன்போடு வாழ்ந்தனர். அதைக் காணச் சகிக்காத கிழட்டுப் பேய் தானே முன் நின்று சகோதரர்களுக்கிடையே விரோதத்தை உண்டாக்கி அவர்களை அழிக்கத் தீர்மானித்தது.

கிழட்டுப் பேய் ஒரு பெரிய ராணுவ அதிகாரியாக வேடமணிந்து கொண்டது. அந்த அதிகாரி சைமனிடம் வேலைக்கு அமர்ந்தார். அவருடைய ஆலோசனையைக் கேட்ட சைமன் இளைஞர்களுக்குக் கட்டாய ராணுவ சேவையைக் கொண்டு வந்தான். பயங்கரச் சேதத்தை விளைவிக்கும் குண்டுகளைத் தயாரித்தான். அண்டை நாடுகளைப் பிடிக்க ஆசைப்பட்டான்.

இந்திய அரசனைத் தாக்கும்படி சைமன் தளபதிக்குக் கட்டளையிட்டான். இந்திய அரசன் பெண்களையும் சேர்த்துப் பெரும் படை திரட்டியிருந்தான். அவனிடம் பறக்கும் குண்டுகள் இருந்தன. போரில் இந்திய அரசன் வென்றான். சைமன் தோல்வியுற்று நாட்டை விட்டு ஓடினான்.

கிழட்டுப் பேய் ஒரு வியாபாரியாக வேடத்தை மாற்றிக் கொண்டது. அந்த வியாபாரி தாரஸின் நாட்டுக்குச் சென்று தொழிலைத் துவக்கினார். அவர் அகப்பட்ட பொருள்களை எல்லாம் அதிக விலை கொடுத்து வாங்கினார். அவற்றைப் பதுக்கி வைத்தார். நாட்டில் பணம் பெருகுகிறது. பொருள்கள் அரிதாயின. நாளடைவில் தாரஸ் அரசனின் தேவைக்குக் கூட எதுவும் கிடைக்கவில்லை. வரிகள் மட்டும்தான் கிடைத்தன.



குணமாகுமா?

ரவி: டாக்டர்! என் தம்பிக்கு வயிற்று வலி குணமாயிடுமா?

டாக்டர்: இனி நிச்சயம் குணமாயிடும். காலாண்டுத் தேர்வு தான் முடிந்து விட்டதே!

—எஸ். நர்மலிங்கம்

தாரஸ் கோபமடைந்து புதிய வியாபாரியை நாடு கடத்தினான். அவர் எல்லைக்கு வெளியே சென்று கடையைத்திறந்தார். வியாபாரத்தைத் தொடர்ந்தார். அவர் தந்த அதிக விலைக்கு ஆசைப்பட்ட மக்கள் உற்பத்தியை எல்லாம் வழக்கம் போல அவருக்கே விற்றனர். தன்னிடம் இருக்கும் அளவற்ற செல்வத்தால் அவர் தாரஸ் அரசனைக்கூட விலைக்கு வாங்க முடியும் என்று மக்கள் பேசினர்.

தாரஸ் அரசனுக்கு உண்ண உணவு கிடைக்கவில்லை. அவன் பசியால் தவித்தான். சைமன் அந்தச் சமயத்தில் தாரசிடம் ஓடிவந்து உதவி கேட்டான். தாரஸ் கையை விரித்தான்.

சைமனையும், தாரசையும் சேரழித்த கிழட்டுப் பேய் மறுபடியும் ஒரு ராணுவத் தளபதியாகத் தோற்றம் எடுத்தது. அந்தத் தளபதி ஐவானிடம் சென்று, ''அரசே! ராணுவமே இல்லாமல் இந்தப் பெரிய நாட்டை ஆளுகின்றீர்களே! அனுமதி கொடுத்தால் ஒரு பெரிய படையைத் திரட்டிப் பயிற்சி அளிக்கிறேன்'' என்றான்.

"அப்படியே செய். ஆனால், போர் வீரர்கள் நன்றாகப் பாடவேண்டும்" என்று கட்டளையிட்டான் இவான்.

புதிய தளபதி ஊர் ஊராகச் சென்று கூட்டம் போட்டான்; பிரச்சாரம் செய்தான்; முதலில் நயமாகவும், பிறகு பயமாகவும் பேசி மக்களைப் படையில் சேரத் தூண்டினான். அவர்கள் உழைப்பில் நம்பிக்கை உள்ளவர்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வாக இருந்தது. அவர்கள் படையில் சேர மறுத்து விட்டனர்.

முயற்சிகளில் தோல்வியுற்ற தளபதி மக்களைப் பழி வாங்க விரும்பி அண்டை நாட்டு மன்னனிடம் போனான்: "இவான் நாட்டில் படைகளோ, பாதுகாப்போ இல்லை. ஆடு மாடுகளும், தானியங்களும் ஏராளமாக இருக்கின்றன. நாம் படையெடுத்து, அவற்றை எளிதில் கைப்பற்றுவோம்" என்று கூறினான். மன்னன் இசைந்தான். போர் முரசு முழங்கியது. இவான் நாட்டில் அந்நியர் புகுந்தனர். கால்நடைகளையும், தானியங்களையும் அவர்கள் கவர்ந்து சென்றனர்.

எதிரிப் படைகள் கிராமம் கிராமமாகப் புகுந்தன. அவர்களை வேடிக்கை பார்க்க மக்கள் திரளாக வந்தனர். ஆனால் ஒருவராவது எதிர்க்கவில்லை. மாறாக இரக்கம் காட்டினர். "நீங்கள் மிகுந்த கஷ்ட நிலையில் இருப்பது போலத் தோன்றுகிறது. எங்கள் நாடு வளமான நாடு. எங்களுடனேயே தங்கி விடுங்களேன்" என்று சொல்லி அன்பைப் பொழிந்தனர். எதிர்ப்பு இல்லாத ஊரில் வீரர்கள் போர் செய்ய விரும்பவில்லை. 'முட்டாள்கள்' என்று மக்களைத் திட்டிக் கொண்டே வீரர்கள் திரும்பிச் சென்றனர்.

படை பலத்தால், கிழட்டுப்பேய் இவானையும், அவனுடைய மக்களையும் அசைக்க முடியவில்லை. அடுத்து பண பலத்தால் அவர்களைச் சோதிக்க முயன்றது. அதற்காக அது ஒரு பணக்காரப் பிரபுவாக உருவெடுத்தது. இவானிடம் சென்று நவீன வியாபார முறைகளை மக்களுக்குக் கற்றுக்கொடுக்க அனுமதி பெற்றது.

அந்தப் பிரபுவிடம் ஏராளமான பொற்காசுகள் இருந்தன. அந்தக் காசுகளைத் தாராளமாகச் செலவழித்து அவர் ஒரு மாளிகை கட்டத் தொடங்கினார். அப்படியே இவானையும், அவனுடைய மக்களையும் தன் காசுக்கு அடிமையாக்கத் திட்டமிட்டார்.

இவானுடைய நாட்டில் பண்டமாற்று முறைதான் இருந்தது. பணப்



புழக்கம் இருக்கவில்லை. பிரபுவின் பொற்காசுகளை அவர்கள் அதிசயத்தோடு நோக்கினர். பிரபுவின் மாளிகைக்கு வேண்டிய பொருள்களையும், உழைப்பையும் கொடுத்துப் பதிலுக்கு அவருடைய பொற்காசுகளை முதலில் பெற்றனர். அவற்றை ஒரு நூலில் கோத்துப் பெண்கள் மாலையாக அணிந்தனர். அதைச் சக்கரமாகப் பாவித்துச் சிறுவர்கள் அதைத் தெருவில் உருட்டி விளையாடினர். அவர்களுக்குப் பொற்காசு அலுத்து விட்டது. பிரபுவிடமிருந்து அதை ஏற்க மறுத்தனர். பொற்காசுகளைத் தவிர, தங்களுக்குத் தேவையான வேறு ஏதாவது பொருளையோ அல்லது உழைப்பையோ அவர்கள் எதிர்பார்த்தனர்.

கையில் காசை வைத்துக்கொண்டு பிரபு வீடு வீடாகச் சென்று உணவு கேட்டார். அந்த நாட்டில் கடனும் இல்லை. வரியும் இல்லை. மக்கள் காசை லட்சியம் செய்யவில்லை. தங்கள் வழக்கப்படி பண்டமாற்று முறை அல்லது உழைப்புக்கு மட்டுமே உணவு கொடுக்கச் சம்மதித்தனர். பாவம், பிரபு பசியால் வாடினார்.

பிரபுவின் நிலைக்கு இரங்கிய மக்கள் ஐவான் அரசனிடம் சென்று அறிவுரை கேட்டனர். ''ஒவ்வொரு நாளும் பிரபு ஒரு வீட்டிற்குச் சென்று ஏதாவது ஒரு சிறிய வேலையைச் செய்ய வேண்டும். அந்த வீட்டார் பிரபுவுக்கு உணவளிக்க வேண்டும்'' என்று ஐவான் உத்தரவிட்டான். வேறு வழியில்லாமல் பிரபு வீடு வீடாகச் சென்றார். சிறு வேலைகளைச் செய்தார். அதே மாதிரி ஒருநாள் ஐவானின் மாளிகைக்கும் சென்றார்.

மாளிகையின் சாப்பாட்டு அறையை ஐவானின் ஊமைத் தங்கை நிர்வகித்து வந்தாள். அவள் உண்ண வருவோரை எல்லாம் முதலில் கைகளை நீட்டச் சொன்னாள். உழைத்து உரமேறிய கரங்களுக்கே முதலில் உணவிட்டாள். அவர்கள் உண்ட மிச்சம், மீதியை மற்றவர்களுக்குக் கொடுத்தாள். உழைப்பு விஷயத்தில் அவள் மிகவும் கண்டிப்பாக இருந்தாள்.

ஒருநாள் சாப்பிட வந்தவர்களின் கைகளை வழக்கம் போல் அவள் பார்வையிட்டாள். பிரபுவின் கைகள் மென்மையாகவும், சுத்தமாகவும் இருந்தன. உடனே, ''உங்களுக்கு இந்தப் பந்தியில் உணவு கிடையாது. கடைசியில்தான்'' என்று சைகை மூலம் அவள் தெரிவித்தாள். பிரபுவுக்குப் பசி ஒருபக்கம், கோபம் ஒரு பக்கம். ''இதென்ன முட்டாள்தனமான சட்டமாக இருக்கிறதே! கைகளால்தான் ஒரு மனிதன் வேலை செய்ய முடியுமா என்ன? தலையினாலும் செய்யலாம் என்று உங்களுக்குத் தெரியாதா? சொல்லப் போனால் தலையால் வேலை செய்வதுதான் ரொம்பக் கஷ்டம். சில சமயம் தலையே வெடித்து விடும்'' என்று பிரபு ஆத்திரத்தோடு கூச்சலிட்டார்.

''தலையால் வேலையைச் செய்யும் கலையை என் மக்களுக்குச் சொல்லிக் கொடுங்களேன். அது உபயோகமாக இருக்கும்'', என்று பணிவோடு ஐவான் வேண்டினான். பிரபு ஓர் உயர்ந்த கோபுரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அதில் அநேக படிக்கட்டுகள் இருந்தன. பிரபு அவற்றில் ஏறி உச்சியை அடைந்தார். அவர் செய்யப் போகும் புதுமையைக் காண மக்கள் கீழே திரளாகக் கூடினர்.

''உழைக்காமலே வாழ்வது எப்படி?'' என்று பிரபு உரையாற்றினார். உழைப்பு ஒன்றையே உன்னதமாகக் கருதிய அந்த மக்களுக்கு அவருடைய வாய்ச் சொற்கள் புரியவில்லை. சிறிது நேரத்தில் அவர்கள் கலைந்தனர். அப்படி மக்கள் கூடுவதும், கலைவதுமாகச் சிலநாட்கள் கழிந்தன. ஒருவராவது பிரபுவுக்கு உணவு அளிக்கவில்லை. தலையால் உழைக்கும் மனிதன் உணவையும் அப்படியே தயாரிக்க முடியும் என்று நம்பினர்.

பிரபுவுக்குப் பசி அதிகரித்தது. கண்கள் இருண்டன. தலைசுற்றியது. அவர் கீழே சரிந்தார். உச்சியிலிருந்து தரையை நோக்கி உருளத் தொடங்கினார். ஒவ்வொரு படியிலும் அவருடைய தலை 'டங், டங்' என்று இடித்துக் கொண்டு வந்தது.

அதைக் கண்ட மக்கள் ஐவானுக்குச் செய்தி அனுப்பினர். ஐவான் விரைந்தான். ஒவ்வொரு படிக்கட்டிலும் தலையை முட்டிக் கொண்டு உருண்டு வந்த பிரபு, கடைசியில் பூமியிலும் முட்டிக் கொண்டார். பூமி திடீரெனப் பிளந்தது. பிரபுவின் உருவில் இருந்த கிழட்டுப் பேய் அதற்குள் பாய்ந்து மறைந்தது. ஒரு பெரிய ஓட்டை மட்டும் அங்கு காட்சி அளித்தது!

(Leo Tolstoy ரஷ்ய மொழியில் எழுதிய 'The Story of Ivan The Fool' என்ற கதையின் சுருக்கமே இது.)


என்ன விநோதம் பார்!


பத்மா வெங்கட்ராமன்

- ஆந்தையினால் தன் விழிகளை அசைக்க முடியாது. ஆனால், தன் கழுத்தை எப்படி வேண்டுமானாலும் திருப்பும்!
- தனக்குப் பின்னாலுள்ள பொருட்களையும், தன் கழுத்தைத் திருப்பாமலேயே பார்க்கும் ஆற்றல் உள்ள ஒரே பிராணி ஒட்டகைச்சிவிங்கி!
- முணுமுணுக்கும் எலிபெண்ட் சீல் என்னும் பிராணி, யாரேனும் தன் தூக்கத்தைக் கலைத்தால், அவர்கள் மேல் கற்களை வீசும்!
- பீவர் என்னும் பிராணி, வெள்ளம் வரும்போது, அணைக்கட்டின் உயர் மட்டத்தில் குடைந்து, பாதை உண்டாக்கி வெள்ளத்தைத் தடுக்கும்
- ஒட்டகத்தினால், தன் கண்களையும், மூக்கையும் ஒரே சமயத்தில் மூடிக் கொள்ள முடியும். பாலைவனத்தில் மணல் காற்று வீசும்போது ஒட்டகம் மூக்கையும் மூடிக் கொள்ளும்!
- பிறக்கும்போது 1 பவுண்டு எடையுள்ள கரடிக்குட்டி, ஒரு வயதில் 100 பவுண்டு எடை இருக்கும்!
- ஸ்கூல் மாஸ்டர் மீன் என்னும் மீனை ஒரு பள்ளிக்கூடமே (மீன் கூட்டங்கள்) தொடர்ந்து உணவு தேடிச் செல்லும்!
- ஸ்வெல்லல் எனும் பிராணி மரத்தின் மேல் ஏறும்போது திரும்பி இறங்குவதற்கு வாகாக, இலைகளைக் கடித்து, சிறுசிறு துண்டுகளாக ஆக்கிவிடும். இறங்கும்போது அந்தத் துண்டுகளைப் பிடித்துக் கொண்டு இறங்கிவிடும்!
- ராகூன் என்னும் பிராணி, தான் சாப்பிடும் எந்தப் பொருளையும் தண்ணீரில் கழுவிச் சுத்தம் செய்த பிறகே சாப்பிடும்!
- புறக்கள் தூங்குவதே இல்லை. நோயுற்ற புறுதான் தூங்கும்.
- நான்கு முழங்கால்கள் உள்ள ஒரே பிராணி யானை!
- ஜாவாவிலுள்ள ஒருவகைத் தவளைகள் பறக்கும் சக்திஉடையவை!
- எறும்புகளுக்குக் கண் கிடையாது. தங்களுடைய மீசை போன்ற உறுப்பினால், தொட்டு உணர்கிறது!
- பச்சோந்தி தன் ஒரு கண்ணால் ஓர் இடத்தையும், அதேசமயம் மற்றொரு கண்ணால் வேறு ஓர் இடத்தையும் பார்க்கக் கூடிய இயல்புடையது!
- ''ஹம்மிங் பேர்ட்'' என்னும் சிறிய பறவை பின்பக்கமாகப் பறக்கும் சக்தியுடையது.








வெற்றிவேல் வீரவேல் 11
பேருருவம் கொண்டு நின்றார் முருகன். சூரன் நல்லுணர்வு பெற்றான். முருகனை வணங்கி வாழவேண்டுமென்று உள்ளம் சொன்னது. ஆனால் அப்படிச் செய்ய முடியாதபடி ஒன்று தடுத்தது. அது என்ன? ஆணவம்.
கதை: சுகி சிவம்
படம்: வினு
ஆ! அந்தச் சிறுவனை வணங்கி இருப்பதா? என் மானம் போய் விடுமே!
ஏய்! முருகா! மாயத்தால் என்னை மயக்க முடியாது. போரை நடத்து... ம்.
பாசி நிறைந்த குளத்தில் கல் எறிந்தால் பாசி சிறு நிமிடம் விலகும். மறுபடியும் சேர்ந்து கொள்ளும். அதுபோல் சிறு விநாடி முருகன் கருணையால் ஞானம் பெற்ற சூரபன்மனை ஆணவம் மறுபடி சூழ்ந்தது.
வெற்றிவேல்! வீரவேல்!
பலமுறை பொறுத்தோம்! இனி கூடாது. ஆணவச் சூரனை இந்த ஞானவேல் பிளக்கட்டும்.
மாயச் சூரன் மாமர வடிவு எடுத்தான். தீ போன்ற தளிர்கள். புகை போன்ற இலைகள். மரகத மணியாகக் காய்கள். மாணிக்கமாகப் பழங்கள். கிளைகளை அசைத்து நட்சத்திரங்களை உதிர்த்து அகங்காரத்துடன் கூச்சலிட்டான் சூரன்.
என்னை என்ன செய்ய முடியும்? ஹஹ்ஹ ஹஹ்ஹ ஹா.. இப்போதே எல்லோரையும் அழிப்பேன்.
பாய்ந்தது வெற்றிவேல். பிளந்தது மாமரம்
வெற்றிவேல் முருகனுக்கு!
அரோகரா! அரோகரா!



என்னையா அழிக்க முடியும்?
முருகா அபயம்! அபயம்
என்பலத்தைப் பார்த்தாயா?
கருணைக் கடலான கந்தவேள் கடைக் கண் சேவலேயும் மயிலேயும் தீண்டியது.
சேவலே! நீ நம் கொடியாகிச் சூடுக! மயிலே நீ நம் வாகனமாகக் கடவாய்.
கொக்கறுகோ – கொக்கு அறுசிகோ.
மூவிரு முகங்கள் போற்றி சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி.
எப்போதும் தன்னை ஏசிய சூரபன்மனை எல்லோரும் தொழும் சேவல் மயிலாக்கி வைத்தாரை வாழ வைத்தான். முருக வள்ளல்.
இந்திரனே! உன் மனக்குறை நீங்கியதா? தேவ உலக ஆட்சியை மீண்டும் உனக்கே வழங்குகிறேன்.
பிரபோ! மனைவியின் மாங்கல்யத்தைக் காத்தீர்கள். எங்கள் அன்புப் பரிசாக நாங்கள் வளர்த்த அருமை மகள் தெய்வயானையைத் தாங்கள் மணம் செய்து கொள்ள வேண்டும்.


திருமாலின் கண்களில் தோன்றிய பெண்கள் அமிர்தவல்லி சுந்தரவல்லி என்னும் இருவர், முருகனை மணம் புரியத் தவமிருந்தனர். முருகன் கருணையால், அமிர்தவல்லி தேவ உலகில் தோன்றி இந்திரனால் வளர்க்கப் பெற்று தெய்வயானை என்ற பெயருடன் முருகனை மணந்தாள். சுந்தரவல்லியோ பூமியில்....
ஆலோலம்! ஆலோலம்! ஓ கிளிகளே ஆலோலம்!
வள்ளி மலையில் வேடுவர் தலைவன் நம்பிராஜன் வேட்டைக்குப் போகிற சமயத்தில்....
ஆ! வள்ளிக் கிழங்கு பயிரிடும் குழியில் ஒரு பெண் குழந்தை. வள்ளி! அழாதேயம்மா.
அழுகை ஒலி...
நம்பிராஜன் குடிசையில் சுந்தர வல்லி வள்ளியாக வளர்ந்தாள். பருவம் வந்தபின், தினைப் புனத்தில் முற்றிய பயிர்களுக்குக் காவலாக இருந்தாள். அப்போது வாலிப வேடுவ வடிவத்தில் வந்தான் முருகன்.
பெண்ணே! இந்த வழியாக நான் வேட்டையாடிய மான் வந்ததா?
பெண்ணே! உன் பேர் என்ன? ஊர் என்ன? பேசக் கூடாதா?


ஜொம்பொலி - பூம்-பூம்
ஐயோ! அப்பாவருகிறார். இங்கே நிற்காதீர்கள். ஓடி விடுங்கள்.
வரட்டுமே! சாகிறேன். உனக்குத்தான் என்மீது இரக்க மில்லையே.
ஐயோ! ஓடுங்கள்.
மகனே! இந்தா திணை மாவு. ஆ! இது என்ன மரம்? எப்படி திடீரென முளைத்தது?
வெட்டுவோம்! வீழ்த்துவோம். வஞ்சனையாக வந்த மரத்தை அழிப்போம்.
ஐயோ! மரத்தை வெட்டி விடுவார்களோ? அவருக்கு தீங்கு நேருமோ?
ம்.. வெட்டுங்கள். காலம் தாழ்த்த வேண்டாம்.
தொடரும்

குழந்தை இலக்கியப் போட்டியில் ஏ.வி.எம். தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் பெற்றவர்கள்:

குழந்தை எழுத்தாளர் சங்கம், குழந்தை இலக்கியப் போட்டி ஒன்றை அறிவித்திருந்தது. குழந்தைகளுக்குப் புத்தகமாக வெளியிடுவதற்கு ஏற்ற வகையில் கையெழுத்துப் பிரதிகளை அனுப்பும்படி கேட்டிருந்தது.

கவிதை, சிறுகதை, நாடகம், நாவல், அறிவியல், வாழ்க்கை வரலாறு என்ற ஆறு துறைகளில் ஒவ்வோராண்டும் இரண்டு துறைகளுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இந்த ஆண்டு சிறுவர் நாவல், அறிவியல்—இரண்டு துறைகளுக்குப் போட்டி நடத்தி, அவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு 13.11.83—ல் சென்னையில் நடந்த குழந்தைகள் தின விழாவில், சமூக நலத்துறை அமைச்சர் கோமதி சீனிவாசன் பரிசுகளை வழங்கினார். ஏ. வி. எம். அறக்கட்டளை ஏற்படுத்திய இப்பரிசுகளைப் பெற்ற எழுத்தாளர்களைக் கீழே காணலாம்:—

நாவல் போட்டி

முதற்பரிசு — தங்கப்பதக்கம் பெற்ற



ஆர். பொன்னம்மாள், சென்னை-4.

2-வது பரிசு — வெள்ளிப்பதக்கம் பெற்ற



கே. பி. நீலமணி, சென்னை-28.


அறிவியல் போட்டி

முதற் பரிசு — தங்கப்பதக்கம் பெற்ற




ஆர். கோவிந்தராஜுலு, சேலியமேடு.

2-வது பரிசு — வெள்ளிப்பதக்கம் பெற்ற



பால நடராஜன், கோளுபட்டு.



பகைவனுக்கருள்வாய்

-புவனா நடராஜன்.

ராஜ சபையில் சிம்மாசனத்தில் திப்பு சுல்தான் கம்பீரமாக அமர்ந்திருக்கிறான். கண்களில் அபூர்வமான ஒளி. முகத்தில் அமைதி. தெய்வீகக் களை. ஆனாலும், உடலிலும் மனத்திலும் ஏதோ ஒரு வகைக் களைப்பு தென்படுகிறது.

தந்தைக்கு உதவியாக இன்றுவரை எத்தனை போர்க் களங்களைக் கண்டிருக்கிறான்! எண்ணற்ற பிணக் குவியல்களைக் கண்ட பிறகு உலக வாழ்க்கையில் வெறுப்பும் சலிப்பும் தோன்றியது. தெய்வானுக்கிரகத்தால் பிறந்தவனாதலால், அரசனுக்குரிய சுக போகங்களைத் துறந்து துறவறத்தைத் தழுவுவதாக இருந்தவனை விதி விட்டதா?

ஹைதரின் மரணத்துக்குப் பிறகு அமைச்சர் பூர்ணய்யாவின் உபத்திரவம் தாங்காமல் பதவி ஏற்றான். பதவிக்கு முற்றிலும் தகுந்தவனாகவும் நடந்து கொண்டான். அரச பதவி ஏற்றபோதிலும் மனத்தில் இருந்த கனிவு அவனைச் சுற்றியிருந்தவர்களை நட்புப் பாதையில் அழைத்துச் சென்றது. ஆங்கிலேயர்களைத் தவிர.

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துடன் எத்தனையோ இடங்களில் மோதினான். எல்லாவற்றிலும் வெற்றிக்கு மேல் வெற்றிதான். வீர சாகஸங்கள் புரிந்தான். பிரிட்டிஷார் குலை நடுங்கினார்கள்.

திப்புவின் பெயரைக் கேட்டவர் அதிலும் ஆங்கிலேயன் நடு நடுங்கினான். ஆனால், அவனை வணங்கின வெள்ளையனும், நன்றியுடன் நினைத்து உள்ளம் உருகின வெள்ளையனும் இருந்தான்.

வணங்கினானா! அதிலும் இரக்கமற்ற, கொடூர உள்ளம் கொண்ட ஆங்கிலேயன் நன்றியுடன் நினைத்தானா? உள்ளம் உருகினானா?

ஆம்! எதிரியும் வணங்கும் அளவுக்குக் கருணை உள்ளம் கொண்டவன் திப்பு. ஆங்கிலேயருடன் நடந்த போரில் ஆங்கிலேயர் படையே இல்லாதவாறு முறியடித்துப் பகைவர்களைச் சிறையிலடைத்து வைத்திருந்தவன், தன் குருவின் பிறந்த நாளன்று, அத்தனை பேரையும் விடுதலை செய்தான்.

மற்றொரு சமயம் ஆங்கிலேயப்படையுடன் மோதி, வெற்றி வாகை சூடிய பின் சிம்மாசனத்தில் களிப்புடன் அமர்ந்திருக்கிறான். வீரய்யா அருகில் அமர்ந்திருக்கிறார். இங்கிலாந்திலிருந்து வந்த ஒரு கடிதத்துடன் வீரன் ஒருவன் ஓடி வருகிறான். அரச சபையில் பரபரப்பு ஏற்படுகிறது. எல்லார் முகத்திலும் கேள்விக் குறி. என்ன கடிதமோ என்றறியும் ஆவல்.

''வீரய்யா! நீங்களே கடிதத்தை வாங்கிப் படியுங்கள்.'' திப்புவின் குரல் கம்பீரமாக ஒலிக்கிறது.

வீரன் வணக்கத்துடன் கடிதத்தை வீரய்யாவிடம் சமர்ப்பிக்கிறான். கடிதம் இங்கிலாந்திலிருந்தே வந்திருக்கிறது. கையெழுத்து பெண்ணின் கையெழுத்தாக இருக்கிறது. வீரய்யா முகத்தில் ஆச்சரியம் பரவப் படிக்கிறார். அரசனுக்குரிய மரியாதைப் பட்டங்களை எழுதி, அவன் பாதத்துக்குச் சமர்ப்பணம் செய்து ஆங்கிலேயப் பெண் எழுதிய கடிதம் அது.

''என் அருமைக் கணவர் ஆங்கிலேயர் படையில் இருக்கிறார். தங்களுடன் நடந்த படை மோதலில் ஆங்கிலேயர் படுதோல்வி அடைந்ததாக அறிகிறேன். என் கணவரின் தற்போதைய நிலை என்ன? அவரையே இரவும் பகலும் நினைந்துருகி, வாடி நிற்கிறோம், நானும் எங்கள் மூன்று வயது விக்டரும். தந்தையில்லாமல், அவரைக் காணாமல் குழந்தை தவிக்கிறது.

நானும் விதவையா? இல்லை, என் அருமைக் கணவரின் அருமை, அன்பு மனைவியாகவே இன்னும் இருக்கிறேனா என்று அறிந்தால் உள்ளம் அமைதியடையும். தங்கள் கருணை உள்ளத்தைப் பற்றிக் கேள்வியுற்று இக்கடிதத்தைத் தங்களுக்கே எழுதுகிறேன். விடை கிடைக்குமா?''

இந்தக் கடிதத்தைக் கண்ட திப்புவின் உள்ளம் உருகிற்று. கணவனுக்காக உண்மையுடன், தவிப்புடன் காத்திருக்கும் அந்த அன்பு மனைவியின் நிலையும், மழலை மொழி மாறாத பாலகனின் அழகு முகமும் கற்பனையில் தோன்றின. பதிவிரதா தர்மம் பாரதத்துக்கே உரியதல்லவே! மேற்கத்திய நாடான இங்கிலாந்திலும் ஒரு பெண் அந்தத் தர்மத்தைப் பின்பற்றுகிறாள் என்ற நினைப்புத் தோன்றியபோது உள்ளம் நெகிழ்ந்தான் திப்பு.

உடனே தன் ஆட்களை விட்டு அந்த அன்புக் கணவனை உடனே அழைத்து வரச் செய்தான்.

விடுவிக்கப்பட்ட அந்த வெள்ளையனிடம் விஷயத்தைத் தெரிவித்து அவனின் அன்பு மனைவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மிக உயர்ந்த ரக முப்பது முத்துக்களாலான மாலையையும், அன்பு மகனுக்கு உயர்ந்த கற்கள் பதிக்கப்பட்ட தந்தத்தாலான வேலைப்பாடுடைய பல ரகமான விளையாட்டுச் சாமான்களையும் கொடுத்து, மனைவியையும் மகனையும் சந்தித்து மகிழ விடை கொடுத்தனுப்பினான்.

கொடுங்கோன்மையும் சுய நலமுமே உருவான வெள்ளையன், இந்தக் கருணையைக் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. கனவிலும் நினைக்கவில்லை. அவன் உள்ளம் நெகிழ்ந்தது பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அன்புக் கணவனையும், மகனையும் உயர் ரகப் பொருட்களையும் அதனூடே தெரிந்த தெய்வத்தின் அருளையும் கண்ட வெள்ளையனின் மனைவி ஆனந்தக் கண்ணீர் வடித்தாள். திப்புவின் உருவப் படத்தைத் தனக்குக் கட்டாயம் அனுப்புமாறு வேண்டினாள்.

இந்த உயர்ந்த அன்பு, குணங்களெல்லாம் பாரதத்துக்கே உரியது அல்லவா?

எமன் பெயரில் ஓர் ஏரி



தென் ஆர்க்காடு மாவட்டத்திலே ஓர் ஏரி இருக்கிறது. அதற்குப் பெயர் எமனேரி!

58 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த ஏரியை வெட்டினார்கள். அந்த ஏரிக்கு அப்போது சென்னை கவர்னராயிருந்த வெலிங்டன் பிரபுவின் பெயரை வைத்தார்கள்.

ஆனாலும், அதை எல்லாரும் எமனேரி என்றே அழைக்கிறார்கள்.

காரணம், அந்த ஏரியை வெட்டும்போது சில உயிர்களும், சில ஊர்களும் சேதமடைந்தனவாம். அந்த உயிர்களுக்கும் ஊர்களுக்கும் எமனாக வந்த ஏரியை 'எமன் ஏரி' என்று அழைப்பது பொருத்தம்தானே!

புதிர்கள்!

ஆழி


இந்த எலி, பாத்திரங்களிடையே எந்த வழி-யாகப் போனால் பலகாரத்தைத் தின்னலாம்?

1




இந்தக் கோடுகளுக்குள் ஒரு பிராணி மறைந்திருக்கிறது. தெரிகிறதா? தெரியாவிட்டால், புள்ளிவைத்த பகுதிகளை மட்டும் பென்சிலால் தீற்றிப் பாருங்கள்; தெரியும்!

2



இங்கே என்னென்ன பிராணிகள் இருக்கின்றன?



3

4

இந்தக்கட்டங்களில் 7 தமிழ் மன்னர்கள் மறைந்திருக்கிறார்கள். எழுத்துக்களைச் சரியானபடிக் கோடிட்டுப் பிரித்தால் அவர்களைக் கண்டு பிடித்துவிட முடியும்!

க	ரி	ரா	ஜ	ரா	ஜ
ந	கா	ல	வீ	அ	ன்
ர	ம	ன்	ர	தி	பா
சி	கே	பே	பா	ய	ரி
ம்	ங்	க	ண்	மா	ன்
ம	தி	ன்	டி	ய	ன்
ன்	ர	வ	ர்	ம	ன்

க	ரி	ரா	ஜ	ரா	ஜ
ந	கா	ல	வீ	அ	ன்
ர	ம	ன்	ர	தி	பா
சி	கே	பே	பா	ய	ரி
ம்	ங்	க	ண்	மா	ன்
ம	தி	ன்	டி	ய	ன்
ன்	ர	வ	ர்	ம	ன்

விடைகள்:
2. கங்காரு
3. சிங்கம், முயல், முதலை, நீர்யானை.

பாம்பு சொன்ன பாடம்



ஆர். நெடுஞ்செழியன்

அன்றைய பொன்மாலைப் பொழுதை விரட்டி விட்டு முன்னிரவு வளரத் தொடங்கி இருந்தது. முதல் நாள் பள்ளியில் நடந்த நிகழ்ச்சி ராஜாவின் மனத்தை விட்டு இன்னும் விலகாமலே இருந்தது. அதுவே அவன் மனத்தில் வெறியாகிப் பழி வாங்கும் உணர்ச்சியாய் உயர்ந்துவிட்டிருந்தது.

நேற்று எல்லா மாணவர்களும் பத்து திருக்குறள் ஒப்பிக்க வேண்டுமென முன்பே சொல்லி இருந்தார் தமிழ்நேசன். நேற்று அவர் கேட்ட போது மோகன், ராமு, சுந்தரம் மூவரும் 'கிடுகிடு'வென ஒப்பித்து விட்டனர். அடுத்ததாக இவன் முறை வந்தது. ராஜா மூன்று குறள்கூட ஒப்பிக்க முடியாமல் தடுமாறினான். அதைக் கண்ட தமிழ்நேசன் பொங்கி வெடிக்கத் தொடங்கினார்.

''நேற்று விடுமுறையாய் இருந்ததே. வீட்டிலே என்ன செய்தாய்? எருமைமாடு மேய்த்துக் கொண்டிருந்தாயா?'' என்று கேட்டவாறு கோபமாய்ப் பார்த்தார்.

அதுவே ராஜாவுக்குப் பெரிய அவமானமாய்ப் போய்விட்டது. அவன் தமிழ்நேசனை முறைத்துப் பார்த்தான்.

''தடிக்கழுதை! நான்கு குறள் படிக்க லாயக்கில்லை. என்னையா முறைத்துப் பார்க்கிறாய்?''

அதே நேரத்தில் ராஜாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'ஆ...' வென்று அழவுமில்லை. ஆசிரியரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். சக மாணவர்கள் அனைவரும் திகைப்புடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தனர். யாரிடமும் ஒரு சிறு முணுமுணுப்புக் கூட இல்லை. அதுதான் அவனுக்கு மேலும் அவமானமாய்த் தோன்றியது. அதை நினைத்துக் குன்றிப் போனான். இந்த அவமானத்தை எப்படிப் போக்குவது? அவனுள்ளே கேள்வி எழுந்தது. அந்தக் கேள்வியுடன் தொடர்புடையது போல் அந்த விநாடியே அவன் உடம்பு முழுவதும் பழியுணர்ச்சி பரவப் பரவ... அவன் மீண்டும் தமிழ்நேசனை விறைப்புடன் பார்த்தான். அவன் பார்வையில் இருந்த 'அக்கினி'யைக் கண்டதும், அவர் தணிந்த குரலில்—அதே நேரத்தில் உறுதியான குரலில் கூறினார்:

''ராஜா! நீ இப்பொழுதே என் வகுப்பை விட்டு வெளியில் போய் விடு. இதற்கு மேலும் நீ என் முன்னால் இப்படி நடந்து கொண்

டால் நான் பொல்லாதவனாய் மாறி விடுவேன்!''

அவர் அப்படிச் சொன்னதும் அதற்காகவே காத்திருந்தது போல் அவனும் அலட்சியமாய் வகுப்பை விட்டு வெளியேறிவிட்டான். ஆனால், அவன் மனம் மட்டும் அப்பொழுதே சபதம் கொண்டது. ''தமிழ்நேசன் சார்! என்னை அவமானப்படுத்திய உங்களைப் பழிக்குப் பழி வாங்காமல் விடமாட்டேன்; விடவே மாட்டேன்!''

அவரைப் பழி வாங்கத்தான் இப்போது தயாராகிக் கொண்டிருக்கிறான் ராஜா! மாட்டுத் தொழுவத்தில் பரண் மீது நிறைய மூங்கில் கம்புகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து பருமனான ஒன்றை எடுத்துக் கொண்டான். பிறகு யாருக்கும் தெரியாமல் கிராமத்தையும் அந்தச் சிறு நகரத்தையும் இணைக்கும் சாலையில் வேகமாய் நடந்தான்.

அந்தச் சாலை சுமார் ஒன்றரை மைல் தூரம் இருந்தது. இருபுறமும் அடர்ந்த புதர்கள்! ஆங்காங்கே சில பனைமரங்கள் வளர்ந்திருந்தன. ஆள் நடமாட்டமும் அதிகம் இருப்பதில்லை. ராஜா அந்தச் சிறு நகரில் உள்ள பள்ளிக்குச் செல்வதும் அந்தச் சாலை வழியேதான். தமிழ்நேசன், நகரத்தில் சில மாணவர்களுக்கு, 'டியூஷன்' எடுத்துவிட்டு முன்னிரவு வேளையில் தன்னந்தனியாய் வருவதும் அந்தச் சாலையின் வழியேதான். அந்தச்

முதல் பரிசு

"ரேஸில் நான் கடைசியாக வந்தும் எனக்குத்தான் முதல் பரிசு."

"அதெப்படி?"

"அது ஸ்லோ சைக்கிள் ரேஸ்!"

—சுதர்சன்



சாலையோரத்துப் புதரையும் தமிழ்நேசனின் தனிமையையும் பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டிருந்தான் ராஜா! சைக்கிளில் வருவார். அவரது பின்புறமாய்ச் சென்று தலையில் கம்பால் ஓங்கி அடிக்க வேண்டும். அவர் மயங்கி விழும் வரை அடித்துப் போட்டுவிட்டுப் போய்விட வேண்டும். அதுதான் அவனது திட்டம்.

வேகமாய் வந்த ராஜா கொஞ்சம் தயங்கி நின்றான். இப்போது எங்கே பதுங்கி இருப்பது? அதோ... சாலையின் திருப்பம். அங்கே சாலையோரத்தில் ஒரு பனை மரத்தைச் சுற்றிலும் அடர்த்தியாய்ச் செடிகள்!

அவன் அந்தப் பனை மரத்தின் அருகில் சென்றான். அடர்ந்த செடிகளினூடே மறைந்து உட்கார்ந்தான். பிறைநிலவு மென்மையாய் ஒளிவீசிக் கொண்டிருந்தது. ஆயிற்று! தமிழ்நேசன் எந்த நேரத்திலும் வருவார், ஹைதர் அலி காலத்து சைக்கிளை லொடக்... லொடக்கென மிதித்தவாறு! வழிமீது கூர்மையான பார்வையுடன் காத்திருந்தான் ராஜா.

அரை மணி நேரம் ஆயிற்று. அதுவரை தமிழ்நேசன் வரவில்லை. அவன் பொறுமை இழந்தான். ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு யுகமாய் நகர்வதைப் போல் உணர்ந்தான். அப்போது...

''உஸ்ஸ்ஸ்...'' இது என்ன சத்தம்!

அவன் முகத்துக்கு மிக அருகில் படமெடுத்தவாறு சீறிக் கொண்டிருந்தது ஒரு பெரிய நல்ல பாம்பு!

அதைப் பார்த்ததும் ராஜாவின் சப்த நாடியும் அடங்கிப்போயிற்று. இதயம் மட்டும் 'படபட'வென அடித்துக் கொண்டது. திடீரென எழுந்து ஓடவும் முடியாது. அருகிலிருக்கும் கம்பால் அதை அடிக்கவும் முடியாது. ஏனெனில் அவன் கொஞ்சம் அசைந்தாலும் அது நிச்சயம் கடித்து விடும்.

பாம்பு மீண்டும், மீண்டும் 'உஸ்ஸ்ஸ்... உஸ்ஸ்ஸ்...' என்று சீற.. அவன் பயத்தில் உறைந்து போக... அந்த நேரத்திலும் ஒரு வாரத்துக்கு முன் அங்கு நடந்த நிகழ்ச்சி 'சட்'டென அவன் நினைவுக்கு வந்தது.

அன்று பள்ளிக்கூடம் முடிந்து மாலையில் வீட்டிற்கு வந்து கொண்டிருந்த போது... இதே இடத்தில் பாம்பு ஒன்று சாலையைக் குறுக்காகக் கடந்து செல்ல... அதன் மீது ராஜாவும்,

அவனுடன் வந்த சிறுவர்களும் கற்களை எடுத்து வீசி அடிக்க... அது அடிபட்டு ரத்தம் சிந்தச் சிந்தப் புதருக்குள் புகுந்து மறைந்து விட்டது.

இப்போது ராஜாவின் மனத்தில் சந்தேகம் ஏற்பட்டது. ஒருவேளை அது இந்தப் பாம்பாகத்தான் இருக்குமோ? பாம்பை அடித்து உயிரோடு விட்டு விட்டால், அது பழி வாங்கும் என் பார்களே? இது இப்போது என்னைப் பழி வாங்கத்தான் வந்திருக்கிறதோ?


அதிர்ச்சியில் மூடிப் போன விழிகளை மெல்லத் திறந்தான் ராஜா. விரிந்த படத்துடன் இருந்த பாம்பு கடைசியாய் ஒருமுறை சீறிவிட்டு, செடியிலிருந்து இறங்கியது. பிறகு அங்கிருந்து நகர்ந்து... நகர்ந்து... எங்கோ சென்று மறைந்து விட்டது.

இப்போது இழந்த உயிரைத் திரும்பப் பெற்றவன்போல் உணர்ந்தான் ராஜா. பட்டென அவன் மனத்தில் பொறி தட்டிற்று. தன் முகத்துக்கு அருகில் சீறிய பாம்பு... தன் கையாலேயே அடிபட்ட பாம்பு...தன்னைப் பழி தீர்க்காமல் போய்விட்டது! அப்படியென்றால்...? அங்கிருந்து 'விருட்'டென எழுந்தான் அவன். அப்போது....

டயர் பங்சரான சைக்கிளைத் தள்ளியவாறு சாலையின் திருப்பத்தில் வந்து கொண்டிருந்தார் தமிழ்நேசன். திடீரென தம் முன்னால் கம்புடன் தோன்றிய ராஜாவைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். அவன் உடனே தன் கையிலிருந்த கம்பைத் தூக்கித் தூர எறிந்துவிட்டு 'தடால்' என்று அவரது கால்களில் விழுந்தான். தமிழ்நேசன் பதறிப் போய் விட்டார். ஒரு கையால் சைக்கிளைப் பிடித்தவாறு மறு கையால் ராஜாவைத் தூக்கி நிறுத்தினார். அவன் கலங்கிய கண்களுடன் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பிறகு தான் அங்கு வந்த நோக்கத்தையும் அப்போது அங்கு நடந்த நிகழ்ச்சியையும் விசும்பலுக்குஇடையேகூறினான். அதைக் கேட்ட ஆசிரியர் அவன் முதுகில் செல்லமாய்த் தட்டியவாறு சொன்னார்.

''நேற்று வகுப்பில் நானும் உணர்ச்சி வசப்பட்டுவிட்டேன் ராஜா. அதை நினைத்துப் பிறகு ரொம்ப வருத்தப்பட்டேன். எந்த மனிதனுக்கும் பழி வாங்கும் உணர்ச்சி கூடாது. அதுவும் உன் போன்ற சிறுவர்களுக்கு அத்தகைய எண்ணம் இருக்கவே கூடாது. அதை நீ இந்தப் பாம்பு மூலம் உணர்ந்திருக்கிறாய். இப்போது உன் மனம் தெளிவடைந்திருக்கும். இனி மேல் நீ இப்படி நடந்து கொள்ள மாட்டாய் என நம்புகிறேன்!''

அவர் அப்படிச் சொல்லியவாறு சைக்கிளைத் தள்ளிக் கொண்டு நடந்தார். ராஜா பணிவான மாணவனாய் அவர் பின்னால் நடந்தான். இப்போது அவன் மனம் தெளிந்துதான் இருந்தது!



படிப்புக்கு முற்றுப்புள்ளி!

முதல் மாணவன்

தில்லையாடி ராஜா



"அம்பா."

. . . .

அம்மா! அம்மா!!

தொர்ட்டிலாய்த் தொய்ந்திருந்த கட்டிலிலிருந்து தலையை எக்கிப் பார்த்தாள் பார்வதியம்மாள்.

புத்தகங்களையும் நோட்டுக்களையும் வேகமாய் அடுக்கி, அழுக்கேறிய பையில் செருகிக் கொண்டே மீண்டும் குரல் கொடுத்தான் ரவி.

அம்மா—

''ஏண்டா?'' சன்னமான குரலில் மகனைப் பார்த்தாள் பார்வதியம்மாள்.

''என்ன, ஏண்டாங்கிறே? ஸ்கூலுக்கு டயம் ஆயிட்டுத்துல்லே.''

அவன் 2 கி. மீ. நடக்க வேண்டும். பூக்கொல்லை ஆண்டவர் பள்ளிக்கூடத்து ஆறும் வகுப்பு 'சி' பிரிவு ஆஜர்ப் பட்டியலில் இவன் பெயர் இருக்கும்.

என். ரவி.

''அக்கா எங்கேடா?''

''அப்பாகூட அக்காவும் வயலுக்குப் போயிருக்கும்மா. இன்னிக்கும் லேட்டாத்தான் ஆவப் போவுது. ஒருநாள் கூடநேரத்துக்குப்போக முடியறதில்லே. முதல் பீரியடு ஆர். கே. சாரு சத்தம் போடுவாரு. சீக்கிரம் வாம்மா. பசிக்குது.''

பார்வதியம்மாள் —

வறுமைக்கு உதாரணமாய் எலும்பும் தோலுமாய் நின்றாள். கண்களின் ஓரத்தில் கருவட்டம் பாய்ந்திருந்தது. தலைமுடியின் பெரும் பகுதி கறுப்பிலிருந்து வெளுப்புக்கு நிறமாற்றம் பெற்றிருந்தது. அவள் சற்றைக்கொரு தரம் இருமிக் கொண்டாள்.

பழைய சோற்றைப் பிழிந்து தட்டிலே வைத்தாள். நார்த்தங்காய் ஊறுகாயை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டுத் திரும்பவும் அந்தக் கயிற்றுக் கட்டிலில் சாய்ந்து கொண்டாள்.

சோற்றை வேகமாய் அள்ளிப் போட்டுக்கொண்டு அவன் கிளம்பினான்.

''ஏய், ரவி!''

''ஏம்மா! சீக்கிரம் சொல்லு.''


''போய் அக்காவை வரச் சொல் விட்டு அப்படியே ஸ்கூலுக்குப்போடா'' அம்மாவுக்கு மூச்சு இரைத்தது.

''இப்பவே ஸ்கூலுக்கு லேட்டு. வயலுக்கு இன்னும் ஒரு அரை கிலோ மீட்டர் நடக்கணும்.'' மனத்தில் நினைத்துக் கொண்டே ஓட்டமும் நடையுமாக ஓடினான்.

பெண்கள் நடவுப் பாட்டைப் பாடிக் கொண்டே நடவு நட்டுக் கொண்டிருந்தார்கள்.

''ஏய், இப்பத்தான் போறியா? ஓடுடா சீக்கிரம்,'' நாட்டாண்மைக் கார நாகலிங்கம் அவனைத் துரிதப் படுத்தினார்.

கங்காருக்குட்டி: அம்மா, அம்மா, என்னையும் அந்த மாதிரி இடுப்பிலே வச்சுக்கம்மா



வயலை நெருங்கி விட்டான். தூரத்தில் நின்ற அக்கா அவன் பார்வையில் பட்டு விட்டாள்.

''அக்கா, வீட்டுக்குப் போ. அம்மா உன்னை வரச் சொல்லிச்சு.''

அவன் பள்ளியை அடைந்த போது முதல் பீரியட் ஆரம்பித்துப் பதினைந்து நிமிடம் தாண்டி விட்டது.

ஆர். கே. என்று எல்லோராலும் அழைக்கப்படுகின்ற ஆசிரியர் ஆர். கைலாசம் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்.

வியர்க்க, விறுவிறுக்க நிற்கும் ரவியைப் பார்த்து, பாடத்தை நிறுத்தினார். உடன் படிக்கும் மாணவர்கள் முரட்டுச் சிரிப்புச் சிரித்தனர்.

''காலந்தவறாமை பத்திப் பேசிக்கிட்டிருக்கிறேன். இவன் காலந்தாழ்த்தி வந்திருக்கான். வாடா இங்கே.''

ரவி மெதுவாய் அவரருகில் வந்தான்.

''ஏண்டா லேட்டு?''

''அம்மாவுக்கு உடம்பு சரியில்லே சார்.''

''உண்மையைத்தான் சொல்றியா?''

''சத்தியம் சார்!''

''சரி போய் உட்கார்.''

ரவிக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

''எப்பவும் லேட்டாத்தான் சார் வர்ரான். கேட்டா அம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு சொல்றான். அவன் சொல்வது பொய் சார்'' மூன்றாவது பெஞ்சிலிருந்து எழுந்து குரல் கொடுத்தான் செல்வம்.

''லேட்டா வந்தாலும் நடத்தின பாடத்தை அவன் கவனமாப் படிக்கிறான். போன மாதத் தேர்வில் முதல் மதிப்பெண் வாங்கியிருக்கிறான். நீ எத்தனை மார்க் வாங்கியிருக்கே?''

''எட்டு சார்'' லேசான குரலில் செல்வம் சொன்னான்.

''100—க்கு 8. உருப்பட்டாப் போலத்தான் இந்த லட்சணத்திலே அடுத்தவனைப் பத்தி கோள்சொல்றே!''

மாணவர்கள் கொல்லென்று சிரித்தனர். அவமானமடைந்து உட்கார்ந்தான் செல்வம்.

ரவி எல்லாப் பாடங்களிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மாணவனாகத் திகழ்ந்தான். செல்வத்தின் வீட்டில்தான் பண்ணையாளாக ரவியின் அப்பா வேலை பார்த்தார். நம் வீட்டில் வேலை பார்க்கும் பண்ணையாள் மகன் முதல் மாணவனாக விளங்குகிறானே என்ற பொறாமை செல்வத்துக்கு.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

அரையாண்டுத் தேர்வு நடந்து அன்றுதான் முடிந்தது. மறுநாளிலிருந்து பத்து நாட்கள் விடுமுறை என்று தலைமை ஆசிரியர் அறிவித்தார்.

மகிழ்ச்சியுடன் வீடு திரும்பிய ரவிக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

அம்மா இறந்து விட்டாள்.

சின்ன வயதில் நிலவைக் காட்டிச் சோறு ஊட்டிய அம்மா—

''புதுச்சட்டை போட்டுக்கிட்டு நடந்தா, என் பிள்ளை ராஜா வாட்டம் இருப்பான்!'' என்று மகிழ்ந்த அம்மா—

'பனியிலே அலைஞ்சா உடம்புக்கு ஆகாது கண்ணு' என்று உருகிய அம்மா—

பிள்ளையின் பசி பொறுக்காத அம்மா—

திரும்பிவராத இடத்துக்குப் போய் விட்டாள்!

வாசலில் தட்டுப் பந்தல் போட்டுக் கொண்டிருந்தார்கள். நீண்ட பெஞ்சில் சில பேர் உட்கார்ந்திருந்தார்கள்.

பெருங்குரலில் அக்கா அழுவது கேட்டது. , கலங்கிய கண்களுடன் வீட்டுக்குள் ரவி நுழையவும் அவனை ஓடிவந்து கட்டிக் கொண்டு அழுதார், அப்பா.

''நம்மையெல்லாம் அனாதைகளா ஆக்கிட்டு அம்மா போயிட்டாடா!''

அம்மாவின் பத்தாம் நாள் காரியங்களெல்லாம் முடிந்து விட்டன.

அன்று காலை—

ரவியின் அப்பா நாராயணன், செல்வத்தின் அப்பா தணிகாசலத்திடம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது ரவியும் செல்வமும் உடன் இருந்தனர்.

''நோய் நொடியாக் கிடந்தவளும் இப்போது என்னைத் தனியாத் தவிக்க விட்டுட்டுப் போய்ச் சேர்ந்துட்டா. அவள் இருந்தது எனக்குத் தெம்பாய் இருந்தது. என் பொண்ணுக்கு ஒரு கல்யாணம் செஞ்சு பார்க்க அவளுக்குக் கொடுத்து வைக்கலியே!''

''கவலைப்படாதே நாராயணா. கால நேரம் கூடி வந்தால் எல்லாம் தானா நடக்கும்'' என்று தணிகாசலம் தேற்றினார்.

செல்வத்தின் மூளை வேலை செய்தது. திடீரென்று அவர்கள் பேச்சில் குறுக்கே நுழைந்தான்.

''அப்பா, அந்த அக்கா கல்யாணத்துக்குச் செலவு செய்ய ' அவர் பணத்துக்கு எங்கே போவார்? அந்தச் செலவை நாமே ஏத்துக்கலாமே!''

செல்வத்தின் பேச்சை உடனே அங்கீகரித்தார் தணிகாசலம்

''என் பிள்ளை சொன்ன மாதிரி கல்யாணத்துக்கு ஆகிற செலவைப் பத்திக் கவலைப்படாதே! நான் தர்றேன். உடனே மாப்பிள்ளையைப் பாரு ''

''வேண்டாங்கய்யா உங்களுக்குச் சிரமம்'' அவசரமாய் மறுத்தார் நாராயணன்

''பணத்தை ஒண்ணும் அப்பா இனமாத் தரப் போறதில்லே. கடன் தான். அதை நீங்களும் ரவியும் வேலை



என்ன காரணம்?

''என்னடா, இந்த சேது இப்படி கர்வத்தோடு போறான்?''

''அவன் பேரிலே ரயில் விடுறாங்களே — சேது எக்ஸ்பிரஸ்— அது தான் காரணம்.''

—எஸ். புவனேஸ்வரி

செஞ்சு அடைச்சுடுங்க. அவன் இனிமே படிச்சு என்ன பெரிசா உத்தியோகம் பார்க்கப் போறான்?''— செல்வம் இப்படிச் சொல்ல, தணிகாசலம் புன்னகைத்துக் கொண்டார்.

ரவியின் படிப்புக்குச் செல்வத்தின் தயவால் முற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது.

மறுநாள் காலை —

தேர்வில் மாணவர்கள் வாங்கிய மதிப்பெண்களை வாசித்தார் ஆசிரியர் ஆர். கே.

''வழக்கம் போல் இந்த முறையும் முதலிடம் ரவிக்குத்தான்.''

மாணவர்களின் கைதட்டல்கள்.

''ரவி எங்கே?'' என்று ஆசிரியர் கேட்டார்.

''அவன் வரமாட்டான் சார்'' செல்வம் எழுந்து சொன்னான்.

''ஏண்டா?''

''அவனும் அவங்க அப்பாவும் எங்க வீட்டிலே வேலை செய்யப் போறாங்க.''


ஆசிரியர் ஒரு நிமிடம் மௌனமானார்.

கொத்தடிமை, நன்றாகப் படிக்கும் ஒரு மாணவனைத் தத்தெடுத்துக் கொண்டு விட்டது!

''எப்படியும் கடைசி மார்க் உனக்குத்தாண்டா. அதே எட்டு'', ஆசிரியரின் கேலிக் குரலில் செல்வம் குறுகிப் போனான்.

வெவ்வேறு வடிவில் விநாயகர்

ராதா கிருஷ்ணன்



பிள்ளையார் பெண் அவதாரம் எடுத்த கதையைப் பற்றி 'கோகுலம்' (செப்டம்பர் 1983) இதழில் தம்பி அருள் சிவபாலன் கேட்டிருந்தான். அப்படிப் பட்ட ஒரு புராணக் கதையை நான் படித்ததில்லை. ஆயினும் பிள்ளையாரின் பல அபூர்வமான உருவங்களை நேரிலே கண்டிருக்கிறேன். சில உருவங்களைப் பற்றிப் புத்தகங்களிலும் படித்திருக்கிறேன். அவற்றைப் பற்றி உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

சுசீந்திரம் ஆலயத்தில் அம்மன் சன்னதிக்கு அருகில் உள்ள ஒரு தூணில் பிள்ளையார் பெண் உருவில் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். 'கணேசனி' என்று அவரை அழைக்கிறார்கள்.

மதுரை ஆலயத்தில் சுந்தரேசுவரர் சன்னதிக்கு அருகில் பிள்ளையார் 'வியாக்ரபாத கணேசனி' என்னும் விசித்திர உருவத்தில் காணப்படுகிறார். அந்தக் கணேசனிக்குப் புலியின் கால்கள்; இரண்டே கைகள். ஒரு கையில் தாமரைப் பூ. இன்னொரு கை, மீனாட்சியம்மன் பாணியில் தொங்க விடப்பட்டிருக்கிறது!

ஜபல்பூருக்கு அருகில் உள்ள பேர்காட் (BHERE GHAT) என்ற ஊர்க் கோயிலிலும் 'கணேசனி'யை யோக உருவில் காணலாம்.

பிள்ளையார் ஒரு சிறு குழந்தை உருவத்திலே தவழும் காட்சியைக் காணலாம். எங்கே? வேலூரில் உள்ள ஜலகண்டேசுவரர் ஆலயத்தில்.

கணபதியைப் பிரம்மச்சாரி என்றே பொதுவாகக் கூறுகிறோம். அவர் மடிமேல் சக்தியை வைத்துக் கொண்டு, 'வல்லப கணபதி'யாக இருப்பதையும் சில ஊர்களில் காணலாம்!

திருவொற்றியூரில் அவர் ஐந்து முகங்களோடு திகழ்கிறார்!

தமிழ் நாட்டின் பல ஆலயங்களில் 'கூத்தாடும் பிள்ளையார்' என்ற பெயருடன் நர்த்தனம் ஆடுகிறார்!

கண்ணனைப் போலவே கணபதியும் ஸ்ரீசைலத்தில் புல்லாங்குழல் ஊதுகிறார்!

நாகை நீலாயதாட்சி ஆலயத்தில், ஐந்து முகங்களோடு அவர் சிங்கத்தின் மீது பவனி வருகிறார்.

திருச்செங்காட்டான்குடியில் ஒரு விநாயகர் இருக்கிறார். அவருடைய முகம் யானை முகமாக இல்லை. மனித முகமாக இருக்கிறது. அவரை 'நரமுக விநாயகர்' என்று அழைக்கிறார்கள்!

சாதாரணமாகப் பிள்ளையாரைச் சிறிய உருவத்தில் தெரு ஓரங்களிலும், அரச மரத்தடிகளிலுமே காண்கிறோம். ஆனால், மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் உள்ள முக்குறுணிப் பிள்ளையாரும், காரைக்குடிக்குப் பக்கத்திலுள்ள பிள்ளையார் பட்டியில் மலையிலேயே உருவாக்கப்பட்ட பிள்ளையாரும் பிரும்மாண்டமான உருவத்தில் காட்சி அளிக்கின்றனர்!

இப்போது விம்பிள்டனில் விநாயகர், கலிபோர்னியாவில் கணபதி, பாரீசில் பிள்ளையார்-என்று பிள்ளையாரின் பெருமை உலகெங்கும் பரவி வருகிறது. இலங்கை, பர்மா, திபெத்து, ஜப்பான், இந்தோனேஷியா, லாவோஸ் கம்போடியா, வியட்நாம் முதலிய நாடுகளிலும் அந்தந்த நாட்டாரின் கலாசாரத்திற்கு ஏற்றபடி புதுப் புதுக் கோலங்களைத் தாங்கிப் பிள்ளையார் அருள் புரிந்து வருகிறார்!



தீபாவளிப் பரிசு

இளசை எஸ். சுந்தரம்

தனது சட்டைப் பைக்குள் கையை விட்ட சுவாமிநாதன் திடுக்கிட்டார். பையில் வைத்திருந்த பணத்தில் பத்து ரூபாய் குறைந்திருந்தது. நேற்று இரவு கழற்றிப் போட்ட சட்டையில் காலையில் பார்த்தால் பணத்தைக் காணோம்! யார் மேல் சந்தேகப்படுவது?

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாட அவரது மூன்று பெண்மக்களும் தங்களது குடும்பத்தோடு வந்து வீட்டில் தங்கியிருக்கிறார்கள். பெரியவர்களைச் சந்தேகப் படுவதா, பேரன் பேத்திகளைச் சந்தேகப் படுவதா அல்லது சிறுவர்களான தம்முடைய மகன்கள் மூர்த்தி, சேகர் ஆகியோரைச் சந்தேகப்படுவதா?

பத்துரூபாய் களவு போய்விட்டது கூட அவருக்குப் பெரிதாகப்படவில்லை. திருடும் பழக்கம் மிகவும் கொடியதாயிற்றே! மனிதனுடைய முன்னேற்றத்தையும் ஒழுக்கத்தையும் கெடுத்துவிடுமே! இந்தக் கெட்ட பழக்கம் யாரிடம் இருக்கிறது, அதைக் கண்டு பிடித்துத் திருத்த வேண்டுமே....! அதுதான் அவருக்குக் கவலை.

பட்டாசு வெடிக்கும் ஆர்வத்தால் சிறுவர்களில் யாராவது எடுத்திருப்பார்களோ என்று யோசித்தார். பேரன்களையும், பேத்திமார்களையும், தம் மகன்களையும் விசாரித்தார். எல்லோரும் 'நான் இல்லை...' 'நான் இல்லை' என்று சொல்லி விட்டார்கள். இந்தப் பத்து ரூபாய்த் திருடனை எப்படிக் கண்டுபிடிப்பது? கோபத்தோடு அவர் மூளையைக் குழப்பிக் கொண்டார். எல்லோரும் கவலை தோய்ந்த முகத்துடன் என்ன நடக்குமோ என்று பயந்தபடி இருந்தனர். தீபாவளிப் பலகாரங்கள் உண்ணப் படாமல் அப்படி அப்படியே கிடந்தன.

''பணத்தை எடுத்தது யாருன்னு மரியாதையா சொல்லிடுங்க; இல்லேன்னா அது தெரிகிற வரை யாருக்கும் சாப்பாடு கிடையாது'' என்று சத்தம் போட்டார், சுவாமிநாதன். எல்லோரும் மௌனமாக இருந்தார்கள். யாரும் வாயைத் திறக்கவில்லை.

மதியமாகி விட்டது. எல்லாருக்கும் பசி வயிற்றைக் கிள்ளியது. சுவாமிநாதன் கூடச் சாப்பிடாமல்தான் இருந்தார். இந்தப் பிரச்னைக்கு எப்படித் தீர்வு காண்பது என்று அவரது மனைவி கண்ணம்மாள் தீவிரமாக ஆலோசனை செய்தாள். பச்சைக் குழந்தைகள் பசியினால் கீரைத் தண்டாக வாடுவதை அவளால் சகிக்க முடியவில்லை. ஒவ்வொருவரையும் தனியாக அழைத்து விசாரித்தும் பலன் இல்லை.

''எப்படியும் இந்தத் தவறு செஞ்சது யாருன்னு தெரிஞ்சாகணும். இல்லாட்டி யாரையும் சாப்பிட விடப் போறதில்லே'' - பிடிவாதமாக இருந்தார் சுவாமிநாதன்.

திடீரென்று எழுந்து நின்ற மூர்த்தி, அதாவது அவரது மூத்த மகன், ''அப்பா...' என்று ஏதோ சொல்லத் தொடங்கினான். 'அப்பாடி! திருடன் யாருன்னு தெரிஞ்சு போச்சு!' என்று நம்பிக்கையோடு எல்லோரும் அவனைப் பார்த்தார்கள். தகப்பனாரும், ''ஏண்டா நீதான் எடுத்தியா?'' என்று கேட்டதும், அவனுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது.

''அப்பா, நான் பணத்தை எடுக்கலே... ஆனா... எடுத்தது யாருன்னு கண்டுபிடிக்கப் போறேன்'' என்று அவன் சொன்னதும் எல்லோரும் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தார்கள்.

''எப்படிக் கண்டுபிடிக்கப்போறே?'' என்று அப்பா கேட்டதும், ''அதற்கு ஒரு வழி இருக்கு'' என்றவன்,

எல்லோரையும் கொஞ்ச நேரம் வீட்டுக்கு வெளியே இருக்கும்படி சொன்னான். பிறகு அவன் மட்டும் தனியாகப் பூஜை அறையில் நுழைந்து கடவுளுக்குப் பூஜை செய்தான். வீட்டிலுள்ள பொருள்களை உருட்டி ஏதேதோ தேடினான். பிறகு தனது திட்டப்படி எல்லாவற்றையும் சரியாகச் செய்துமுடித்துவிட்டு வெளியே வந்தான். மற்றவர்களைப் பார்த்துப் பேசினான்:

''பூஜை அறையில் சாமி படத்துக்கு முன்னால் விபூதித் தட்டில் விபூதியைக் குவித்து அதில் ஒரு நீளமான இரும்புக் கம்பியை நட்டுவைத்திருக்கிறேன். ஒவ்வொருவரும் தனித் தனியாகப் பூஜை அறைக்குள் நுழைந்து கடவுளை வணங்கிவிட்டு அந்த இரும்புக் கம்பியை வலது கையால் பிடித்து விட்டு வர வேண்டும். அப்போது குற்றவாளி யாரென்று கடவுள் எனக்குக் காட்டிக் கொடுத்து விடுவார்'' என்று சொன்ன மூர்த்தி, வெளியில் உட்கார்ந்து கடவுளைத் தியானிக்கத் தொடங்கிவிட்டான்.

அவன் சொன்னதுபோல் ஒவ்வொருவரும் தனித்தனியாக பூஜையறைக்குள் சென்று விட்டு வந்தார்கள். எல்லோரும் சென்று திரும்பியவுடன் மூர்த்தி எழுந்தான். ஒவ்வொருவருடைய வலது கையையும் பிடித்து உள்ளங்கையில் முத்தமிட்டான். இவன் என்ன செய்யப் போகிறான் என்று எல்லோரும் ஆச்சரியத்தோடு காத்து நின்றபோது ''குற்றவாளியைக்கண்டு பிடிச்சுட்டேன்'' என்று அவன் மகிழ்ச்சியோடு கூறினான்.

''யாரது?'' என்று அப்பா கேட்டார்.

''இதோ இவன்தான்'' என்று தனது தம்பி சேகரைச் சுட்டிக்காட்டினான் மூர்த்தி. சேகர் பேந்தப் பேந்த விழித்தான். பயத்தால் உடம்பு நடுங்கியது. அச்சத்தோடு அம்மாவுக்குப் பின்னால் போய் நின்று கொண்டான். அவமானம் பிடுங்கித் தின்ன அழுகை பொத்துக் கொண்டு வந்தது.

''குற்றவாளியை இவ்வளவு சரியாக எப்படிக் கண்டுபிடித்தாய்?'' என்று அப்பா கேட்டார். எல்லாரும் அதை அறிய ஆவலாக இருந்தனர். மூர்த்தி சொல்லத் தொடங்கினான்.

''முதல்லே ஒரு இரும்புக் கம்பியை எடுத்தேன். கொஞ்சம் பெருங்



காயத்தை எடுத்து, அதை நல்லாக் கரைச்சு இந்த இரும்புக் கம்பி மேலே பூசினேன். அது நல்லா உலர்ந்த பிறகு விபூதித் தட்டில், விபூதியைக் குவிச்சு அதில நட்டு வச்சேன். சும்மா கம்பியைத் தொடச் சொன்னால் அதோட முக்கியத்துவம் உங்களுக்குத் தெரியாதுங்கிறதனால கடவுளுக்குப் பூஜை பண்ற மாதிரி நடிச்சேன். இப்போ உங்க எல்லாரோட கையும் முகர்ந்து பாருங்க. பெருங்காய வாசனை அடிக்கும். நீங்க எல்லாம் குற்றம் செய்யாததனாலே தைரியமா கம்பியைப் பிடிச்சிருக்கிறீங்க. ஆனா, குற்றம் செய்த சேகர் ''கம்பியைத் தொட்டால் அகப்பட்டுக் கொள்வோமோ!'' என்று பயத்தில் அந்த இரும்புக் கம்பியைத் தொடாமலே வந்துட்டான். அதனாலே அவன் கையிலே பெருங்காய வாசனை இல்லை.. அதனாலே அகப்பட்டுக்கிட்டான்.'' என்று மூர்த்தி சொல்லி முடித்ததும் எல்லோரும் மகிழ்ச்சியோடு சிரித்தார்கள். மூர்த்தியின் முதுகைத் தட்டிக் கொடுத்தார் அப்பா.


ஆனால், சேகர் மட்டும் அழுது கொண்டிருந்தான். அவனது கையைப் பிடித்து இழுத்த அப்பா, ''பணத்தை என்னடா செஞ்சே'' என்று அதட்டிய போது. ''நேற்று ராத்திரி வெடி வாங்கிப் பக்கத்துத் தெருவிலே போய்ச் சிநேகிதங்களோட வெடிச்சேன். இனிமே அப்படிச் செய்ய மாட்டேன் அப்பா'' என்று அவன் கெஞ்சினான்.

அவனை அடிக்க அவர் கையை ஓங்கிய போது, மூர்த்தி, தம்பியை அணைத்துக் கொண்டான். ''அப்பா அவன் தவறை உணர்ந்து விட்டான்; இனிமேல் அப்படிச் செய்ய மாட்டான்; எனக்காக அவனை மன்னித்து விடுங்கள். அது நீங்கள் எனக்குக் கொடுக்கும் தீபாவளிப் பரிசாக இருக்கட்டும்'' என்று மூர்த்தி சொன்னதும், அதை அவர் ஏற்றுக் கொண்டார்.

தம்பியை அரவணைத்துக் கொண்ட மூர்த்தி, ''அப்பா பையிலேருந்து நேற்று நீ எடுத்த பணம் வெடி வாங்கி வெடிச்சதுக்கப்புறம் ஒண்ணுமில்லாமல்போயிடிச்சு. ஆனால், உன் மேலே திருடன்னு களங்கத்தை ஏற்படுத்திச்சு பாத்தியா? அற்ப ஆசைகளுக்கு இடம் கொடுக்காமல் ஒழுக்கமா வாழணும். அப்பதான் மதிப்புக் கிடைக்கும்'' என்று புத்திமதி சொன்னான்.

''அண்ணா, இன்னிக்கு நான் அவமானப்பட்டது போதும், இனிமேல் ஒருநாளும் இப்படிச் செய்யமாட்டேன்'' என்று அண்ணனைக் கட்டிக் கொண்டான் சேகர்.

மூர்த்தியின் புத்திசாலித்தனத்தை மெச்சியபடி எல்லோரும் மகிழ்ச்சியோடு சாப்பிட அமர்ந்தனர்.



ஆம்! ஓம்!


ஒருவர் கூறும் கருத்தை ஆமோதிப்பதற்கு 'ஆம்' என்று சொல்கிறோம். 'ஆம்' என்பதற்குப் பதிலாக ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு 'ஓம்' என்றுதான் கூறி வந்தார்களாம். சிலோன், சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இப்போதும் 'ஓம்' என்றே கூறி வருகிறார்கள்.


இப்படிக் கூறுவதை நாமும் இந்து நிர்வாகப் பள்ளிகளில் ஆஜர் எடுக்கும் போது நடைமுறைக்குக் கொண்டுவரலாமே!


—புலவர் கீரன் பேசக் கேட்டது

—ரா. மது (1121), கோவை.

ஓவியர் ஆகலாம்!







மல்யுத்தம்

குண்டுமணி

மல்யுத்தம் என்பது, இரு பலசாலிகள் ஒருவருக்கொருவர் உடல் வலிமையினால் மற்றவரைத் தூக்கியெறிந்து அயர வைப்பதாகும். நைல் பிரதேசத்திலுள்ள பெனிஹாசனில் சித்திரங்களாக மல்யுத்தங்களைப் பற்றிய விவரங்கள் காணக் கிடைக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன் 3400 ஆண்டுகளுக்கு முன்னாலுள்ள இந்தச் சித்திரங்கள், இருநூறு மல்யுத்தக் குழுக்கள் இருந்ததைத் தெரிவிக்கின்றன. கிரேக்கர்களே மல்யுத்தக் கலையை வளர்த்தவர்கள். தீஸியஸ் அரசர் மல்யுத்தப் போட்டிகளுக்கான விதிமுறைகளைக் கண்டிருக்கிறார். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கி. மு. 704—ம் ஆண்டிலேயே மல்யுத்தம் இடம் பெற்றது.

கிரேக்கர்கள் உடல் பலத்துக்கேற்ப மல்யுத்த வீரர்களைப் பிரித்துக்கொள்ளவில்லை. அதனால், வெற்றி பலசாலிகளுக்குப் போயிற்று. கிரேக்க நாட்டில் மல்யுத்தப் பள்ளிகளும் உண்டு. கிரேக்க மல்யுத்த வீரர்கள் தங்கள் உடலில் போட்டிக்கு முன்னால் எண்ணெய் தடவிக் கொள்வதும் 'பிடி'க்காக ஒரு வகைப் பவுடரைத் தெளித்துக் கொள்வதும் சகஜம்.

மூன்று தடவை ஒரு மல்யுத்த வீரரை விழத் தட்டுவதும் தோள்களைத் தரையில் பதிய வைப்பதும் வெற்றியாளரின் குறிக்கோள். இரண்டு வகை மல்யுத்த வகைகள் உண்டு. மல்யுத்த வீரர் தம் எதிரியை வசமாகப் பிடித்து, கைகளையோ, முழங்கைகளையோ பிடித்துக் கொள்வது. மற்றொன்று நழுவ விடாமல் அமுக்கித் தள்ளி, பிறகு புரட்டியெடுத்து விழச் செய்துவிடுவதாகும்.

கிராட்டனைச் சேர்ந்த மிலோ ஆதி நாட்களில் தலைசிறந்த மல்யுத்தவீரர். எடைப் பயிற்சியை மிலோ கைக்கொண்டவர். சிறுவனாக இருக்கும்

போது மிலோ கன்றுக் குட்டியை அதன் பிறந்த நாளிலிருந்து தோளில் சுமந்து சென்றிருக்கிறார். அந்தக் கன்றுக் குட்டி பசுவான பிறகு மிலோ அதனைச் சுமந்து கொண்டு ஒலிம்பிக் மைதானத்தை வளைய வருவார்.

'Pankration' என்ற வகை மல்யுத்தத்தில் எந்த வகையிலும் எதிரியை வீழ்த்தலாம். உதைப்பதும் நெரிப்பதும் கூட உண்டு. இதனால் பல போட்டியாளர்கள் மரிக்க நேர்ந்தது. இந்த வகை மல்யுத்தத்தில் புகழ் பெற்றவர் தியோகஸ் தாஸோஸ். கிரேக்க நாட்டில் மல்யுத்தப் போட்டிகளில் லஞ்சம், புரோபஷனலிஸம் புகுந்து அந்த விளையாட்டின் மகிமையைக் குறைத்தன. ஜப்பானில் ஜூ ஜுட்சு பள்ளிகளில் மல்யுத்தம் தரமான முறைகளில் அந்தக் காலத்தில் கற்றுத் தரப்பட்டது.

பிரபல அமெரிக்க மல்யுத்த வீரர் வில்லியம் முல்டூன் அமெரிக்காவில் மல்யுத்தம் வாயிலாக ஒரு மில்லியன் டாலர் சம்பாதித்தவர். அமெரிக்காவில் டாம் ஜென்கின்ஸ் உலக சாம்பியன் பதவியைப் பெற்றவர்.

1921—ம் வருஷம் மல்யுத்த அமெச்சூர்களுக்காகச் சர்வதேச மல்யுத்தக் கழகம் ஸ்விட்சர்லாந்திலுள்ள லாசேனில் துவங்கப்பட்டது. இந்தக் கழகமே முதல் உலக மல்யுத்தப் போட்டியை நிர்வகித்தது.

1896 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் ஹெவிவெயிட் ப்ரீஸ்டைல் மல்யுத்தப் போட்டியில் ஜெர்மானிய மல்யுத்த வீரர் ஷூமன் வெற்றியடைந்தார்.





சர்வதேசப் போட்டிகளுக்கு, பாய் 12 மீட்டர் சதுரத்தில் விரிக்கப்பட்டிருக்கும். போரிடும் பகுதி 9 மீட்டர் விட்டத்தில் இருக்கும். நடுவில் மத்திய விட்டம் 1 மீட்டர் அளவில் போடப்பட்டிருக்கும். இரு மூலைகளில் சிவப்பிலும், நீலத்திலும் வர்ணப் பகுதி ஆட்டக்காரர்களுக்கு இருக்கும்.

மல்யுத்தப் போட்டிகளுக்கு ஒரு ரிபரி, 2 பாய் சேர்மன்கள், 3 நீதிபதிகள் 4 நேரக் கணிப்பாளர்கள் இருந்து பந்தயத்தை நிர்வகிப்பார்கள்.

ஆட்டம் தொடங்கப்படுவதற்கு முன் இரு மல்யுத்த வீரர்களும் நடுவருக்கு முன் கைகுலுக்கிக் கொள்வார்கள். நடுவர் மல்யுத்த வீரர்களது உடலைப் பரிசோதித்த பிறகு தங்கள் மூலைக்குச் செல்வார்கள். விசில் ஊதியதும் போட்டி தொடங்கும். மூன்று ரவுண்டுகள்: ஒவ்வொரு ரவுண்டுக்கும் மூன்று நிமிஷங்கள் நேரம் ஒதுக்கப்பட்டிருக்கும். நேரக் கணிப்பாளர் ஒவ்வொரு நிமிஷத்துக்கும் நேரத்தை அறிவித்துக் கொண்டிருப்பார். ஒரு ரவுண்ட் முடிவில் நேரக் கணிப்பாளர் மணியை அடிப்பார். உடனே ரிபரி விசிலை ஊதிப் போட்டியை 'முடிவு'க்குக் கொண்டு வருவார். மணியடிப்பதற்கும் விசில் அடிப்பதற்குமுள்ள இடைவேளையில் மல்யுத்த வீரர்களின் சாதனையைக் கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டார்கள்.

மல்யுத்த வீரர் வீழ்ச்சியை இரு தோள் பட்டைகளும் பாயில் தொட்டுக் கொண்டு மூன்று எண்ணிக்கை எண்ணும் வரை இருந்தால் கணிக்கப்படும். மல்யுத்த வீரரின் வீழ்ச்சியை

ரெபரி விசில் ஊதி, பாயில் ரெபரி கையினால் தட்டித் தெரிவிப்பார்.

மல்யுத்தப் போட்டிகளில் லைட் வெயிட், ப்ளைவெயிட், பாண்டம் வெயிட், பெதர்வெயிட், லைட் வெயிட் வெல்டர் வெயிட், மிடில் வெயிட், லைட்ஹெவி வெயிட், ஹெவி வெயிட், 100 கே.ஜி. மேல் அதிக வெயிட் என்று பிரிக்கப் பட்டுள்ளன.

'தப்பாட்டம்' என்று ரெபரி குறிப்பிடுவது:

1. எதிரியின் பாதத்தினை மிதித்துக் கொண்டு இருப்பது, 2. முகத்தில் வாய், கண் இமைகளைத் தொடுவது, 3. குரல்வளையைப் பிடிப்பது, 4. கை முட்டியிலோ, கால் முட்டியிலோ, வயிற்றிலோ, வயிற்றுப் பகுதியிலோ தாக்குவது, 5. பாய் முனையினைப் பற்றிக் கொள்வது, 6. பின்புறத் தாக்குதல் செய்வது. தலைமயிரைப் பற்றி இழுப்பது, காது, உயிர்ப்பகுதிகளைத் தாக்குவது கூடாது. கால்களையோ கைகளையோ முறிப்பது தகாத காரியம். கைகளை 90 டிகிரிக்கு மேல் வளைப்பது கூடாது. மல்யுத்தப் போட்டியின் போது எதிரியோடு உரையாடுதல் கூடாது.

'மாரத வீரர் மலிந்த நாடு' என்று பாரதியார் போற்றினார். மகாபாரதக் கதைகளில் பீமனின் சாகசங்கள் நமக்குத் தெரியும்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட மல்யுத்த வீரர்களில் சத்பால்சிங் 1974, 1979, 1982 காமன்வெல்த் போட்டிகளில் வென்றவர். 1979 ஆசிய மல்யுத்தப்போட்டியில் சத்பால் சிங் கலந்து கொண்டிருக்கிறார். இவருக்கு இந்திய சர்க்கார் அர்ஜுன விருது வழங்கிக் கௌரவித்திருக்கிறது. 1980 மாஸ்கோ ஒலிம்பிக்கிலும் சத்பால்சிங் கலந்து கொண்டது தனிச்சிறப்பு. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 100 கே. ஜி. மல்யுத்தப் போட்டிகளில் சத்பால்சிங் கலந்து கொண்டார். ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் மல்யுத்தம் காணத் திரளாக மக்கள் கூடினர்.



சீருடையிலும் வேறுபாடா?

பள்ளிகளில் பயிலும் மாணவர்களில் ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு தெரியக் கூடாது என்பதற்காகத்தானே சீருடை அணியச் சொன்னார்கள்?

சில வசதி படைத்தவர்களின் வீட்டுப் பிள்ளைகள் டெரிலின், பாலியஸ்டர் துணிகளில் சீருடை அணிந்து வேறுபாடு காட்டுகிறார்களே!

—திருவொற்றியூர் வெள்ளையன் செட்டியார் பள்ளியில் நடந்த பேச்சுப்போட்டியில் ஒரு மாணவன்.

பிருந்தாவனம்



ஒரு நாள் பதவி

புதுடில்லியில் உள்ள Springdales பள்ளியில் வருடா வருடம் செப்டம்பர் 5—ஆம் தேதியில் (ஆசிரியர் தினம்) ஆசிரியர்கள் சுற்றுலா செல்வார்கள். அன்று, மாணவர், மாணவியர் பள்ளிப் பொறுப்பை ஏற்று நடத்துவார்கள்.

ஒருவரைத் தலைமை ஆசிரியராகவும், மற்றும் சிலரை ஆசிரியர்களாகவும் தேர்ந்தெடுப்பார்கள். இம்மாதிரியான பொறுப்புக்களை மேல் வகுப்பு மாணவர், மாணவியரே ஏற்றுக்கொள்கிறார்கள்.

—எஸ். ராஜா, புதுடில்லி—64

எதிர் வீட்டு மன்னாரு

எதிர் வீட்டு மன்னாரு
எலி பிடிக்கப் போனாரு.
தடியால் ஓங்கி அடிச்சாரு.
தண்ணீர்ப் பானையை உடைச்சாரு.

குரங்கைப் போலக் குதிச்சாரு.
குடுமியை எடுத்து முடிஞ்சாரு.
குட்டிக் கரணம் போட்டாரு.
குப்புற விழுந்து எழுந்தாரு.

எழுந்ததும் தலையைத் தொட்டாரு.
இரத்தம் வழியக் கண்டாரு!
மருத்துவ மனைக்குப் போனாரு.
மண்டையில் கட்டுடன் வந்தாரு!

—ஆர். சத்தியநாராயணன் (201), சென்னை—86.




கண்ணாடியை உடைத்தவன்

மனைவி: ஏங்க, பையனை இப்படிப் போட்டு அடிக்கிறீங்க?

கணவன்: என் மூக்குக் கண்ணாடியை உடைச்சிட்டானே?

மனைவி: ஐயோ, இவன் நம்ம பையன் இல்லீங்க. பக்கத்து வீட்டுப் பையன் பரமகுரு!

—தி. கருப்பசாமி (45), ஸ்ரீவில்லிப்புத்தூர்.




யாரால் முடியும்?

தேவை: நீர் நிரம்பிய ஒரு பாத்திரம், ஒரு கண்ணாடி டம்ளர், ஒரு கார்க் (தக்கை).

நீரில் கார்க்கைப் போடுங்கள். அது மிதக்கும். கார்க்கைக் கையால் தொடாமல் மூழ்க வைக்க முடியுமா என்று நண்பர்களிடம் கேளுங்கள்.

கார்க்கின் மேல் ஒரு கண்ணாடி டம்ளரைக் கவிழுங்கள். டம்ளரின் விளிம்பு பாத்திரத்தின் அடியில் படும் படியாகச் செய்ய வேண்டும். இப்போது, மிதந்து கொண்டிருந்த கார்க் தானாகவே மூழ்கிவிடும்!

வி. ரமேஷ் (2586), சென்னை—18.




அதிகத் தலைமுடி

எங்கள் பள்ளியான மதுரை சௌராஷ்டிரா செகண்டரிப் பள்ளியில் தலைமுடி அதிகமாக வளர்த்தால், மாணவர்களுக்குத் தண்டனை கொடுக்கிறார்கள். வெய்யில் அதிகமுள்ள நாட்டிலே, தலை வியர்த்து, அதனால் சுகாதாரக் கேடு ஏற்படுகிறதல்லவா? மற்றப் பள்ளி மாணவர்களும் தலைமுடி அதிகம் வளர்க்காமல் தடுப்பது நல்லதல்லவா?

—சி.எல். சரவணன் (706), மதுரை-1





மிக நீளமான பெயர்

'ஜெஸ்டம் ஜம்பல் கவாங் லாப்சாங் யிஷி டென்ஸிங் கியாட்ஸோ சிகன் வங்சூர் ஷும்பா கெட்சன்மபால் தேபல் சாங்கோ".

இது ஏதோ ஒரு மந்திரம் என்று நினைக்காதீர்கள். ஒருவரின் பெயர் தான்! இந்த நீண்ட பெயர் கொண்டவர் யார் தெரியுமா? நம் நாட்டில் சில காலம் தங்கியிருந்தாரே தலாய் லாமா அவர்தான்!

—ஜி. ரத்தினமணி எப்ஸிபாய் (1212) அருப்புக்கோட்டை.

தோசையும், ஆசையும்

மிகவும் ஏழையான ஒரு கிழவரும், அவர் மனைவியும் தோசை சுட்டுத் தின்ன வேண்டும் என்று வெகுநாளாக ஆசைப்பட்டார்கள். ஒருநாள், கிழவர் மிகுந்த சிரமப்பட்டுக் கொஞ்சம் அரிசியும் உளுந்தும் வாங்கி வந்தார். கிழவி தோசை சுட்டாள். மொத்தம் மூன்று தோசைகளே கிடைத்தன.

கிழவர் 2 தோசை கேட்டார். கிழவியும் 2 தோசை கேட்டாள். தகராறு முற்றியது. கடைசியில் இருவரும் கண்களை மூடிக் கொள்வதென்றும், யார் முதலில் கண் விழிக்கிறார்களோ அவர்களுக்கு ஒரு தோசை, மற்றவருக்கு இரண்டு தோசை என்றும் முடிவு செய்தார்கள்.

இருவரும் கண்களை மூடிக் கொண்டார்கள். வெகு நேரம் ஆனது.

ஏதோ சப்தம் கேட்டு இருவரும் கண் விழித்தார்கள். திறந்து கிடந்த அவர்களின் வீட்டுக்குள் ஒரு நாய் புகுந்து தோசைகள் இருந்த பாத்திரத்தை அப்படியே கவ்விக் கொண்டு வெகுவேகமாக ஓடுவதைக் கண்டு திடுக்கிட்டார்கள்!

—ஆர். சிவகாமி (3084) தென்னூர்.



திருக்குறள் 1600!

ஓர் அரசியல் தலைவர் ஒரு பள்ளியின் 'திருக்குறள் விழா'வில் பேசினார்: "திங்கள் மூன்றாம் வகுப்பில் 50 திருக்குறள், நான்காம் வகுப்பில் 100 திருக்குறள், ஐந்தாம் வகுப்பில் 200, ஆறாம் வகுப்பில் 400, ஏழாம் வகுப்பில் 800, ஒன்பதாம் வகுப்பில் 1600 திருக்குறளையும் மனப்பாடம் செய்து விட வேண்டும்" என்றாரே பார்க்கலாம்; சபையில் குபீர் எனச் சிரிப்பு ஒலி எழுந்தது!

மொத்தக் குறளே 1330 தானே!

—கண்ணன் (3629) பொன் விளைந்த களத்தூர்.





குறளும், ஏழும்

திருக்குறளை இயற்றியவர் —திருவள்ளுவர்

திருவள்ளுவரின் மனைவி பெயர் —வாசுகியம்மாள்

உரை எழுதியவர் — பரிமேலழகர்

மற்றொரு உரையாசிரியர் —மணக்குடவர்

(ஒவ்வொரு பெயரிலும் எழுத்துக்கள் ஏழு.)

குறளில் உள்ள சீர்கள் — ஏழு.

மொத்தக் குறள்கள் — 1330

1+3+3+0=7

மொத்த அதிகாரம் — 133

1+3+3 + 7.


ஆதலால், வாரத்தின் ஏழு நாட்களுக்கும் வழிகாட்டியாக விளங்கும் திருக்குறளைப் படித்துப் பயன் பெறுவோமாக!

—ந. கனகசபாபதி (294), பெருந்துறை

விநாயகர் பெயர் வரவேண்டும்


நோயின் மறுபெயர்,
கொண்டவனின் பெயர்
ஒரு நதியின் பெயர்
உடலின் மறுபெயர்
ஒரு மரத்தின் பெயர்.


இந்த ஐந்து பெயர்களின் நடு எழுத்துக்களை ஒன்று சேர்த்தால், விநாயகர் பெயர் வர வேண்டும்.



[illegible]

—த. அருண் சிவபாலன் (47), செங்கற்பட்டு.







பார்த்துச் சிரிப்பதேன்?

அசுத்தமான இடத்தையெல்லாம்
சுத்தம் செய்கிறேன்;
பசித்த நேரம் கிழங்குகளை
ருசித்து உண்கிறேன்.

ஏ.சி. எனக்குச் சாக்கடைதான்!
எங்கும் உள்ளதே!
ஓசியாகப் புரளும் வசதி
உரிமை யானதே!

ஆசை எனக்கு அதிகமுண்டு,
குழந்தை பெற்றிட,
தேசத் திலே எங்கள்கூட்டம்
கொஞ்சமில்லையே!

நன்றி யுடனே உழைத்துக்காசு
சேர்த்துத் தருகிறேன்.
பன்றி என்றே ஏளனமாய்ப்
பார்த்துச் சிரிக்கிறீர்!

—ஜி. ஏகலைவன் (937), சிறுபனையூர்.

ஊர்ப் பெயர்களில் மிருகங்கள், பறவைகள்

எருமைநாயக்கன்பட்டி
புலிவலம்
சிங்கம்புணரி
நாகப்பட்டினம்
கரிவலம் வந்த நல்லூர்
கழுகுமலை
பன்றிமலை
நரசிங்கபுரம்
நரிக்குடி
மயிலாடுதுறை
கோழிக்கோடு
அன்னவாசல்
குருவிக்கொண்டான்பட்டி

—ஆர். சிதம்பரம் (2565) திருச்சி-17

கேள்வி இரண்டு, பதில் ஒன்று

1. நல்ல பாம்பு தலை தூக்குவதேன்?
நாம் 'காமிரா' முன் நிற்பதேன்?
2. சாம்பார் மணப்பதேன்?
படைவீரர் இறப்பதேன்?
3. பையன் அழுவதேன்?
பந்து எழும்புவதேன்?
4. காடு குறைவதேன்?
கால்வாய் நீள்வதேன்?

விடைகள்: 1) படம் எடுக்க, 2) பெருங்காயத்தால், 3) அடிப்பதால் 4) வெட்டுவதால்.

—நா. இராமசுப்பிரமணியன் (3466), சென்னை-44.



வேடிக்கைப் புதுமொழிகள்

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன்பிள்ளை கொடைக்கானல் வளர்க்கும்.
கந்தையானாலும் கசக்கிக் கட்டு;
புதுத்துணியானால்இஸ்திரிபோட்டுக்கட்டு
கூழானாலும் குளித்துக்குடி;
காபியானால் குளிக்காமலே குடி.
ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது;
இன்ஸ்பெக்டர் சுரைக்காய் எதற்கும்
உதவாது.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
குடிக்கக் குடிக்கத் தேனும் கசக்கும்.

—கே. என். ஜீக்கிராணி (184), காளையார்கோவில்.



Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)
Editor: K. Rajendran



சுவாமி விவேகானந்தர்

பிறந்தநாள்: ஜனவரி 12

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka